Free Circulation Germany- England

மணி: 71 - ஓசை: 294 பங்குனி. March. 2021

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

27TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A






## இழக்கப்போகிறோமா ஈழத்தின் இன்னும் ஒரு நிலத்தை?

## எனக்கு பிடிக்கும் என்று உனக்கும் தெரிவது எப்படி?

Dr.IN



மகளிர் தின சிறப்பிதழ்
கௌரவ ஆசிரியர்
ஆனந்தராணி பாலேந்திரா

மகளிர் சிறப்பிதழில் பெண்கள்





# நினைக்கத் தெரிந்த மனமே!



● மாதவி

நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா. இந்தப் பாடல் மட்டும் நினைவு இருக்கு. இந்தப் பாடல் வந்த காலத்தில் வந்த காதலும் நினைவிருக்கு மிச்சம் மீதியெல்லாம் மறந்து போச்சு.

கலோ நான் மகள் கதைக்கிறேன் என்று தொடங்கும் காலம் போய்... யார் கதைத்கிறது தெரியுமோ ? என்று ஆரம்பிக்கும் காலம் வந்துவிட்டது.

தகப்பனும் விட்டு கொடுக்காமல் ஓமணை ஓமணை என்று கதைத்து முடித்து போனையும் வைத்துவிட்டு மனிசியிட்டை யார் என்னோடு கதைத்தது என்று விழிபிதுங்கும், தந்தை யாரும் இன்று உண்டு.

சரி 70 வயதைக் கடந்தவர் தான் அப்படி என்றால், இளசுகளுக்கும் மறதி மறதி தான்.

இரவு இரவாக நண்பருடன் நாளைக்கு பாங்கோக் கொலிடே போகக் கதைத்துவிட்டு, பாடசாலை நினைப்போடு பறக்க கீத்துறா விமான நிலையத்திற்கு 200 மைல் தாண்டி சென்று, அங்கு வழியனுப்ப வந்தவரையும் வழியனுப்பிப்போட்டு வந்த நண்பர்களையும் கட்டிப்பிடித்து மகிழ்ச்சியை பகிர்ந்துவிட்டு,போடிங் பாஸ் எடுக்க பாக்குக்குள் கைவிட்டால்

பாஸ்போர்ட்டை காணவில்லை.

அது 200 மைல்களுக்கப்பால் மறந்து போகாமல் எடுக்கவேண்டும் என்று மேசையில் எடுத்து வைத்தது அங்கேயே பத்திரமாய் இருக்குது.

சரி இனி மறதியை ஒரு கை பார்ப்போம் என்று மறதிக்கே சவால் விட்டு வீடுட்டில் இருந்து வேலைக்குப் போனால்!

இப்ப வீட்டுக்கதவைப் பூட்டினேனா என்று சந்தேகம் கதவைத்தட்டுகிறது. போனவன் 10 மைல் திரும்பி வந்து கதவை திறந்தது பார்த்தால் அது பூட்டித்தான் இருக்கு.

திரும்பி அப்பாடா என்று பெருமூச்சுடன் காருக்குள் ஏறவந்தால் கார்திறப்பைக் காணோம். இப்ப கார்த்திறப்பும் கதவுத் திறப்பும் கதவில் வெளியே தொங்குகிறது.

முக்கியமாக உப்பு இல்லை என்று கடைக்கு போனால் முதல் கண்ணில் படும் பொருள்களை எல்லாம் மேய்ந்துவிட்டு விலை குறைச்சு போட்டிருந்தால் தேவையோ இல்லையோ அள்ளிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தால் உப்பைக் காணோம். சரி இனிமேல் மறக்காமல் இருக்க நினைவு வரும்போது எல்லாம் எழுதிவைத்து விட்டு கடைக்குப் போனால் எழுதி வைத்த லிஸ்ட் வீட்டில் இருக்கும். அடுப்பில் வைத்த பால் பொங்குது. கறி கருகுது. அறைக்குள் போட்ட லைட் வேலைக்குச் சென்று திரும்பும் வரை எரியுது. இது என்ன மறதி நோய் என்று அம்மாவுக்கு போன் அடித்துக் கேட்டால் ....

அம்மா உன் அப்பா சுன்னாகம் சைக்கிளில் போட்டு திரும்பி வரேக்கை சைக்கிளில் போனதை மறந்து பஸ்ஸில் வந்திட்டார். நல்லவேளை சைக்கிளை தேத்தண்ணிக் கடைக்கு முன்னாலை விட்டதால் தொலையாமல் தப்பிச்சு என்றா.

மனைவி உங்களுக்கு யாரோ போன் எடுத்தவை உங்களை எடுக்கட்டாம் என்றா. யார் எடுத்தது என்று கேட்டால் பெயர் மறந்துபோச்சாம், மூன்று மாதமாகப் பதிலே இல்லை. சிலசமயம் எடுத்தவரும் மறந்திருப்பாரோ.

மறதி மறதி இளையவர் முதல் வயதானவர் வரை இன்றும் அன்றும் தொடர்கிறது.

சரி அப்போ மறதிக்கு என்னதான் மருந்து. படுக்கும் போது நேற்று என்ன என்ன செய்தேன் என்பதை ஞாபகப்படுத்தி பார்க்கவும். உங்கள் வேலையை நீங்கள்தான் செய்யவேண்டும் என்று திடமாக நம்புங்கள்.

28 ஆம் பக்கம் பார்க்க...










வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 294



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

மகளிர் தின சிறப்பு இதழ்
கௌரவ ஆசிரியர்
ஆனந்தராணி பாலேந்திரா

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# ஆனந்தராணி பாலேந்திரா

## அவர்களின் கலைச் சேவைக்கு வெற்றிமணி வழங்கும் கௌரவம்



மகளிர் தின சிறப்பிதழ் கௌரவ ஆசிரியர் ஆனந்தராணி பாலேந்திரா

இன்று சர்வதேசமகளிர்தினத்தை முன்னிட்டு, இங்கிலாந்தில் வசித்துவரும் தமிழ் மேடை நாடகத் துறையில் 45 வருடங்களாக இடைவிடாது தொடர்ந்து இயங்கி வரும் ஈழத்துப் பெண் கலைஞர், மேடை நாடக நடிகையாக மட்டுமல்லாது சினிமா, வானொலி நடிகையாக, பரத நாட்டிய ஆசிரியையாக, தொலைக் காட்சி, வானொலி, மேடை அறிவிப் பாளராக பல்வேறு துறைகளில் தடம் பதித்த ஆனந்தராணி பாலேந்திரா அவர்களை, வெற்றிமணி பத்திரிகையின் 2021 பங்குனி மாத மகளிர் சிறப்பிதழின் கௌரவ ஆசிரியராக கௌரவித்து மகிழ்கின்றது.

1975ல் மொறட்டுவ [கட்டுபெத்த] பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத் தயாரிப்பான 'பிச்சை வேண்டாம்' நாடக மூலம் பாலேந்திராவுடன் இணைந்து மேடை நாடகத்துறைக்கு அறிமுகமானார். அப்போது அவருக்கு வயது 19. 1976ஆம் ஆண்டு க.பாலேந்திரா நெறிப்படுத்திய 'மழை நாடகத்தில் இருந்து இன்றுவரை அவரின் நெறியாள்கையில் சுமார் 40க்கும் மேற்பட்ட நாடகங்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார். இவற்றுள் பல நாடகங்கள் பெண்களை மையமாகக் கொண்ட நாடகங்களாகும். நடிப்பதற்கு மிகவும் சிக்கலான சவாலான நாடகங்கள் இவை. தனது நடிப்பாற்றலால் இப்பாத்திரங்களுக்கு உயிர் ஊட்டி பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மனதில் இடம்பிடித்தார்.

லண்டனில் கடந்த 17 வருடங்களாக தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் சிறுவர்களுக்கான தமிழ் நாடகப் பள்ளியை கணவர் பாலேந்திராவுடன் இணைந்து இலண்டனில் நடத்தி வருகிறார். 1975ஆம் ஆண்டு க.பாலேந்திராவுடன் ஒன்றாக நாடகம் நடிக்க ஆரம்பித்து 1982இல் அவரது வாழ்க்கைத் துணைவியாக இணைந்து இன்றுவரை நாடகப் பணியைத் தொடர்கிறார். இவரது கலைச் சேவை மேலும் ஓங்கி ஒலித்திட வெற்றிமணி வாழ்த்துகின்றது.

# சர்வதேச அரங்கில் வல்லரசு நாடுகள் தமிழர்களை பகடைக்காய்களாகவே பயன்படுத்துகிறார்கள்!

**இந்திய ஆதரவை கோரும் இலங்கை ஜெனீவாவில் நெருக்கடி அதிகரிப்பு?**

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்படும் என்பது உறுதியாகியுள்ள நிலையில், இந்தியாவின் ஆதரவை இலங்கை அரசாங்கம் கேட்டிருக்கின்றது. இது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அவசர கடிதம் ஒன்று இலங்கை அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இப்போது தமது பேரங்களை முன்வைப்பதற்கு இந்தியாவுக்கு சந்தப்பம் கிடைத்திருக்கின்றது.

இலங்கை தொடர்பிலான முதன்மை நாடுகள் கடுமையான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப்போவது உறுதியாகியிருக்கும் நிலையிலேயே இந்தியாவின் ஆதரவைக் கோரும் முடிவை



இலங்கை அரசாங்கம் எடுத்திருக்கின்றது. ஜெனீவாவில் அழுத்தங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்திய ஆதரவைக் கோருவதைவிட இலங்கைக்கு மாற்றுத் தெரிவுகள் இருக்கவில்லை.

போர்க் குற்றங்களுக்கான அமெரிக்காவின் முன்னாள் விஷேட தூதுவர் ஸ்ரிபன் ராப் தெரிவித்துள்ள தகவல் ஒன்று இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஜெனீவாவுக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்த அனைத்துத் தரப்பினரும், இதனைத் தமது நலன்களுக்கு எப்படிப் பயன்படுத்தலாம் எனபதில் கவனத்தைக் குவித்துள்ளார்கள்.

இறுதிப்போர் முடிவுக்கு வந்த போது சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலரை சுட்டுக் கொன்றுவிட்டதாக அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த

06 ஆம் பக்கம் பார்க்க...



# சம்பவம் 07

கே.எஸ்.சுதாகர்
(மெல்போன்– அவுஸ்திரேலியா)



# எனக்கான வெளி

ஷொப்பிங் சென்ரரில், சண்முகத்தையும் தேவியையும் கடந்து ஒரு பையனும் பெண்ணும் விரைந்து போனார்கள். அன்றாடம் பழகிய பெண்ணின் முகம் போன்றிருந்தது தேவிக்கு.

‘‘உதிலை போறது வைஷ்ணவி தானே!’’ கணவனிடம் கேட்டாள் தேவி.

‘‘கொரோனா வந்து, மாஸ்க் போட வைத்து, மனிசரை மனிசரே அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் கிடக்கு’’ சலிப்படைந்தார் சண்முகம்.

அந்தப் பெண்ணும் இவர்களையே திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றாள். தேவியும் தன்னைப் பார்ப்பதைக் கண்டவுடன், நடையை நிறுத்தினாள். அந்தப் பையனிடம் ஏதோ சொல்லிவிட்டு, இவர்களை நோக்கி விரைவு நடையில் வந்தாள்.

‘‘அன்ரி...! என்ன ஷொப்பிங்குக்கு வெளிக்கிட்டியள் போல...’’ முகமனுடன் விசாரித்தாள் வைஷ்ணவி. முகத்தை மூடிய மறைப்பையும் தாண்டி இருவரையும் அடையாளம் காண வைத்த உறவு எது? சிறிது நேரம் உரையாடிவிட்டு, மான்குட்டி போல துள்ளிச்சென்று, அந்தப் பையனுடன் இணைந்து கொண்டாள் வைஷ்ணவி. அவனும் காத்திருந்தது போல, வைஷ்ணவியின் கையை இணைத்துக் கொண்டான். இருவரும் கைகளை ஊஞ்சல் போல ஆட்டி, வானவில் போல வில்லாக வளைத்தார்கள். தேவிக்கு அந்தக் காட்சியைப் பார்த்தவுடன் காலிலே தேள் கொட்டியது போன்றிருந்தது.

‘‘இவளும் ஒரு பெண்ணா? நிரஞ்சனையல்லவா திருமணம் செய்வாள் என நினைத்தேன்!’’ தேவி கவலை கொண்டாள்.

நிரஞ்சன், சண்முகம் தேவியின் அருமந்த புத்திரன். புலம்பெயர்ந்த காலம் தொட்டு அருகருகாகக் குடியிருக்கின்றார்கள். வைஷ்ணவியும் நிரஞ்சனும் சிறுவயது முதல், நகமும் சதையும் போல ஒன்றாக விளையாடித் திரிந்தவர்கள்.

‘‘நல்ல சோடிகள். வளந்தாப் போல கலியாணம் செய்யட்டும்’’ – இரண்டு குடும்பத்தினரும் தங்களுக்குள் மனதார எண்ணிக் கொண்டார்கள். அதற்கு அமைவாக வைஷ்ணவி, இவர்களை ஹஅன்ரி... அங்கிள்’’ என்று குழைவதும், நிரஞ்சன் அவளின் பெற்றோர்களுக்குப் பின்னால் வாலாட்டித் திரிவதுமாக இருப்பார்கள்.



நேற்றுக்கூட நிரஞ்சனும் வைஷ்ணவியும் இரவிரவாக மொபைல்போனில் கதைத்து சிரித்துக் கொண்டிருந்தார்களே! இப்ப வைஷ்ணவி இப்படி ஒருவனுடன் கை கோர்த்துக் கொண்டு நடப்பதென்றால்? ஒருவேளை நண்பனாக இருக்குமோ?

‘‘நிரஞ்சன்... உனக்கு வைஷ்ணவியைக் கலியாணம் பேசிச் செய்யலாமெண்டு யோசிக்கிறம்..’’. நிரஞ்சன் வேலையால் வந்ததும், தேவி தூண்டில் போட்டாள்.

‘‘வைஷ்ணவிக்கு போய்ஃபிரண்ட் இருக்கே அம்மா...’’ நிரஞ்சன் பிடி குடுக்காமல் வெள்ளந்தியாகச் சிரித்தான். தேவிக்கு அவன் கவலையாக இருப்பது போல் தோன்றியது. வைஷ்ணவி அவனை ஏமாற்றிவிட்டதாகவே நினைத்தாள்.

‘‘என்ரை மகனிலை என்ன குறை? அவனைவிடக் கொஞ்சம் படிச்சிட்டாய் எண்ட திமிரோ? அடிக்கடி வீட்டுக்கு வாறவள் தானே! வரட்டும் இக்கணம்... கேக்கிறன்’’ மனதினுள் கறுவிக் கொண்டாள் தேவி. சொல்லி வைத்தாற்போல் அன்றிரவு ஏதோ ஒரு சாப்பாட்டுடன் நிரஞ்சனின் வீட்டிற்கு வந்தாள் வைஷ்ணவி.

‘‘அம்மா தந்துவிட்டவா...’’ வாசலில் நின்ற சண்முகத்திடம் நீட்டினாள்.

‘‘பிள்ளை... அன்ரி குசினிக்கை நிக்கிறா. அவவிட்டைக் குடும் என்றார்’’ சண்முகம். குசினிக்குள் தனியாக நின்றார் தேவி. தருணம் அறிந்து, ‘‘ஏன் பிள்ளை, உமக்கு நிரஞ்சனைப் பிடிக்கேல்லை?’’ பட்டெனவே கேட்டார். வைஷ்ணவி இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை

‘‘அன்ரி.... நான் வெட்கத்தை விட்டுச் சொல்லுறன். எனக்கு நிரஞ்சனை நல்லாவே பிடிக்கும். நான் என்னுடைய காதலை நிரஞ்சனுக்குச் சொன்னபோது, அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். என்னைத் தன் தங்கை போல என்று சொல்கின்றார்’’ மூக்கை உறுஞ்சியபடி, கொண்டுவந்ததைக் குசினித்தட்டில் வைத்துவிட்டு தேவியை நிமிர்ந்து பார்த்தாள் வைஷ்ணவி. தேவி இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை.

‘‘அதுக்காக அன்ரி... உலகம் இடிஞ்சு என்ரை தலைமேலை விழுந்திட்டமாதிரி இருக்கமாட்டன்’’ சொல்லிவிட்டு விறுவிறெண்டு வெளியேறினாள் வைஷ்ணவி. ■

# சின்ன விடயம் தான்



## கட்டுப்பாடு

வடைக்கு அரைத்தேன்
கொஞ்சம் தண்ணீர் கூடிவிட்டது
தலையில் அடித்துக் கொண்டனர்
சுற்றி இருந்தோர்
கொஞ்சம் மா கலந்து வடை சுட்டேன்
வடைக்குள் மாவா? கூடியது கோபம்
சுட்ட வடையும் சூட்டுடனேயே
முடிந்தும் விட்டது
எனினும் கோபம் அப்படியே
இங்கு மாவல்ல பிரச்சினை
வழமையை மாற்றியதே!

................................

## நோக்கம்

நீ எப்போதும் மேலே
ஏறிக்கொண்டு இருப்பது
பெரிதல்ல...
பெருமை கொள்
நீ கீழே இறங்குவதும்
ஒருவரை மேலே
உயர்த்துவதற்காயின்!

................................

## சின்ன விடயம் தான்

சின்ன விடயம் தான்
பெரிதாய் ஒன்றுமில்லை
பூந்தொட்டிக்கு தண்ணீர்
விட வேண்டும்
நாளைக்குப் பார்க்கலாம்
என்று விட்டுவிட்டேன்
நாளையும் வந்தது
மீண்டும் ...
சின்ன விடயம் தான்!

தமிழினி பாலசுந்தரி (நியூஸ்லாந்து)





# காத்திருப்பு

வாழ்க்கை என்பதே முதல் காத்திருப்பிற்கும் இறுதி காத்திருப்பிற்கும் இடையில் அனுபவிக்கும் காத்திருப்புக்களின் தொகுப்பு தான்.

பிறப்பு என்ற முதற் காத்திருப்பிற்கும், இறப்பு என்ற இறுதி காத்திருப்பிற்கும் இடையில் நிகழும் எத்தனையோ வித விதமான காத்திருப்புக்களின் சேர்க்கை தான் வாழ்க்கை.

‘எப்ப பிள்ளை பிறக்கும்’ என்ற பெற்றோரின் காத்திருப்பில் தான் வாழ்க்கையே தொடங்குகிறது. பிறகென்ன, எல்லாவற்றிற்கும் காத்திருப்பு தான் வாழ்க்கையை இயக்கும் இயங்கு சக்தியாகி விடுகிறது.

பிறந்த பிள்ளையை நல்ல பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப விண்ணப்பித்து விட்டு காத்திருக்க வேண்டும். பள்ளிக்குப் போகும் பிள்ளையை, படிக்கவும் விளையாடவும் கொண்டு போய் வரவும், ஏற்றி இறக்கவும் காத்திருக்க வேண்டும். பரீட்சை எழுதி விட்டு அதன் பெறுபேறுகள் வரும் வரையும் காத்திருக்கத் தான் வேண்டும்.

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து இருக்கும் காத்திருப்பை விட, படித்து முடித்து வேலை கிடைக்கும் வரும் இருக்கும் காத்திருப்பு, ஒப்பிட்டளவில் கடினமானது.

வேலை கிடைத்ததும் தான் எத்தனை காத்திருப்புக்கள்? வருடாந்த சம்பள உயர்விற்கு காத்திருப்பு, பதவி உயர்விற்கு காத்திருப்பு, எங்கட வேலையை தொடங்க மற்றவன் தன்னுடைய வேலையை முடித்து தரும் வரை காத்திருப்பு, கூட்டங்களிற்கு போனால் பிந்தியே வாறவின்னிற்காக காத்திருப்பு, வேலைக்கு போய் வர ரயிலிலோ, பஸ்ஸிலோ, **traffic** லோ காத்திருப்பு, காத்திருப்பு காத்திருப்பு காத்திருப்புத் தான்.

காளைப் பருவத்தில் காதல் வந்தால் காதலியிற்காக காத்திருத்தலின் வேதனையும் தானாகவே வந்து தொலைத்து விடும். காதலனை காக்க வைப்பதில் காதலிகளிற்கு அப்படியென்ன பேரின்பமோ தெரியவில்லை. காத்திருத்தலின் வலி ஆண்களிற்கு ஆண்டவன் இட்ட சாபமாகத் தான் தெரிகிறது.



**ஜூட் பிரகாஷ்**
(மெல்போன்– அவுஸ்திரேலியா)

நினைத்தாலே இனிக்கும் திரைப்படத்தில் சிங்கப்பூர் **Jurong Bird Park** ல் ஜெயப்பிரதாவிற்காக கமல்ஹாசன் மணித்தியாலக் கணக்கில் காத்திருக்கும் பாடல், இந்தக் காதல் காத்திருப்பை அழகாக காட்சிப் படுத்தும்

**“What a dating what a waiting**
**Lovely birds tell my darling**
**You were watching you were watching**
**Love is but a game of waiting”**

கலியாண வாழ்க்கையிலும் கனவான்களை [**gentleman**] காக்க வைப்பதில் காரிகைகளிற்கு [**ladies**] ஆனந்தம் இருக்குமாப் போலத் தான் படுகிறது.

அறியாப் பருவத்தில் மனதிலும் எண்ணத்திலும் ஆழமாக விதைந்த தமிழீழம் என்ற தனிநாட்டிற்கான காத்திருப்பும் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கனவை விதைத்து, கனவை நனவாக்க, களமாடியவர்கள் காவியமாகி விட்டார்கள், எங்களால் தான் ஏனோ அந்தத் தனிநாட்டிற்கான காத்திருப்பைக் இன்றும் கைவிட முடியவில்லை.

எல்லா விதமான காத்திருப்புக்களையும் தூக்கிச் சாப்பிடுற மாதிரி, கொரனா காலக் காத்திருப்பு வந்து சேர்ந்திருக்கிறது. கொரனா காலத்தில் எப்போதும் எதுக்கோ காத்திருக்கிற மாதிரியே இருக்கிறது.

காலம்பற எழும்பினால் காலநிலை எதிர்வுகூறலை கவனிக்கும் காலம் மாறி, சுகாதாரத் திணைக்களம் அறிவிக்கப் போகும் புதிய கொரனா தொற்றாளர்களின் எண்ணிக்கைக்கு காத்திருக்க வேண்டியதாகி விட்டது.

லொக்டவுண் காலங்களில் லொக்டவுண் எப்ப முடியும் என்ற காத்திருப்பு தான் காத்திருப்புக்களிலேயே கொடிய காத்திருப்பு.

காலம்பற புலர்ந்தால் இரவிற்கு காத்திருப்பதும், இரவு மலர்ந்தால் நித்திரைக்கு காத்திருப்பதும், படுத்தாலும் நித்திரை வராமால் கண்ணுறக்கத்திற்கு காத்திருப்பதும், அயர்ந்து தூங்கும் எங்களுக்காக அலார்ம் மணி காத்திருப்பதும், லொக்டவுண் காலக் காத்திருப்பின் வலிமிகு விழுமியங்கள்.

லொக்டவுணாக்கால வெளில வந்தாலும், எப்ப திரும்ப லொக்டவுணை போடுவாங்கள் என்ற காத்திருப்போடே வாழ வேண்டியதாகிவிட்டது. அரசாங்கம் **hot spots** அறிவித்ததும், ஓடிப் போய் மணிக்கணக்கில் காருக்குள் காத்திருந்து **COVID test** எடுப்பதற்கு காத்திருக்க வேண்டும். **Test** எடுத்தும் **results** வர ஒரு நாளாவது வீட்டுக்குள் முடங்கி காத்திருக்க வேண்டும்.

இப்படி எல்லாமே காத்திருப்பின் காத்திருப்புக்கள் ஆகி விட்ட கொடிய கண்டறியாத கொரனா காலத்தின் குறியீடே காத்திருப்புத் தான்.

இந்தக் கொடிய காத்திருப்பு முடிந்து, இனிய காத்திருப்புக்களிற்கு வாழ்க்கை மீண்டும் திரும்பும் வரை, காத்திருக்க வேண்டியது தான். காத்திருப்புத் தானே வாழ்க்கை!



Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171 | Mob:No:0179 1484 892 | e.mail:siva@hotmail.de

மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)

# பெருநினைவின் சிறு துளிகள்

## திருமதி சிவா தியாகராஜா

சிவப்பிரியன்
( யேர்மனி )

பல இடிதாங்கிய மடி ஒன்று நாம் கடந்துவந்த காலத்தை படிப்பதற்கும் அவற்றை எதிர்கால சந்ததியினர் அறிவதற்குமான ஒரு சிறந்த படைப்பே பெருநினைவின் சிறு துளிகள் எனும் இந்நூல்.

இந்த நூலை ஆக்கியவர், திருமதி.சிவா தியாகராஜா [23.04.1934] ஈழத்தில் பருத்தித்துறை, புலோலி மேற்கு, அத்தியடியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இவரது முழுப்பெயர் சிவகாமசுந்தரி. இவரை சிவா,சுந்தரி,மொறிஸ் அம்மா என்றெல்லாம் அழைப்பார்கள். 1998 இலிருந்து யேர்மனியில் வாழ்ந்துவரும் இவர் 1999 இலிருந்து தமிழாலய ஆசிரியராகப் பணியாற்றி புலத்திலும் தமிழ் வளர அருந்தொண்டு புரிந்தவர். தேசப்பற்று மிகுந்த இவர் தனது எட்டுப்பிள்ளைகளில் மூவரை [பிறேமராஜன் [தீட்சண்யன்] பரதராஜன் [மொறிஸ்] பாலசபாபதி [மயூரன்] ஈழவிடுதலைப்போருக்கு ஈந்தவர்.


விடுதலைப் போர்மூண்ட காலத்தில் தன் பிள்ளைகளை மட்டுமன்றி களத்தில் நின்ற பிள்ளைகளையும் தனது பிள்ளைகளாகக் கண்டவர். இந்நூலை வாசிக்கும் போது அன்றைய போர்க்கால சூழல் நம் கண்முன்னே விரியும்.

இதில் அவரது எழுத்தும் நடந்த கதைகளைச் சொல்லும் விதமும் யுத்தகாலத்தை நேரில் அனுபவித்தவர்கள் மட்டுமன்றி அறியாதவர்களும் நேரில் காண்பது போன்று விபரித்து உள்ளார்.



தனது மகன் மாவீரனானபோது இராணுவ முகாமுக்கு அவன் வித்துடலை பெறச் சென்ற காட்சியின் சிறுதுளியை இங்கு பகிருகின்றேன்.

'எனக்கு என் பிள்ளையின் வித்துடல் வேண்டும்' நான் மந்திகை இராணுவ முகாம் நோக்கிச் செல்வதற்குத் தயாரானேன். இராணுவம் நிச்சயம் என்னை ஏதாவது செய்துவிடும் என்று எல்லோரும் அச்சப்பட்டார்கள். நான் எல்லோரையும் அமைதிப்படுத்திவிட்டு இராணுவ முகாம் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.




இராணுவ சென்றிப் பொயின்ருகளிலிருந்து துப்பாக்கி முனைகள் என் பக்கம் திரும்புவது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அடுத்து வரும் நிமிடங்களில் எதுவும் நடக்கலாமென்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். ஆனாலும் என்னைத் தைரியமாக இயங்க வைக்கும் ஏதோ ஒரு சக்தி அப்போது என்னை ஆட்கொண்டிருந்தது. எதற்கும் முகம் கொடுக்கத் தயாராகவே நான் முகாம் நோக்கி நடந்து கொண்டிருந்தேன். அரைவாசித் தூரம் நடந்து கொண்டிருக்கும் போதே இராணுவக் கொமாண்டர்கள் முகாம் வாசலுக்கு வந்து என் வருகையைப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டேன். வாசலை அண்மித்ததும் 'நான் மொறிஸின் அம்மா' என்றேன்.

நாம் வாழும் காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு வீரத்தாயின் வரலாறு. அதுமட்டுமின்றி பிள்ளைகளின் விடுதலை வேட்கையை காட்ட ஒரு குறிப்பு இதோ.

'நான் போர் முனையில் குருதி வெள்ளத்தில் நிற்கிறேன். மீண்டும் நிச்சயமாகத் திரும்பி வருவேன். ஆனால் உங்கள் கனவுகளிலும் நினைவுகளிலும் மட்டுமே' – கப்டன் மொறிஸ் [பரதன்] இது அவன் சொன்ன வரிகள். அந்த வரிகளை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன் அவை வெறும் வரிகள் அல்ல. அது அவனது மனதினுள் இருந்த உண்மையான எதிர்வு கூறல், அவன் அதனைக் கூறும்போது சிரித்த முகத்துடனே தான் கூறுவான்.அதனால் அதன் கனத்தை அப்போது என்னால் உணர முடியவில்லை. இப்போது எல்லாவற்றையும் யோசித்துப் பாரக்கிறேன். என்கிறார் இந்நூல் ஆசிரியர்.

இந்நூலில் ஒவ்வோரு சம்பவம் விரியும் போதும் ரோஜாப்பூச்சம்பலும் இடியப்பமும், மூலவருத்தத்திற்கு கத்தாழைச் சாறு இப்படி நம் மண்ணின் பாரம்பரிய மருத்துவம் மற்றும் உணவு வகைகள் என்று பல பயனுள்ள தகவல்களும் கிடைக்கின்றன. இப்படியான தகவல்களை அவரது பெத்தப்பாவும் பெத்தம்மாவும் என்ற அத்தியாயத்தில் அறியலாம்.

வயது போய்விட்டது இனி நமக்கு என்ன, என்று இருந்துவிட்டுபோவோம், என எண்ணும் சராசரி மனிதரை விட எங்கள் அன்னை உச்சத்தில் இருப்பது கண்டு அவரை வெற்றி மணி வாழ்த்தி மகிழ்கின்றது. இப்படி ஒரு அரிய நூலை வெளியிட்ட மன ஓசை நிறுவனத்திற்கும், அன்னையின் படத்தை அட்டைப்படத்தில் அற்புதமாக வரைந்த ஓவியர் மூனா அவர்களுக்கும், வெற்றி மணியின் வாழ்த்துகள்.

**பி.குறிப்பு:** இந்நூலாசிரியர் வெற்றிமணியின் நீண்டநாள் வாசகி. அவர் இச்செய்தியையும், தன்கரத்தில் தாங்கி வாசிக்கும் வேளை தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி. என்ற வாசகம் அவர் உள்ளத்திலும் ஒலிக்கும் பேறு பெறும்.

---

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

– தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்ததாக தூதுவர் ஸ்ரிபன் ராப் இணைய வழி மூலமான கலந்துரையாடல் ஒன்றில் குறிப்பிட்டிருந்ததுதான் தற்போது சர்ச்சையை ஏற்டுத்தியிருக்கின்றது. இலங்கை அரசாங்கம் சர்வதேச அரங்கில் எதிர்கொள்ளும் நெருக்கடியையும் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

போர் முடிவுக்கு வந்தபின்னர் கொழும்பு வந்த தூதுவர் ஸ்ரிபன் ராப் அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபயவைச் சந்தித்துப் பேசியிருக்கின்றார். இதன்போது சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் குறித்து கேள்வி எழுப்பியிருக்கின்றார். இதற்குப் பதிலளித்த கோட்டாபய, 'அவர்களை வைத்துப் பராமரிப்பதோ அவர்கள் மீது வழக்குத் தொடர்வதோ சாத்தியமற்றது. வழக்கு பல வருடங்களுக்கு இழுபடும். இறுதியில் அவர்கள் விடுதலையாகியும் விடலாம். அதனால் அவர்களைக் கொன்றுவிட்டேன்' எனப் பதிலளித்திருக்கின்றார்.

சம்பவம் நடைபெற்று சுமார் 12 வருடங்களின் பின்னர் தூதுவர் ஸ்ரிபன் ராப் இந்தத் தகவலை இப்போதுதான் வெளிப்படுத்தியிருக்கின்றார். தமது பதவியிலிருந்து அவர் ஓய்வுபெற்றும் ஏழு வருடங்கள் சென்றுவிட்டன. இவ்வளவு வருடங்களாக மௌனமாக இருந்த அவர் இப்போது இந்த உண்மையை வெளிப்படுத்துவதற்கு முற்பட்டமைக்கு காரணம் என்ன? இலங்கைத் தமிழர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி சர்வதேச அரங்கில் வல்லரசு நாடுகள் மேற்கொண்டு வரும் அரசியல் காய்நகர்த்தல்களை இந்தக் கேள்விக்கான பதில் அம்பலப்படுத்தும்.

உலகத் தமிழர் பேரவை, மனித உரிமைகள் மற்றும் உலகளாவிய நீதி மையம், நியூயோர்க் பல்கலைக் கழகம், அமைதி மற்றும் நீதிக்கான இலங்கை பிரச்சாரம் மற்றும் கனேடிய தமிழர் பேரவை ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய மெய்நிகர் கலந்துரையாடலில் பங்கேற்றபோதுதான் ஸ்ரிபன் ராப் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார். கடந்த வாரம் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. ஜெனீவாவை இலக்கு வைத்துத்தான் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது.

போரின்போது சரணடைந்த பின்னர், 'காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?' எனக் கேள்வி எழுப்பி வருடக்கணக்காக வீதிகளில் நின்று போராடிக்கொண்டிருக்கும் நிலையில், அவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க

27 ஆம் பக்கம் பார்க்க...





Dr.IN

# நாரிப்பிடிப்புகள் - பாரம் தூக்குவதனால் மட்டும்தானா வருகின்றன?

நாரிப்பிடிப்புகள் வருவது பாரம் தூக்குவதனால் மட்டும்தானா? பாரம் தூக்குவது மட்டுமல்ல உங்கள் நாளந்த செயற்பாடுகளும் நாரிப்பிடிப்புகளை கொண்டு வரலாம். நாரிப்பிடிப்பு பிரச்சனையால் பாதிக்கப்படாதவர்கள் இருக்கவே முடியாது. தமது வாழ்நாளில் என்றாவது ஒரு நாளாவது இதை அனுபவித்தே இருப்பார்கள். அந்தளவுக்கு மனிதர்களை அதிகம் பீடிக்கும் பிரசனையாக இருக்கிறது.

நாரிப்பிடிப்பு என்று நாம் பொதுவாகச் சொல்வது எமது பின்புறத்தின் கீழ் முள்ளெலும்புகள் உள்ள பகுதியில் ஏற்படும் வலியாகும். **Low back-pain** என ஆங்கிலத்தில் சொல்வார்கள். இதே போல பின்புறத்தின் மேல்



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

பகுதியிலும் வலி ஏற்படலாம். இதை **Upper backpain** என்பார்கள். பொதுவாக இது ஏற்பட்டதற்கு ஏதாவது ஒரு காரணத்தை பெரும்பாலானவர்கள் இனங்கண்டிருப்பார்கள். குனிந்து ஏதாவது பாரத்தை தூக்கும்போது ஏற்படலாம். பாரம் தூக்கமாமல் சாதாரணமாக குனிந்துவிட்டு நிமிரும்போதும் ஏற்படலாம். மாறாக மொபைல் போனை நீண்ட நேரம் தூக்கிப் பிடித்து பார்க்கும்போது அல்லது கணனியில் நீண்ட நேரம் வேலை செய்த பின்னர் மேல் முதுகில் தேர்ள்மூட்டுக்கு இடைப்பட்ட பகுதியில் வலி ஏற்படலாம்.

தானாகவே பெரும்பாலும் குணமாகியிருக்கும். கவனியாது விட்டுவிடுவோம். சிலவேளைகளில் மருத்துவரிடம் ஓடவேண்டியும் நேர்ந்திருக்கலாம். எப்படியாயினும் நாம் கவனத்தில் எடுத்தே ஆக வேண்டும். ஏனெனில் ஏதோ ஒருவிதத்தில் எமது முதுகுப் புறத்திற்கு அதிகளவு வேலைப்பளுவைக் கொடுகிறோம் என்பதற்கான சிகப்பு எச்சரிக்கடியாக அது இருக்கிறது. அத்தகைள வலி தொடரும் போது அல்லது மீண்டும் மீண்டும் வரும்போது தீவிர பாதிப்புகள் ஏற்படலாம்.

### பரம்பரை அம்சங்கள்

'இது எனக்கு எனது அம்மா தந்தது.' என்பார்கள் சிலர். தந்தையில் பழிபோடுவார்கள் வேறு சிலர். உண்மைதான் இத்தகைய பிடிப்புகளுக்கு பரம்பரை அம்சங்களும் காரணமாக இருக்கலாம். ஆனால் இப்போதெல்லாம் அவ்வாறு மட்டும் இல்லை.பரம்பரையாக வருவதற்கு அவர்களது உடல்தோற்ற அமைவு (**Posture**) காரணமாக இருக்கலாம். முள்ளந்தண்டு அமைப்பிலோ, இடுப்பு எலும்புகளிலோ கால்களிலோ உள்ள அசாதராண மாற்றங்கள் காரணமாகலாம். ஆனால் அத்தகைய தோற்ற அமைவு மாற்றங்கள் இல்லாத போதும் வலி ஏற்படலாம். மாறாக எத்தகைய அமைவு மாற்றங்கள் இருந்தபோதும் வலி பாதிப்பு ஏற்படாதிருப்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.




அதன் அர்த்தம் என்ன? முதுகு நாரி வலி ஏற்படுவதற்கான ஏது நிலையை பரம்பரை அம்சங்கள் கொண்டிருந்தாலும் சரியான தடுப்பு நடவடிக்கைகள் மூலம் பிரச்சனை ஏற்படாமல் நாம் தடுக்க முடியும் என்பதேயாகும். அதற்கு முதற்படியாக உங்கள் நாளாந்த நடவடிக்கைகளில் முதுகுப் புறத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய எத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகிறீர்கள் என்பதை இனம் காண வேண்டும்.

### திரும்ப திரும்ப செய்யப்படும் செயற்பாடுகள்

பாரம் தூக்கினால் அதுவும் முக்கியமாக தவறான முறையில் தூக்கினால் பிடிப்பு வரும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் மீண்டும் மீண்டும் செய்யும் ஒரேவிதமான சாதாரண செயற்பாடுகள் கூட முதுகுப் புறத்தின் தசைகளுக்கும் முள்ளந்தண்டுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தாலாம். அது நாளடைவில் சிதைவுகளை ஏற்படுத்தும் ஒரே விதமாகச் செய்யும் செயற்பாடுகள் அந்த உறுப்புகளுக்கான தசை வளர்ச்சிகளில் சமனற்ற தன்மையைக் கொண்டு வரும். இது நாளடைவில் தோற்ற அமைவில் மாறுபாடுகளை ஏற்படுத்தி வலியைக் கொண்டுவரும்.

தவறான உடல்நிலை வலியை ஏற்படுத்தும் என்றோம். உதாரணமாக நீங்கள் முன்நோக்கி சாய்ந்து (குனிந்து அல்ல) ஒரு பொருளை எடுக்கும்போது முள்ளந்தண்டின் பின்புறத்தில் விழவேண்டிய அழுத்தத்தை முள்ளந்தண்டின் முன்புறத்திற்கு கொடுக்கிறீர்கள். இது முள்ளந்தண்டுகளுக்கு இடையுள்ள இடைத்தட்டத்திற்கு கூடிய அழுத்தத்தைக் கொடுக்கும். நாளடைவில் இது இடைத்தட்டச் சிதைவுக்கு இட்டுச்செல்லும்.

உங்கள் தொழிலானது தினமும் பலதடைவைகள் முன்நோக்கி சாய்வதாக இருந்தால் அல்லது நீண்ட நேரம் நிற்பதாக இருந்தால் முதுகுவலி வரும் என்பதற்காக வேலையை விட்டுவிட வேண்டுமா?

நிச்சயமாக இல்லை. அதற்கு ஈடு செய்யுமுகமாக நீங்கள் செய்யும் வேலைக்கு எதிர்புறமான தசைப் பயிற்சிகளை எடுக்க வேண்டும். உதாரணமாக நீங்கள் அடிக்கடி முன்நோக்கி சாய வேண்டிய வேலையாக இருந்தால் அதற்கு மாற்றாக வயிற்று தசைகளுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும்.

28 ஆம் பக்கம் பார்க்க...



**கவிதா லட்சுமி**
**(நோர்வே)**

ஒரே நாளில் தொடர்ந்து இரண்டு மூன்று நூல்கள் படித்த காலம் என ஒன்றிருந்தது. இப்பொழுதெல்லாம் எதைப் படித்தாலும் ஈடுபாடின்றி பக்கங்களைப் புரட்டுவது வழமையாகிறது. சில பக்கங்களைத் தாண்டுவதற்குள் கண்கள் தானாகவே மூடிக் கொள்கின்றன.

இரண்டு நாள்களுக்கு முன்பு வாசிக்கத் தொடங்கிய ஒரு சிறுகதைத் தொகுப்பு எனக்கு மீண்டும் பழைய படி வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

இத்தொகுப்பிலுள்ள சில கதைகளைப் படித்து முடித்த நிலையில் அதிலுள்ள ஒரு கதையைப் பற்றி பகிர்ந்து கொள்ளத் தோன்றுகிறது.

கணவன் மனைவி என்ற இரு கதாபாத்திரங்களை மையமாகக் கொண்ட இந்தக் கதை ஆண்–பெண் நுண்ணுணர்வுகளைப் பற்றிப் பேசுகிறது.

கேணல் ஜோர்ஜ் பெரிகிரின் உயரமான திடகாத்திரமான, கம்பீரமான தோற்றமுடையவன். அவனது மனைவி எவி மெல்லிய உடல்வாகும், சாதாரண அழகும், அழகை மேம்படுத்திக் காட்டாத இயல்பான தன்மையும் பொறுமையும் மிக்கவள்.

விருந்தினர்களை உபசரிப்பதிலும் வீட்டை அழகுபடுத்தி நிர்வகிப்பதிலும் வல்லவள். அவர்களுக்கு குழந்தை இல்லை. அந்த வீட்டில் அவர்கள் இருவர் மட்டுமே வாழ்கின்றனர்.

அவர்கள் வாழும் அவ்வூரில் கேனல் எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு மனிதராக இருக்கிறார்.

## பிரமிடுகள் சிதையும் போது...

இந்நிலையில் கேணலின் மனைவி புனைப்பெயரில் ஒரு கவிதை நூல் வெளியிடுகிறாள். இந்தப் புள்ளியிலிருந்தே கதை தொடங்குகிறது.

எப்பொழுதும் தன் மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத கேனலுக்கு அவள் கவிதை எழுதி அதையும் புத்தகமாக வெளியிட்டிருக்கிறாள் என்பதே நகைப்புக்குரியதாக இருந்தது. மேலும் அப்படி என்ன பெரிதாக எழுதிக் கிழித்திருப்பாள் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது.

ஆனால் கேணலின் எண்ணத்திற்கு மாறாக எல்லோரும் எவியின் கவிதைப் புத்தகத்தை கொண்டாடத் தொடங்கி இருந்தனர். காதலின் நுண்ணுர்வுகளை இப்படி யாரும் பல காலங்களாய்ச் கவிதையில் சொல்லியதில்லை என அவள் கவிதைகளை வியந்தோதினர். இலக்கிய உலகமும் அவள் கவிதைகளையும் அவளையும் கொண்டாடிக் கொண்டது.




கேணலின் மனைவி என்று அறியப்பட்ட எவி இப்போது கவிஞர் எவி என்று மரியாதையாக அழைக்கப்பட்டாள். எல்லோரும் கேனலை இவர் தான் எவியின் கணவர் என்று சொல்லத் தொடங்கினர்.

கேணல் ஜோர்ஜ் பெரிக்ரினுக்கு தன் மனைவியின் செல்வாக்கு ஒரு வித ஒவ்வாமையையும் சினத்தையும் உண்டாக்குகிறது.

எப்படி இருந்தாலும் ஆணுக்கு அடங்கியவள் தான் பெண் என்னும் கருத்தில் அசைக்க முடியாத எண்ணமுடையவராகத் தான் கேணல் எவியை நடத்தி வந்தார். அதனாலேயே அவள் எழுதிய கவிதைப் புத்தகத்தைப் அதுவரை படிக்காமல் இருந்தார்.

அவளுடைய எதுவும் உதாசினத்தோடே பார்க்கப்பட்டு வந்த நிலையில் அவர் படிக்கப் போவதில்லை என்று தெரிந்து அவர் மேசையிலிருந்த நூலை அவளே அகற்றிவிட்டிருந்தாள்.

அதனால் ஆவல் கொண்ட கேணல், லண்டன் சென்றிருந்த போது தன் மனைவி எழுதி இருந்த கவிதைப் புத்தகத்தை தேடி வாங்கிப் படித்துப் பார்க்கிறார். முதலில் படித்த போது அவருக்கு எதுவும் புரியவில்லை. இதையா சிறந்த கவிதைகள் என்று கொண்டாடுகிறார்கள் என வியப்படைந்தார். அவர் அறிவுக்கு எட்டிய கவிதைகள் போல அல்லாமல் ஏதோ கிறுக்கல்கள் போல இருப்பதாக உணர்ந்தாலும் கவிதை வரிகள் ஒரே அளவில் இருப்பதைப் பார்த்து தனது பள்ளிப் பருவ கவிதை போல சற்று இருப்பதால் திருப்தி கொள்கிறார்.

ஆனாலும் ஏன் கொண்டாடுகிறார்கள் எனப் புரியாமல் மீண்டும் மீண்டும் படிக்கிறார்.

கேணலுடைய கருத்துக்களைப் போல் அல்லாமல் அவரைச் சுற்றி உள்ள மனிதர்களும், இலக்கிய விமர்சகர்களும் கவிதைத் தொகுதியின் கனதியைப் பற்றி பேசுகின்றனர். கவிதை பேசும் காதல் உணர்வுளில் ஆழ்ந்து காதலாகி கசிந்து போகின்றனர். இதையெல்லாம் பார்க்கும் போது கேணலுக்கு இது தன்னுடைய மனைவியின் காதலாக இருக்குமோ என்ற எண்ணம் மெல்லத் துளிர்விட்டு ஒரு பெரிய மனப்போராட்டத்தை அவருக்குள் ஏற்படுத்தி விடுகிறது.

ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் எத்தனை காதலிகளோடும் வாழலாம் என்ற எண்ணம் கொண்ட கேணலுக்கு தன் மனைவியையும் ஒருவன் காதலித்தான் என்பது கற்பனை செய்து பார்க்கக் கூட அவர் மனம் விரும்பவில்லை.

ஆண் என்றால் இப்படித்தான் கேளிக்கைகளை விரும்புபவனாகவும் நிறைய பெண்களோடு தொடர்புகள் வைத்திருப்பதற்கு நியமம் கற்பித்தாலும் தனது மனைவியை ஒருவன் காலித்திருக்கக் கூடும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதுவும் மிகச் சாதாரணமான அழகுள்ள, வசீகரமற்ற, எந்த ஒப்பனையும் செய்து தன்னை முன்னிலைப்படுத்தாத தனது மனைவியிடம் என்னதான் இருந்திருக்கக்கூடும் என்ற கேணலின் எண்ணம் கதையை ஆண் மனத்தின் சொல்ல முடியாத போராட்டத்தை ஆணாதிக்க மனோபாவத்தை ஆண் மனத்தின் இருண்ட பகுதியில் வெளிச்சம் பாய்ச்சுகிறது.

மேலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடியாத சூழலில் அன்றாட வாழ்வை நகர்த்தும் ஒரு அறிவார்ந்த பெண்ணின் நுண்ணுணர்வுகளையும் மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

கவிதைத் தொகுப்பில் காதலன் இறந்துவிடுகிறான். அவன் யாராக இருக்கக் கூடும் என்பதை கேணலைப்போலவே நமக்கும் ஆவல்மிகுகிறது. பிறருடைய நுண்ணுணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாத மனிதர்கள், தமது நுண்ணுணர்வுளைப் பகிர்ந்து கொள்ள முடியாத வாழ்க்கைக்குள் இருக்கும் மனிதர்கள் என அவரவர் பரிதாபங்களும் பாவப்பட்ட வாழ்தல்களுமாய் சில பக்கங்களில் பேசப்படும் 'The Colonel's Lady' என்னும் இச் சிறுகதை வில்லியம் சோமர்செட் மாமின் மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்று.

காப்புரிமை காரணமாக இணையத்தில் இவரது கதைகளைப் பெறுவது கடினம். நூலாக மட்டுமே வாங்கிப் படிக்க முடியும். எவியின் கவிதை நூலின் தலைப்பு: பிரமிடுகள் சிதையும் போதுName : William Somerset Maugham



# பெண் புலவர் பொன்முடியார்



## பாடல்கள் ஓர் பார்வை

பொலிகையூர் ரேகா
M.com.,M.Phil.,MBA.,M.Phil
(தாயகம்)

### முன்னுரை

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று கூறப்படுகின்ற சங்க காலத்தில் நிறைந்திருந்த தமிழ்ப் புலவர்களில் ஆண் புலவர்களிற்குச் சளைக்காத வண்ணம் பெண் புலவர்களும் ஆளுமை மிகுந்தவர்களாகக் காணப்பட்டனர்.

பொன்முடியார் இவர் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெண் புலவர் ஆவார். இவரது பாடல்கள் புறநானூற்றில் 299,310,312 எனும் பாடல்களாக உள்ளது. சங்க இலக்கியத்தில் உள்ள இந்த மூன்று பாடல்கள் தவிர புறத் திரட்டில் தகடூர் யாத்திரையிலும் இவரது மூன்று பாடல்கள் உள்ளது.

### பொன்முடியாரின் பாடல்களும் செய்திகளும்

### குதிரைகளின் வீரம்

‘‘பருத்தி வேலிச் சீறூர் மன்னன்’’ என்று தொடங்கும் பாடலில் குதிரைகளின் வீரத்தைப் பற்றிப் பாடுகின்றார் பொன்முடியார். சீறூர் மன்னனின் குதிரைகள் உளுந்துச் சக்கையை உணவாக உண்டு வளர்வதாயும், எதிரி நாடாகிய நண்ணடை மன்னனின் குதிரைகள் நெய் ஊற்றி மிதித்த சோற்றுருண்டைகளை உண்டு வளர்வதாயும் கூறுகின்றார்.ஆனாலும் அங்கு போரிடுவோரையும் மீறிக்கொண்டு சீறூர் மன்னனின் குதிரைகளே பாய்ந்து செல்வதாயும், நெய்ச்சோறுண்ட குதிரைகள் ஒதுங்கி நிற்பதாயும் கூறுகின்றார். இங்கு மன்னனின் குதிரைப் படையின் வீரம் கூறப்படுகின்றது.

### இன்ப வருத்தம்

புறநானூற்றில் இடம்பெறும் 312 வது பாடலில் இடம்பெறும் ‘‘பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்’’ எனும் பாடலின் மூலமாக ஒரு தாயானவள் அடைகின்ற வியப்பையும், கவலையையும், துன்பத்திலும் பேருவகை அடையும் பண்பையும் தும்பைத் திணையினூடாகக் கூறுகின்றார். பாலை உண்ண மறுத்தபோது முன்னர் மகனை மிரட்டியதற்காக வருந்தும் அவள் இப்போது அவன் அம்பு பட்டு வீழ்ந்தருப்பதைக் கண்டு அவன் வீரத்தை மெச்சி இன்பத்துயர் அடைவதை விளக்குகின்றார்.

### சமூகக் கட்டமைப்பு

புறநானூற்றின் 312 வது பாடலின் மூலம் சமூகக் கட்டமைப்பினைப் புலவர் வெளிப்படுத்துகின்றார்.‘‘ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே’’ என்று தொடங்கும் பாடலில் சமூகக் கட்டமைப்பையும் அச் சமூகத்தில் உள்ளவர்கள் கடமையையும் விளக்குகின்றார்.

ஒரு குழந்தையைப் பெற்றுத் தருவது தாயின் கடமை, அவனைச் சான்றோனாக்குவது தந்தையின் கடமை, நல்ல நடத்தையை அளிப்பது மன்னனின் கடமை, வாளைண் செய்து கொடுப்பது கொல்லனின் கடமை, அதைப் பயன்படுத்தி எதிரியின் யானையைக் கொன்று மீள்வது அந்த இளைஞனிர கடமை எனக் கூறுகின்றார். இதன் மூலம் சமூகத்திலுள்ளவர்கள் ஆற்ற வேண்டிய கடமையை வலியுறுத்துகின்றார்.

### பெண்மையும் வீரமும்

‘‘ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே’’ என்ற பாடலடிகள் மூலம் தாய்மையைப் பெண்களின் தலையாய கடனாகக் கூறுகின்றார். அதனை முதன்மைப்படுத்திக் கூறிய பின்பு மற்றவர்களின் கடமையை குறிப்பிடுவதால் அதன் பின்னர் இடம்பெறுகின்ற செயல்களுக்குப் பெண் ஆதாரமானவள் என்பதை வலியுறுத்துகின்றார் பொன்முடியார்.

### நாட்டுப்பற்று

‘‘உன்னிலன் என்றும் புண் ஆனது அம்பு’’ என்ற பாடலில் உரவோர் மகனே என்று குறிப்பிடப்படும் வீரனின் நாட்டுப் பற்று வெளிப்படுத்தப்படுகின்றது. சிறு வயதில் தாயின் மிரட்டலுக்கு அஞ்சியவன் இப்போது பகைவனின் யானையைக் கொன்ற பின்பு தன் நெஞ்சில் அம்பு தைத்தபடி வீழ்ந்திருப்பது அவனது வீரத்தையும் நாட்டுப் பற்றையும் காட்டுகின்றது.

ஒளி வீசும் வாளைக் கையிலேந்திப் போர்க்களத்திற்கு சென்று பகைவனின் யானையை வீழ்த்தி வெற்றி பெற்றுத் திரும்புவதே ஆண் மகனின் கடமை என்பதை ‘‘ஒளிறுவாள்....’’ என்ற பாடல் மூலமாக குறிப்பிடப்படுகின்றது. இதன் மூலமாக நாட்டுப்பற்றை வலியுறுத்துகின்றார் பொன்முடியார்.

### போரில் பெண்களின் பெருமிதம்

முதல் நாள் கணவனை இறந்த பின்னும் மறுநாள் மகனைப் போர்க் களத்திற்கு அனுப்பிய தாய் அங்கு தன் மகன் மார்பில் அம்போடு கேடயத்தின் விழுந்திருப்பதைக் கண்டு மகிழ்தலும் அக் காலப் பெண்கள் போரின் மீது காட்டிய ஆர்வத்தைக் குறிப்பிடுகின்றது. போர்க்களத்தில் தன் மகனின் வீரச் செயலைக் கண்டு வியப்புறும் மறத்தாயின் உள்ளக் கிடக்கையைப் பொன்முடியார் பதிவு செய்திருப்பது ஒரு பெண் புலவரான அவரது வீரத்தையும், உறுதிப்பாட்டையும் வலியுறுத்துகின்றது.

### பெண்களின் நிலைப்பாடு

பெண்களின் போர் ஆர்வத்தை வெளிப்படுத்தும் பொன்முடியார் அக்காலத்திலிருந்த பெண்களின் நிலைப்பாட்டையும் தன் பாடலூடாக மறைபொருளாய் உணர்த்துகின்றார். ஒரு ஆண் மகனைப் பெற்றுக் கொடுத்தல் பெண்ணின் தலையாய கடனாகக் கருதப்படுவதைக் கூறுகின்றார். அத்தோடு ‘‘கலம் தொடா மகளிர்’’ என்ற பாடலின் மூலமாகச் சங்க காலத்தில் மாதவிலக்கான பெண்கள் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதை உவமானத்தினூடாக மறைபொருளாக உணர்த்துகின்றார். இப்போதுதான் பெண்கள் பற்றிய சிந்தனைகள் பேசுபொருளாய் இருப்பதாய் நினைப்பவர்களுக்கு இப்பாடல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### முடிவுரை

சங்க இலக்கிப் பாடல்களில் பொன்முடியாரின் பாடல்களும் சிறப்பானவை. இவரது பாடல்கள் வீரம், வாழ்வியல், பழக்கவழக்கங்கள், போரின் பெருமை, தாய்மையின் பெருமை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. அக் காலத்திலேயே ஆண்களின் பொறுப்பை வலியுறுத்தி, பெண்களின் நிலைப்பாடுகளையும் உணர்விக்கும் வண்ணம் பாடல்களைப் பாடிய பொன்முடியாரின் ஆளுமை அளத்தற்கரியதாகும்.



பூங்கோதை
(இங்கிலாந்து)

# எப்படி அழைப்பேன்?

உறவினர் தவிர்ந்த ஏனைய அன்புக்குரியவர்களை, முகம் தெரியா நட்புக்களை, யாரை எப்படிக் கூப்பிட வேண்டும் என்பதில் கலாச்சார ரீதியாகவும் சமூகவியல் சார்ந்தும் எமக்கிடையே ஒரு குழப்பமும் தயக்கமும் ஏற்படுவதுண்டு என்றே தோன்றுகிறது. முக்கியமாக வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து தமது பழக்க வழக்கங்களையும் மாற்ற முடியாது வெளிநாட்டு கலாச்சாரத்துக்கும் இடம் தர விருப்பமில்லாது முழிப்பவர்கள் பலருண்டு. அண்மையில் கலாச்சாரக் காவலர் ஒருவர் ஏன் தன்னை எல்லாப் பெண்களும் 'அண்ணா' என்று கூப்பிட்டே கொல்கிறார்கள் எனக் குறைப்பட்டுக் கொண்டார். அவரைத் தோழராகக் கொள்வதற்கு அவர்களுக்குப் பக்குவம் போதாது என்று அழுகையை நிற்பாட்டி வைக்க வேண்டியதாயிற்று.

இங்கு தலைமை ஆசிரியரைக் கூட குழந்தைகள், பெற்றோர்கள் முன்னுக்கு மட்டுமே திரு, திருமதி சொல்லி அவர்களது ளரசயெஅந உடன் அழைக்கிறோம். தனியாகப் பேசும் போது அவர்களுடைய பெயர் சொல்லியே உரையாடுகிறோம். அது அவர்களுக்கும் எமக்கும் இடையே ஒரு நெருக்கத்தை உருவாக்கி சமத்துவமாக சில விடயங்களை அலசி ஆராய முடிகிறது. ஆரம்பத்தில், பல வருடங்களுக்கு முன்னர்

அது எனக்கு மிகவும் சவாலாகவே இருந்திருக்கிறது. இது என்னடா வம்பாய்ப் போச்சு என்றே நினைத்துக் கொண்டேன். இப்போது பழகி விட்டது. ''ஹேய் குட் மோர்னிங் ஏமி!'' என்று என் தலைமை ஆசிரியைக்கு வணக்கம் சொல்லும் வரையில் நிலைமை மாற்றமடைந்து விட்டது. பாம்பு சாப்பிடும் ஊருக்குப் போனால் நடு முறி நமக்கு என்பது பல விடயங்களுக்கும் பொருந்தி வரத்தான் செய்கிறது. இப்படியான சில மாற்றங்கள் நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்க்கப் பண்ணுகிறது.

இங்கு பெயரளவில் என்றாலும் சமத்துவம் பேணப்படுகிறது. ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் இடையே பெரிய இடைவெளி விழுவதில்லை போலவே, குழந்தைகளது ஜனநாயக உரிமைகளும் அவர்களது விருப்பு வெறுப்புகளும் கூட பேணப்படுகின்றன. இதனால்த் தான் நமது தாயகத்தில் மக்களிடையே மரியாதை என்ற பெயரில், ஏற்றத் தாழ்வுகளும் வர்க்க வேறுபாடுகளும் அனைத்துப் பணிகளிலும் சமூகங்களிலும் உண்டெனத் தோன்றுகின்றது.

அதுவும் பல வருடங்களுக்கு முன் பணி புரிந்த பள்ளியில் இருந்தவர், ஆண் தலைமை ஆசிரியர், அவரை ''குட் மோர்னிங் டேவிட், ஹவ் ஆ யு டுடே?'' கேட்கும் போது ஆரம்பத்தில் அப்பாவின் முகம் ஒரு தரம் வந்து பயமுறுத்தி விட்டே போகும், எல்லாம் வீட்டுக்கு வா பேசிக்கொள்கிறேன் ரீதியில் தான். அது எமது

கலாச்சாரம். எல்லாக் கலாச்சாரங்களிலும் நன்மை தீமைகள் உண்டு.

இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். இங்கு ள்ள வைத்தியர்கள் தம்மைக் கடவுளர்களாக யோசிப்பதில்லை. எம்மூர் வைத்தியர்களில் வயதான சிலருக்கு மட்டும் அந்த எண்ணமுண்டு. எல்லோருக்குமல்ல!

ஆசிரியையாகப் பயிற்சி செய்ய



முன்னர், இளம் பட்டதாரியாய் ஒரு வயோதிப நிலையத்தின் முகாமைத்துவதில் இருந்தேன். அங்கு தான் பல விதமான ஆங்கில னயைடநஉவள ஐப் பற்றியும் கேட்டும், பேசியும், அறிந்தும் கொண்டேன். பல வயோதிபர்கள் இங்கிலாந்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து அங்கு வாழ்ந்தார்கள். அங்கும் அவர்கள் தம்மைப் பெயர் சொல்லி அழைப்பதையே விரும்பினார்கள். அதிலும் குறிப்பாக ஒருவர், Fred என்பவர் இரண்டாம் உலக யுத்தத்தில் கடற் சிப்பாயாக (ship navigator) இருந்தவர், சந்தித்த போது நிறைய ஞாபக மறதி அவரைப் பாதித்திருந்தது. என்னைப் பார்க்கும் போதெல்லாம் தான் மும்பாய்த் துறைமுகத்தில்

இருப்பதாக நினைத்துக் கொள்வது நல்லதுக்கில்லை என செல்லமாகக் கடிந்து கொள்வேன்!

''உன்னைத் திருமணம் செய்து, இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப் போகிறேன்!'' எனப் படு ஸீரியசாகச் சொல்லுவார். அப்போது அங்கு அந்த வயோதிபரைப் பரிசோதிக்க வந்த இளம் ஆங்கில வைத்தியர், தானே நிலத்தில் அமர்ந்து, அந்த வயோதிபரின் காலுறைகளைக் கழற்றித் தன் பரிசோதனையை ஆரம்பித்தார். அங்கு வந்த எமது நிலையத்தின் தாதிப்பெண், அவரைப் பார்த்து, ''ஹேய் ஜோன் என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா?'' எனக் கடிந்து கொண்டாள். எமக்கு மட்டும் தான் டொக்டர் ஜோன் கடவுள் என்று தெரிந்தது.

எமது குடும்ப நண்பர்களில், ஒரு கணவன் மனைவி இருவரும் ஒரே பணியில், வேறு வேறு தளங்களில் பணி புரிபவர்கள். கணவன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவரின் மனைவி அவரைப் பெயர் சொல்லி அழைக்காமல் அவரை, 'அத்தான்' என்றே அழைத்து வந்தார். அங்கு தொழில் பார்த்த அனைத்து பணியார்களும் உயர் அதிகாரிகள் உட்பட அவரை அத்தான் என்றே அழைத்து கேட்கவும் பார்க்கவும் வேடிக்கையாகத் தான் இருந்தது. நான் ஒரு காரணத்திற்காக அங்கு அவர்களில் ஒருவரைச் சந்திப்பதற்காக போகும் வரை எனக்கும் அது தெரிந்திருக்கவில்லை. அலுவலகத்தின் காரியாலயத்தில் அவர்களின் பெயரைக் கூறியதுமே என்னை அமரும் படி கூறிய ஒரு கருப்பு இன அலுவலர் ஒருவர், என்னிடம் பணிவாக கூறினார், அத்தான் வில் மீட் யூ சூன்! மரியாதையும் பக்தியும் மனதில் மட்டும் இருப்பது நல்லது என்ற தெளிவு வந்தது நல்லது என்றே தோன்றுகிறது.





# எனது நாடக அனுபவங்கள் 05

ஆனந்தராணி பாலேந்திரா (UK)

## “நட்சத்திரவாசி” 1977- 1978

கடந்த இதழில் 77ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தில் நானும் எனது குடும்பத்தினரும் வீட்டை விட்டு வெளியேறி கொழும்பு அகதிமுகாமில் தங்கியிருந்து பின்னர் யாழ்ப்பாணம் செல்ல விமானம் ஏறிய சம்பவத்தை எழுதியிருந்தேன்.

விமானம் பலாலி விமான நிலையத்தில் தரை இறங்கியபோது, தமது உறவினர்கள் யாராவது இதில் வருகிறார்களா என்று பார்ப்பதற்கு சிலரும், ஜம்போ ஜெட் விமானத்தைப் பார்ப்பதற்கு பலரும் கூடியிருந்தார்கள். அந்த நேரம் நாம் வருவது பற்றி உறவினர்கள் எவருக்கும் அறிவிக்க முடியாத சூழ்நிலைதான் இருந்தது. இப்போது மாதிரி தகவல் தொழில்நுட்பம் ஒன்றும் இருக்கவில்லை. எனது அப்பாவும் ஒரு காரைப் பிடித்துக் கொண்டு எமது ஊரான வல்வெட்டித்துறைக்குப் போய் உறவினர் வீட்டில் தங்கலாம் என்று திட்டமிட்டார்.

அவ்வேளையில் அச்சுவேலிக்கு அருகில் உள்ள கதிரிப்பாய் என்ற சிறிய ஊரில் வசித்துவந்த எனது அம்மாவின் தாய் மாமனாரான நடராஜா அவர்களின் இரு மகன்மார் விமான நிலையத்தில் எம்மைச் சந்தித்து தமது வீட்டிற்கு எம்மை அழைத்துச் சென்றார்கள். நாம் சிலவேளைகளில் இந்த விமானத்தில் வரக்கூடும் என்று தாம் எதிர்பார்த்ததாகவும் அதனால் அங்கு வந்ததாகவும் சொன்னார்கள். அப்பா, அம்மா, நான், எனது சகோதரர்கள் என ஏழு பேர் கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் கதிரிப்பாயில் அவர்கள் வீட்டில் தங்கினோம். எங்களை எந்தக் குறையுமில்லாமல் மிக நன்றாகப் பார்த்தார்கள்.

21 வயதுவரை கொழும்பு நகரத்தில் வாழ்ந்த எனக்கு இந்தக் கிராம வாழ்க்கை மிகவும் வித்தியாசமாக இருந்தது. வயற்காணிகளும் தோட்டக்காணிகளும் நிறைந்த ஊர் அது. எந்தவித பரபரப்பும் இல்லாத அமைதியான சூழல். எனக்கு அது பிடித்திருந்தது. தோட்டத்தில் விளைந்த காய்கறி, பழங்கள் என இயற்கை உணவு. நான் முதன் முதலாக சைக்கிள் ஓடப் பழகியதும் அங்குதான். எனது தம்பிமார் நன்றாகப் பழகிவிட்டார்கள். இரண்டு மூன்று விழுகையுடன் எனது சைக்கிள் ஓடும் முயற்சி தோல்வி கண்டது.

கொழும்பு சென்ற அப்பா அங்குள்ள நிலைமையை அறிந்து திரும்பியவுடன் நாம் எல்லோரும் இனி நிரந்தரமாக யாழ்ப்பாணத்திலேயே வசிக்கப் போவதாகவும் தான் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திற்கு மாற்றலாகி வரவிருப்பதாகவும் சொன்னார். அப்பா புகையிரத நிலைய அதிபராக பல காலம் பல ஊர்களில் வேலை பார்த்து பின்னர் கொழும்பு – மருதானையில் புகையிரத நிலைய கட்டுப்பாட்டாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார்.

சுமார் ஒரு மாதம் சென்ற பின்னர் திடீரென ஒருநாள் பாலேந்திரா நான் தங்கியிருந்த கதிரிப்பாய் வீட்டிற்கு வந்தார். எங்கள் எல்லோருக்கும் பெரிய ஆச்சரியம். இவர் எப்படி நாங்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து வந்தார் என்று ஒரே யோசனை. அப்போது எனக்கும் பாலேந்திராவிற்கும் இடையில் ஒரு சக நாடகக் கலைஞர், ஒரு நாடக நெறியாளர் என்ற ரீதியிலான நட்பு மட்டுமே இருந்தது. தான் எமது உறவினர் மூலமாக விசாரித்து அறிந்ததாகச் சொன்னார். நாங்கள் எப்படி இருக்கிறோம் என்று நலம் விசாரிப்பதற்காக வந்த பாலேந்திரா சும்மா வரவில்லை. ஒரு நாடகப் பிரதியுடன் வந்தார். அந்த நாடகம்தான் தர்மு சிவராம் எழுதிய ‘நட்சத்திரவாசி’.

நாங்கள் இனி நிரந்தரமாக யாழ்ப்பாணத்தில் வசிக்கப் போகிறோம், யாழ்ப்பாண நகருக்கு அருகில் வீடு பார்க்கிறோம் என்று பாலேந்திராவிடம் சொன்னேன். உங்களுக்கு இந்த நாடகம் நன்றாகப் பிடிக்கும். சவாலான பெண் பாத்திரம் இது. நாடக ஒத்திகைகளை நாங்கள் யாழ்ப்பாணத்திலேயே செய்யலாம் என்று கூறி நாங்கள் வீடு மாறியவுடன் தனக்குத் தெரியப்படுத்தச் சொல்லி தனது முகவரியைத் தந்தார். யாழ்ப்பாண நகருக்கு அருகில் கொக்குவிலில் வாடகைக்கு வீடு பார்த்து குடியேறினோம்.

‘நட்சத்திரவாசி’ நாடகப் பிரதியை வாசித்தவுடன் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. மூன்றே மூன்று கதாபாத்திரங்கள். ஒரேயொரு பெண் பாத்திரம். பாலேந்திரா என்னை நம்பியே இந்த நாடகப் பிரதியைத் தெரிவு செய்தார் போலும் என்று யோசித்தேன். பாலேந்திரா ஏற்கனவே எனக்குக் கூறியது போல அந்த வித்யா பாத்திரம் மிக மிகச் சிக்கலான ஒரு பெண் பாத்திரம். நடிப்பதற்கு சவாலான, ஒரு முற்போக்கு எண்ணம் கொண்ட, வித்தியாசமான பெண் பாத்திரம்.

ஏற்கனவே சவால்களைச் சந்திக்கப் பழகிய எனக்கு இந்தப் புதிய சவாலையும் ஏற்கும் மனப்பக்குவம் வந்திருந்தது. கொழும்பில் வசித்துக்கொண்டு மேடையில் நாடகம் நடித்தது சரி. யாழ்ப்பாணம் வந்த பின்பும் நான் நடிக்க ஒப்புக்கொண்டபோது எனது பெற்றோர் மிகவும் ஆதரவாகவே இருந்தனர். மற்றவர்கள் என்ன கதைப்பார்களோ என்ற பயம் அவர்களுக்கும் இல்லை, எனக்கும் இருக்கவில்லை.

‘நட்சத்திரவாசி’ நாடகத்தை எழுதிய தர்மு சிவராம் அவர்கள் ஈழத்துக் கவிஞர், எழுத்தாளர். இது அவரின் சொந்த வாழ்க்கையின் சில கூறுகளைக் சொல்லுகிற நாடகம் என்றும் சொல்லப்படுகிறது. திருகோணமலையில் பலகாலம் வாழ்ந்த தர்மு சிவராம் பின்னர் இந்தியாவில் தமிழ் நாட்டில் வசித்தவர். இவர் பிரமிள் என்ற பெயரில்தான் பெரும்பாலும் அறியப்பட்டார். அதீத புத்திக்கூர்மை கொண்டவர். இவர் இருந்த காலத்தைவிட இறந்த பின்னர்தான் இவரது திறமைகள் வெளியுலகிற்கு நன்கு தெரிய வந்தன. இவரின் எழுத்துகளை ஆறு தொகுதிகளாக கால சுப்ரமணியம் அவர்கள் தமிழகத்தில் வெளியிட்டுள்ளார்.

‘நட்சத்திரவாசி’ நாடகத்தில் நட்சத்திரவாசியாக சுகந்தன் பிளாஞ்சாட் நடித்தார். இவர் ஏற்கனவே என்னோடு நான் நடித்த முதல் இரண்டு நாடகங்களான ‘பிச்சை வேண்டாம்’, ‘மழை’ ஆகிய நாடகங்களில் நடித்தவர். நல்ல நடிகர். நன்றாக ஒத்துழைத்து நடிப்பார். நாகன் பாத்திரத்தில் தனபாலசிங்கம் நடித்தார். இவரை நான் முதன்முதலாக இந்த நாடக ஒத்திகையின்போதுதான் சந்தித்தேன். வித்யா பாத்திரத்தில் நான் நடித்தேன். எம் மூவரைத் தவிர பத்துப் பேர் கொண்ட கோரஸ் நடிகர்கள் இருந்தார்கள். என்னைத் தவிர மற்ற எல்லோரும் கட்டுப்பெத்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

மிகுதி அடுத்த இதழில்...





# தாய்மை ஒரு வரம்!

இதனை வாசிப்போர் அனைவருக்கும் தமது தாய்மாரைப் பற்றிய அருமை தெரியும். இதனால் ஒரு நெகிழ்ச்சி தோன்றும். இந்தச் செய்தி என் கண்முன் நிகழ்ந்தது. நான் நினைத்து பெருமை கொள்வதும் வருந்துவதும் தான். நாங்கள் இருந்த வீட்டிற்குப் பக்கத்தில் தான் அவர்களது வீடு. எங்களுக்கு அவர்களுடன் எந்த தொடர்பும் இல்லை.பார்த்துச்சிரிப்பது கூட இல்லை.அவவவுக்காக நான் இன்றும் கவலைப்படுகிறேன்.

காலம் எவ்வளவு மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. நாம் வந்த காலத்தில் அவர்களின் வீட்டுத் தோட்டத்தில் கதிரையைப் போட்டுக் கொண்டு ஒரு முதியவர் இருந்து முழிசிக் கொண்டிருப்பார்.பார்க்கவே பயமாக இருக்கும்.

‘அந்த மனிதர் எப்பவும் இப்படித் தான்.ஒருத்தரோடையும் கதைக்காது.மனுசி நல்ல மனுசி.அந்தாளுக்குப் பயத்தில ஆரோடையும் கதைக்காது.அவர் இல்லாத நேரத்தில இந்த வேலிமட்டும் வந்து கதைக்கும்.’ கீழ் வீட்டுக்கிழவி றேசி இதை என்னிடத்தில் சொன்னது.

**பிள்ளைகள் இல்லையா?**

‘ஏனில்லை இரண்டு பெடியள். ஒருவன் உங்கள் நாட்டுப் பக்கம் போனவன் திரும்பி வரவேயில்லை. ஒருவன் பேர்லினில் பாராளுமன்றத்தில வேலை. அவன் எப்பாலும் இருந்திற்று வருவான்.மற்றவன் இந்தியாவில் இருப்பதாகக் கேள்வி.இந்த மனிசன்ர குணத்தால அவன் திரும்பி வர விரும்பவில்லை. இருபத்தைந்து வருசம் இருக்கும். இந்து மதம்மாறி சாமியாராகி விட்டானாம்.

வேவா, என்னிடம் சொல்லிக் கவலைப்படுவா.என்று றேசிஎன்னிடம் சொல்லி இருக்கிறா. வேவாதான் அவவின்ர பெயர். சில வருடங்களில் அந்த மனுசனும் செத்துப் போய்விட்டது. அது எனக்குத் தெரியாது.

எங்க அந்த ஆளைக் காணேல்லை என்று றேசியைக் கேட்டபோது தான். அவர் இறந்த செய்தி எனக்கே தெரிஞ்சது.இத்தனைக்கும் பக்கத்து வீடு.

எங்கள் வீட்டைச்சுற்றி இருப்பவர்கள் எங்களுடன் ஆரம்பத்திலிருந்ததை விட நட்போடு இருந்தார்கள். வேவாவும் சிரிப்பில் ஆரம்பித்து என்னுடன் நிறையக் கதைப்பா. தனது மகன் இந்தியாவில் பெங்களூரில் இருப்பதாகவும், எத்தனை வருடங்கள் நான் அவனைப் பார்க்கவில்லை .என்ர வாழ்க்கையில் அவனைப் பார்ப்பனா? இந்த நினைவுகள் தான் தினம் இப்போது. நீ இந்தியா போனால் என்னையும் கூட்டிக் கொண்டு போறியா? என்று சந்திக்கும்போது கேட்பார். அப்போது அவரின் கண்களைப் பார்க்க முடியாமல் இருக்கும். இந்த வேளையில் என்ர அம்மாவையும் நினைப்பேன். அந்தக் கவலை எத்தகையது என்பதை தாயை, நீண்ட காலம் பிரிந்திருக்கும் அனைவருக்கும் இருக்கும்.

ஒருநாள் தானும்,சினேகிதியும் மகனைப் பார்க்கப் போவதாகச் சொல்லிச் சந்தோசப்பட்டா. தனக்கு விமானத்தில் பறக்கப் பயம். அதனால் தான் அவவைக் கூட்டிக் கொண்டு போறன் என்றார். நானும் அவருக்கு வாழ்த்துக் கூறினேன்.

எனக்கும் மனம் சந்தோசமாக இருந்தது. மகனைக்காணாது ஏங்கிய அந்தத் தாயின் தவிப்பை அறிந்தவன் நான். என் மனைவியிடம் அதனைச் சொல்லி மகிழ்ந்தேன்.

திரும்பி வந்தபின். தோட்டத்திற்குள் நின்ற என்னை பரபரப்போடு அழைத்தார். மகனைச் சந்தித்த பூரிப்பு அவர் முகத்தில் தெரிஞ்சது. எடுத்த படங்களைக் காட்டி மகிழ்ந்தார்.மகனுடய பெயர் எறிக் என்பதை முன்னமே சொல்லியிருந்தார்.

சாமியாரைப் போல் காவி உடையில் இருந்தான் எறிக். ‘‘எனி செத்தாலும் பரவாயில்லை.என்ர பிள்ளையைப் பார்த்திற்றன்.’’

ஒருநாள் அவசரமாக்க் கூப்பிட்டார்.அவர் முகத்தில் மலர்ச்சி குடியிருந்தது.‘‘எறிக் வாறான். என்னைப் பார்க்க முடியாமல் அவனால் இருக்க முடியவில்லையாம்’’. தாய்மை என்கண் முன்னால் சிலிர்த்துப் போய் நின்றது.



புத்திசிகாமணி
(யேர்மனி)

‘‘என் மகனை வந்து பார்ப்பியா? அவன் சந்தோசப் படுவான்.’’ என்று என்னைக் கேட்டார். நிச்சயமாக என்றேன் நான். காவியுடையில் தான் அந்தச் சாமியைக் கண்டேன். அவன் மச்சம் சாப்பிடுவதில்லை என்று முன்னமே வேவா என்னிடம் சொல்லியிருந்தார். ஏழெட்டு கறிகள், அப்பளம் மிளகாயுடன் பசுமதி சோறும் கொண்டு அவர்கள் வீட்டிற்குப் போனேன். அவனுக்கு அவ்வளவு சந்தோசம். எனக்கு முன்னாலேயே சாப்பிட ஆரம்பித்தான். நல்லா சுவையாக இருப்பதாக புழுகித்தள்ளினான். எனக்கும் மனம் நிறைந்தது. அவன் உடலில் இருந்து வந்த சந்தன வாசம் இன்றும் என் நெஞ்சில் நிற்கிறது. எறிக் அன்பும்,அறிவும் பண்பும் கொண்டவன். இன்னும் ஒரு கிழமை இருக்கு எறிக் போவதற்கு,அவனை விட்டிட்டு இருப்பனோ தெரியவில்லை. பார்க்காமலே இருந்திருக்கலாம் எனத்தோன்றுகிறது.’ என்று வேவா என்னிடம் சொல்லிக் கவலைப்பட்டார். அவர் நன்றாக வாடியிருந்தார்.பிரியும் துயர் அவர் கண்ணில் தெரிந்தது.அது தாய்மையின் ஏக்கம்.தவிப்பு.

போவதற்கு சில நாட்களே இருந்தன.வேலையால் வந்த போது என்மனைவி அந்த செய்தியைச் சொன்னாள். ‘வேவாக்கு கடுமை வருத்தம் போல,அம்புலன்ஸ் வந்து ஆளைக் கொண்டு போகிது.’ நானும் அதிர்ந்து போனேன்.

அன்று பின்னேரமே நானும் மனைவியும் ஆஸ்ப்பத்திரியில் இருந்த வேவாவைப் பார்த்தோம். அவவுக்கு அது சந்தோசமாக இருந்தது. பார்த்த போது பரவாயில்லை உசாராக இருந்தா பக்கத்தில் எறிக் கவலையோடு நின்றிருந்தான். நாளை மறுநாள் புறப்படுவதாகச் சொன்னான். இன்னும் சில நாட்கள் நிற்க முடியாதா என்று கேட்டேன்.

‘எப்போதோ ஒரு நாள் போகத்தானே வேண்டும்.அவ எழுந்திற்றா.அவ சுகமாக இருப்பா. எனக்கு அங்கே நிறைய வேலை காத்திருக்கு.நான் போகத்தான் வேணுமென்றான்.’ நான் எதுவும் கதைக்கவில்லை.

மறுநாள் வேலை செய்து கொண்டிருக்கும் போது, கேபேட் அவசரமாக வந்து சொன்னான். வேவா போயிற்றா. நான் அதிர்ந்து போனேன்.கேபேட் எனது வீட்டிற்குக்

28 ஆம் பக்கம் பார்க்க...




மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)



# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 03

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

பிறவிப்பயனால் நற்குருவினடத்தே சரணடைந்து , அன்னம் போல் வித்தை பயின்று , சீரிய பெரியோர் கூடிய அரங்கினில் குருவருளால் முதன் முதலில் தான் கற்ற வித்தையை அவைக்காற்றுகை செய்யும் பொன்னான தருணமாய் அமைவது அரங்கேற்றம்.

அபிநயக்ஷேத்ராவில் அர்ப்பணிப்புடன், குருகுல கற்கையை மேற்கொண்ட ஒரு மாணவியின் அரங்கேற்ற நிகழ்விற்கான ஆயத்தங்கள் ஆரம்பமானது. பழமைக்குள் புதுமை சேர்க்க எண்ணுவது கலைஞர்களுக்கு புத்துணர்வூட்டி. பாலசரஸ்வதி அம்மா குறிப்பிட்ட கோவில் அமைப்பிற்கிணங்க சம்பிரதாயமான மார்க்க உருப்படிகளை அரங்கேற்ற நிகழ்வில் ஆற்றுகைப் படுத்துவது வழக்கம். எனினும் இந்த அரங்கேற்றத்தில் புதிய முயற்சியை கையாள விரும்பினோம்.

**அதுவே ‘‘ஞால வெளியினிலே’’ என்னும் பரதத்தில் பாரதி மார்க்கம்.**

தமிழ் இலக்கிய மரபுப் பட்டியலில் தனக்கென தனியிடம் வகிக்கும் பாரதியிடம், தொன்மைத் தமிழ் மரபை ஒட்டியதாயும், பாரதி மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதாயும் உள்ள ஓர் பொதுப் பொருள் உண்டா என்று வினவினேன்? விடையாக மலர்ந்தாள் பெண். காதல் தமிழ் தந்த பாரதி பெண்மையை முன்னிலைப் படுத்தி ஓராயிரம் சொற்களை அள்ளி அள்ளித் தந்தவர்.

பெண்மையின் மென்மையைப் பாடினார், மேன்மையைப் பாடினார், விடுதலைக்காக , வீரத்திற்காக, வெற்றிக்காக, கல்விக்காக, காதலுக்காக, கற்பிற்க்காக , திருமணத்திற்காக, வாழும் முறைமைக்காக, உறவிற்காக, உரிமைக்காக, சுதந்திரத்திற்க்காக, என பெண்களோடு சம்பந்தப்பட்ட பலவற்றிற்குமாய் பாடினார். அந்த காலத்தின் சமூக தேவை கருதியே பலதும் எழுந்தது எனவும்



# பெண்மை வர்ணம்

கொள்ளலாம். எனினும் இக்காலத்திற்கு ஏற்புடையதாக இருப்பது கவியின் புலமையும், காலத்தின் வியப்பும்.

பொதுவாகவே இலங்கையை பொறுத்த வரை , நாட்டிய கலையை கற்பது பெண்களாகவே இருக்கின்றனர். அபிநயக்ஷேத்ராவும் அதற்க்கு விதிவிலக்கல்ல. இவற்றினை கருத்தில் கொண்டு பெண்மைக்காக ஒரு நாட்டிய உருப்படி அமைக்க எண்ணம் கொண்டேன். நாட்டிய மார்க்க உருப்படிகளை தற்காலத்தில் இரண்டு விதமாக நோக்கலாம். ஒன்று மரபின் அடி வந்த சம்பிரதாயமான அமைப்பு. இரண்டாவது ஏதேனும் கருப்பொருளை மையப்படுத்தி புதிதாக அமைக்கும் உருப்படி. நான் இங்கு இரண்டினையும் தழுவிய ஆக்கத்தினை தர முயன்றேன்.

நாட்டிய மார்கத்தில் கருவறை போன்றமையும் வர்ணம் என்ற உருப்படியே பெண்மையின் சிறப்பை சொல்ல பொருத்தமானது என்று கருதினேன்.

## இயல்

சங்க காலத்தில் பெண்களின் பருவங்களை 7 ஆக பிரித்தார்கள். அக்காலத்தில் பெண்களிடம் காணப்பட்ட முக்கிய அம்சங்கள் இந்த 7 பருவத்திற்குள் குறிப்பிடப்பட்டு இருக்கும். சங்க காலத்தில் பெண்களின் பருவங்கள் பற்றி குறிப்பிட்ட விடயங்கள் பாரதி காலப் பெண்களிடத்தேயும் காணப்பட்டதா ? அது இன்றும் பொருந்துகிறதா ? என்பதே அடுத்த கேள்வி .

முக்காலத்திற்கும் பொருந்தும் வண்ணம் உள்ள ஒரு விடயத்தை பேதை , பெதும்பை, மங்கை , மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என 7 பருவத்திற்கும் தனித்தனியாக பட்டியலிட்டேன். அக்குறிப்பினை பாரதிக்குள் தேடிய விளைவே பெண்மை வர்ணத்தின் தோற்றம்.

நாட்டிய சம்பிரதாயத்தில் அமைந்த பாரம்பரிய வர்ணங்களில் பூர்வாங்கம், உத்தரங்கம் என இரண்டு பகுதிகள் இருக்கும். முதல் பகுதியில் தம் உணர்வுகளை பொங்கி வடித்து விட்டு இரண்டாம் பகுதியில் யாரை மையமாக வைத்து ஆடுகிறோமோ அவர்களை புகழ்ந்து பாடுவதாக இருக்கும். மரபினை மனத்திருத்தி புதிதாக வடித்த பெண்மை வர்ணத்திலும் இரண்டாம் பகுதியில் முழுவதுமே பெண்களை போற்றி பாடி ஆடுவதாக அமைத்தோம்.

**பெண்மை வாழகென்று**
**கூத்திடுவோமடா**
**பெண்மை வெல்கென்று**
**கூத்திடுவோமடா**
**போற்றி தாய் என்று தாளங்கள்**
**கொட்டடா**
**போற்றி தாய் என்று**
**பொற்குழல் ஊதடா**
**உயிரை சேர்க்கும், உயிரினைக்**
**காத்திடும்**
**உயிரினுக்குயிராய் இன்பமாகிடும்**
**உயிரினும் இந்தப் பெண்மை**
**இனிதடா !!!**

## இசை

உருவம் வந்து விட்டது. அவ்வுருவிற்கு உயிர் தந்து அருவமாய் நின்று நிறையும் இசை வேண்டுமே. பாரதியின் ஒளிச்சொற்களுக்கு பாரதியே ஒலிதந்து ஓசையானால் ?? ஆஹா! பறக்கும் இதயத்தில் பட படத்த பட்டாம்பூச்சிக் கூட்டத்தை வான வெளியில் பறக்க விட்டு வேடிக்கை பார்த்திருந்தேன். ஐயன் பாரதியின் கொள்ளு பெயரன் என்ற பெருமை கொண்ட டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயாவினால் இசை அமைக்கப்பட்டு மகுடமானது பெண்மை வர்ணம்.

7 பருவங்களும் வர்ணத்தின் முதற் பாதிக்குள் அடக்கப் பட்டது. முதல் 6 பருவங்களுக்கு 3 ராகங்களை உபயோகித்து 7 ஆவது பருவத்தினை முத்தாயீஸ்வரத்தில் [ வர்ண அமைப்பில் நடுப் பகுதி ] ராக தாள மாற்றத்தோடு அமைத்து , இவ்வர்ணத்தினை ரகமாலிகா, தாளமாலிகாவாக மிக நுட்பமான நல்லிசையை பரிசளித்தார் பாரதி ஐயா. அவதார புருஷன் பாட்டனின் வரிகளுக்கு இசை அமைக்கும் சந்தர்ப்பம் கிட்டியமைக்கு நன்றியோடும் இருந்தார் அம்மேதை.

## நாட்டியம்

மாமலரில் மௌனத்தேனுண்ணும் மரகத வண்டு போல் , இந்த உருப்படியில் உள்ள ஊறு

28 ஆம் பக்கம் பார்க்க...





Sari1 Fashion House
எம்மிடம் தங்க நகைகள் மற்றும் மேலதிக சேவைகளும் உண்டு
Sari 1
* ஓடர் நகைகள்
* திருத்த வேலைகள்
* காது மூக்குத்தி குத்துதல்
* பழைய நகைகளுக்கு பதிலாக சிங்கப்பூர் புதிய நகைகள் மாற்றி கொடுக்கப்படும்
தரமான ஆடைகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr. 49
(1. Etage) 60329
Frankfurt am Main
(gegenuber
Hauptbahnhof)
0152 1923 9663
https://www.facebook.com/
sari1fashionhouse
Frankfurt (Main) Hauptbahnhof முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது




New Asialand
ONLINE SHOP NOW
www.newasialand.com
015201954064
மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறி, கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும் என்றும் சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
FRANKFURT (MAIN) HAUPTBAHNHOF முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது

# “கட்டுக்கதைகள்”

நண்பர்களே, கட்டுக்கதை என்றால் என்ன? கற்பனைகள் கலந்த கதைகளா அல்லது உண்மையை மறைப்பதற்காகக் கூறும் கதைகளா? இரண்டு கூற்றுகளும் கட்டுக்கதைகளுக்கு பொருந்துகின்றன. கதைகள் என்றாலே கற்பனைகள் கலந்தால் மட்டுமே நன்றாக இருக்கும். கேட்பவர்கள் ரசிக்கும் அளவிற்கு கதைகள் இருக்க வேண்டும் அல்லவா! கற்பனை வளம் நிறைந்தவர்களாகச் சிலர் இருக்கின்றனர்.

சும்மா ஒரு விடயத்தை பெரிதுபடுத்தி, ஒன்றுமில்லாத ஒன்றுக்கு,கண் முக்கு வாய் வைத்து,கதைப்பது,கட்டுக்கதை. ஆம், பெண் ஒருத்தியை இரசித்துக் கூறும் பொழுது அவளின் கண்கள் மூக்கு மற்றும் வாயை வர்ணித்தால் தான் அவளின் அழகை இரசிக்கமுடியும். இதேபோலவே கட்டுக்கதையின் இரசனைகள். கற்பனைக் கதைகள் யார் மனதையும் புண்படுத்தாதவை ஆனால் கட்டுக்கதைள் புண்படுத்துபவை. கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய். விசாரிக்காமல் பொழுதுபோக்குக்காக சிலர் பேசுவார்கள். ஒன்று கூடியும் உரையாடுவார்கள்.

றஜினா மகின்சன்
( யேர்மனி )



**கட்டுக் கதை எடுத்துக்காட்டுகள் சில:** ஒரு குடும்பத்தலைவன் வேர்வை சிந்தி கடுமையாக உழைக்கச் செல்கிறார். அவர் சம்பாதித்தப் பணத்தில் வீடு கட்டுகிறார். ஊர் என்ன சொல்லும்? இவருக்கு எங்கிருந்து இவ்வளவ பணம் என்று கேட்கும். கட்டுக் கதையை உருவாக்கும் நேரம் வந்துவிடும். அவர்களுக்கும் இக் கட்டுக்கதையினால் நேரம் போனதாகிவிடும். அதாவது பொழுதுபோக்கு.

இந்தக் கட்டுக்கதைகள் பற்றி சிலரைக் கேட்டு அறிந்தவை என்னவென்றால் இளம் சந்ததியினரைப் பற்றிக் கட்டுக் கதைகள் உருவாகி வருகின்றனவாம். ஓர் ஆணும் பெண்ணும் வெளியில் நின்று உரையாடக் கூடாது. ஆம், உடனே இவர்கள் காதலர்கள் என்பர். பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் பெண் தன் நண்பன் ஒருவனுடன் நூலகத்துக்குச் சென்று கல்வி கற்பதற்காகச் சந்திக்கின்றனர். இவர்களைக் காண்பவர்கள் இவர்கள் நூலகத்துக்குச் செல்லும் முன்னரே கட்டுக் கதைகளை உருவாக்கிவிடுவர்.

வேலைக்குச் செல்லும் பிள்ளைகள் வேலை முடிந்து இரவில் வீடு செல்கிறார்கள் என்றால் அதற்கும் ஆயிரம் கதைகள். வேலை இல்லை பொய் என்பர். இந்தக் கட்டுக்கதைகள் இன்று தோன்றியவை அல்ல. நம்நாட்டிலேயே அன்றும் இருந்துள்ளது. ஆனால் என்ன அப்போது இன்றுபோல் வேகமாக கட்டுக்கதை பரவ வட்சப்வசதிகளோ! வைபர் வசதிகளும் வெறும் சைபர் தான். அதனால் பொட்டுக்காலும், போகும் இடங்களிலும், இரவிரவாக அக்கம் பக்கத்து வீட்டுத் திண்ணைகளிலும் இந்தக் கட்டுக் கதைகள் பிரசவத்துக்கொண்டுதான் அன்று இருந்தன.

கட்டுக் கதையினால் பாதிக்கப் பட்டவர்கள் அதிகம். ஆம் மன அழுத்தத்துக்கு உள்ளாகி துன்பப் படுகின்றனர்.

ஆகவே தயவு செய்து மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாது வாழப் பழகிக்கொள்ள வேண்டும். ஏனெனில் நாம்செய்யும் காரியங்கள் எங்களுக்கே திரும்பி வந்துவிடும். நன்மை செய்வோம்! நல்லதைப் பேசுவோம்! நன்மைபெறுவோம்.

நிலாமகள்

Kutty Story

## 100 வயது வாழ ஒரு திருமண ஒப்பந்தம்

நூறுவயது முதியவரிடம் உங்கள் உடல் ஆரோக்கியத்தின் இரகசியம் என்ன என்று கேட்டனர்.

அவர் சொன்ன பதில் இதோ.

நான் திருமணம் செய்து 75 வருடங்கள் ஆகின்றன. திருமணத்தின் போது நானும் மனைவியும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டோம்.

நாம் இருவரும் சண்டையிடக்கூடாது.அப்படி சண்டையிட்டால் யார் தோற்கிறார்களோ அவர் 5 கி.மீ நடக்கவேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை கடந்த 75 வருடமாக சரியாக கடைப்பிடிக்கின்றோம். அதனால் நான் திருமணமான நாள் முதல் தினமும் 5.கி.மீ நடக்கவேண்டியாகிறது. அப்படி நடப்பதால் நான் ஆரோக்கிமாக இருக்கின்றேன்.

சரி அப்படி என்றால் உங்கள் மனைவி ஒரு முறையும் தோற்கவில்லையே. அதனால் நடக்க வேண்டியதும் இல்லையே. ஆனால் எப்படி உங்கள் மனைவியால் ஆரோக்கிமாக இருக்கமுடிகிறது.

இதற்கு 100 வயது முதியவர் சொன்னபதில் இது தான்.–நான் 5 கி.மீ சரியாக நடந்து முடிக்கிறேனா என்று பார்க்க தினமும் என் மனைவி என்னைப் பின்தொடர்ந்து வந்து பார்ப்பாள்.

இது நகைச்சுவையான கதையாக இருந்தாலும் நடப்பது ஆரோக்கியம் என்பதை சிறப்பாகச் சொல்கிறது அல்லவா!

[ நன்றி : இது வாய்மொழிவந்த கதையல்ல இது வட்சப் வழி வந்த ஒரு ஆங்கிலக் குட்டிக் கதை–Kutty Story]






மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)



சேவியர்
(தமிழ்நாடு)

# நடுப்பக்கம்



# எனக்கு பிடிக்கும் என்று உனக்கும் தெரிவது எப்படி?

## என்னை அறிந்தாய், நீ என்னை அறிந்தாய்



'இதுவரைக்கும் உன் கிட்டே நான் எதையுமே மறைச்சதில்லை. எல்லாமே சொல்லியிருக்கேன்' என கடற்கரை மணலில் காது கடிக்கும் காதலர்களின் பக்கங்களில் நிச்சயம் மறைந்திருக்கும் சலவை செய்யப்படாத சில சங்கதிகள்.

'என் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம், அதில் இருண்ட பக்கங்களுக்கு இடமே இல்லை' என சவடால் விடும் கணவர்களின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு திறக்கப்படாத கதவு துருப்பிடித்துக் கிடக்கும்.

உன்னைப் பற்றிய எல்லா விஷயங்களையும் நான் அறிவேன் என யாருமே சொல்ல முடியாது. கடவுளைத் தவிர. வெயிட்..வெயிட்... இப்போ கடவுளோடு சேர்த்து இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இணையம் !

**"ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது".**

நாம் சொல்லாத விஷயங்களையும் தோண்டி எடுத்து நமக்கு முன்னால் நீட்டி நம்மை வெலவெலக்க வைப்பதில் பல நிறுவனங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன. ரகசியமா ? கால் கிலோ என்ன விலை என்று கேட்கும் நிலை உருவாகிவிட்டது. பிக் பாஸ் பார்ப்பவர்களுக்குத் தெரிந்த வார்த்தை, 'ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது'. அது இந்த விஷயத்தில் கனகட்சிதமாய்ப் பொருந்துகிறது. நம்முடைய தகவல்களை பிக் பாக்கெட் அடிக்கும் இத்தகைய இணைய நிறுவனங்களின் முதன்மை நோக்கம் ஒன்றே ஒன்று தான். லாபம். இந்தத் தகவல்களை வைத்துக் கொண்டு எப்படி ஒருவரை அமுக்கி, பணம் கறப்பது என்பது தான் இலட்சியம்.



இதொன்றும் புதிய வித்தையல்ல. ஆதிகாலங்களில் குடுகுடுப்பைக் காரர் வருவாரே, 'யம்மா.. சாந்தியடையாத ரெண்டு ஆத்மாக்கள் வீட்டைச் சுத்திட்டே வருது. அதுல ஒண்ணு அழுதுட்டே இருக்கு' என வாசலில் நின்று குரல் கொடுப்பார்களே, அதன் டிஜிடல் நீட்சி தான் இது. அந்த குரலில் பயந்து போயோ, அல்லது என்ன விஷயம் என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தோடோ நாம் அவர்களிடம் பேசும்போது அவர்கள் வலையில் விழுந்து விடுகிறோம். அதன்பிறகு சேவல் வெட்டப்படலாம், காசு சுருட்டப்படலாம், சஞ்சலங்கள் விதைக்கப்படலாம். எது வேண்டுமானாலும் நடக்கலாம்.

மீன் சந்தையில் நெத்திலி மீனுக்கு அருகே மாங்காய் கடை விரிப்பது தொடங்கி, இன்றைய அமேசான் போன்ற நிறுவனங்களின் அழைப்பு வரை எல்லாமே வியாபார யுத்திகளே. டிஜிடலுக்கு முன்பு சந்தை அளவில் இருந்தது, டிஜிடல் உலகில் சந்தை என்பது சர்வதேச அளவுக்கு விரிவடைந்திருக்கிறது. அது தான் வித்தியாசம்.

அப்படி தகவல்கள் திரட்டுவதற்காகத் தான் டிஜிடல் சிவனின் நெற்றிக் கண் ஒன்று எல்லாரையும் கண்காணித்துக் கொண்டே இருக்கிறது. இது தொழில்நுட்பத்தின் மூன்றாவது கண். இந்த கணம் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள், என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்கள் பெற்றோருக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் இந்த மூன்றாவது கண்ணுக்குத் தெரியும். உங்களுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது என்பது உங்கள் வாழ்க்கைத் துணையை விட அதிகமாய் அந்த மூன்றாவது கண் அறியும். உங்களுடைய தினசரி நடவடிக்கை என்ன என்பது உங்களை விடத் துல்லியமாய் அந்த மூன்றாவது கண்ணுக்குத் தெரியும்.

**சில ஆண்டுகளுக்கு முன்பு வரை போன் பேசுவதற்கானது என்று இருந்தது. இன்றைக்கு, 'பேசவும் செய்யலாம்' எனும் நிலைமைக்கு மாறிவிட்டது.** இதை நிறுவனக்கள் தங்களுடைய வளர்ச்சிக்காக பயன்படுத்துகின்றன. நமது தகவல்களை டிஜிடல் தகவல்களாக எங்கெங்கோஅனுப்பிக் கொண்டே இருக்கிறது. ஒரு லைவ் கிரிக்கெட் வர்ணனையைப் போல நம்மைப் பற்றிய தகவல்கள் சர்வர்களில்சேமிக்கப்படுகின்றன.

இந்தத் தகவல்கள் தான் நிறுவனங்களின் பணம் காய்க்கும் மரம். ஒரு ஜீன்ஸ் வேண்டும் என நீங்கள் ஏதோ ஒரு இணைய தளத்தில் கேட்டால், அதன் பின் நீங்கள் எந்த இணைய தளத்தில் நுழைந்தாலும், 'யப்பா.. உனக்கு ஏத்த மாதிரி ஒரு ஜீன்ஸ் இருக்கு பாக்கறியா ?' என அழைப்பு கேட்கும். 'ஒரு ஜீன்ஸ் வாங்கினால் ஒரு டிஷர்ட் ஃப்ரீ' என ஆசை காட்டும். 'இன்று மட்டும் ஐம்பது சதம் தள்ளுபடி என நம்மை தள்ளும்'. ஆள விடுங்க சாமி என எல்லாவற்றையும் மூடி வைத்தால் கூட 'அதிரடி ஆஃபர்' என ஒரு எஸ்.எம்.எஸ் வந்து நம்மை

17 ஆம் பக்கம் பார்க்க...



# எனக்கு பிடிக்கும் என்று உனக்கும் தெரிவது எப்படி?

## என்னை அறிந்தாய், நீ என்னை அறிந்தாய்

அதிர வைக்கும். நமது அறைகளுக்குள்ளே ஒருவன் அலைந்து திரிவது போல நமது விஷயங்களை எல்லாம் தொழில்நுட்பம் எடுத்து வைக்கும். போன வருஷம் அமெரிக்கா போனியே, இந்த வருஷம் ஜெர்மனி போறியா என கேட்கும். இந்த போட்டோ எடுத்து ஆறு மாசம் ஆச்சு என சொல்லும். இந்த சாப்பாடு சாப்டு எவ்ளோ நாளாச்சு ஸ்விகில ஆர்டர் பண்ணலாம்ல என உசுப்பும்.. எல்லாம் எல்லாம் இலாபத்தின் இலக்கில் நகரும் விளம்பர யுத்திகள்.

**கடைக்கு அஞ்சு ரூபா புளி வாங்கப் போகும் வீட்டம்மா ஆயிரம் ரூபா பொருட்களோடு வீட்டுக்கு வருவது போல, உங்களை உள்ளே இழுத்து ஒவ்வொன்றாய் காட்டி வாங்க வைப்பது தான் அவர்களின் தாரக மந்திரம்.**

இப்போ, இதில் இருக்கக் கூடிய மிகப்பெரிய சிக்கல் என்னவென்றால் தகவல் திருட்டு. இந்தத் தகவல்களை நாம் பயன்படுத்தும் ஆப்களோ, நமது இணைய சேவை வழங்கு நிறுவனங்களோ, நமது மௌபைல் கம்பெனிகளோ திருடிக் கொள்வதற்கான வாய்ப்புகள் உண்டு. மால்வேர்கள், வாட்ஸப் மெசேஜ்களாகவோ, மின்னஞ்சல் இணைப்புகளாகவோ நமது ஸ்மார்ட்போன் கதவைத் தட்டிக் கொண்டே இருக்கின்றன. நம்பிக்கையில்லாத லிங்க்களையோ, அட்டாச்மெண்ட்களையோ ஒரே ஒரு முறை கிளிக்கி விட்டால் கூட நமது தகவல்கள் தொலைந்து போக வாய்ப்பு உண்டு. திருடப்படும் தகவல்கள் எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்தப்படலாம் என்பது தான் அச்சத்தின் காரணம்.உங்கள் பணம் திருடு போகலாம். உங்கள் அந்தரங்க விஷயங்கள் திருடப்படலாம். அதை வைத்துக் கொண்டு உங்களை கயவர்கள் மிரட்டலாம். உளவியல் ரீதியாக உங்களுக்கு சிக்கல்கள் உருவாக்கலாம். இப்படி எது வேண்டுமானாலும் நடக்கலாம். எங்கே சென்றாலும் தூக்கி சுமக்கும் ஸ்மார்ட்போன்கள் தங்களது இருப்பிடத்தை எப்போதும் இன்னொரு இடத்துக்கு அனுப்பிக் கொண்டே இருக்கின்றன. ஜியோ லொக்கேஷன் எனப்படும் இந்த தகவல் நமது போனின் இருப்பிடத்தை துல்லியமாய்ச் சொல்லி, நாம்எங்கே இருக்கிறோம் என்பதை பதிவு செய்கிறது. நாம் மட்டுமல்ல, நமக்குப் பக்கத்தில் நமது நண்பர்களின் போன்கள் இருந்தால் எத்தனை பேர் எங்கே இருக்கிறோம் என்பதையெல்லாம் சொல்லிவிடும்.




அப்படின்னா லொக்கேஷனை ஆஃப் பண்ணிடலாம் பிரச்சினையில்லை என நினைப்பீர்கள். அது தான் இல்லை. இப்போது நமதுஇருப்பிடத்தை வெறும் லொக்கேஷன் சர்வீஸ் மட்டும் கண்டுபிடிப்பதில்லை. ஆஸிலரோ மீட்டர், பாரோ மீட்டர், மேக்னடோமீட்டர்உட்பட பல சென்சார்களும் போனின் இருப்பிடத்தைத் துல்லியமாய் கண்டு சொல்கின்றன.

அதே போல நாம் மொபைலில் இன்ஸ்டால் செய்யும் ஆப்கள் மிகப்பெரிய ஆபத்தின் திறவுகோலாய் இருக்க வாய்ப்பு உண்டு. ஆப்களைஇன்ஸ்டால் செய்யும் போது நாம் அது கேட்கின்ற அனுமதிகளுக்கெல்லாம் 'ஓகே ஓகே என சொல்லிக் கொள்கிறோம். நமதுகாண்டாட்க், கேமரா போன்றவற்றை இயக்கும் அனுமதியை நாமாகவே கொடுத்து விடுகிறோம். அது போலியான அல்லது பாதுகாப்பற்றஅப் ஆக இருக்கும் பட்சத்தில் நமது தகவல்கள் மிக மிக எளிதாக திருடப்பட்டு விடுகின்றன.

இப்போது சில புதிய திடுக்கிட வைக்கும் தனிமனித சுதந்திர மீறல்கள் வந்திருக்கின்றன. அதில் ஒன்று கேமரா ஹேக்கிங். நமதுமொபைலில் உள்ள கேமராவையோ, நமது கணினியில் உள்ள வெப்கேமையோ தொலைவிலிருந்தே இயக்குவது. கேமரா இயங்கிக்கொண்டிருப்பது, நமக்குத் தெரியாது. நமது செல்போன் கேமரா காட்டுகின்ற விஷயங்களையெல்லாம் தொலைவிலுள்ள சேமிப்புதளங்களில் சேமிக்கப்படும். அது எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தப்படலாம். அது நீங்கள் கழிவறையில் [Toilet] இருந்தால்கூட கருணைகாட்டாது.

இன்னொன்று போனிலுள்ள மைக்ரோபோன் மூலமாக நேர்கிறது. நமது உரையாடல்கள் நமக்குத் தெரியாமலேயே காது கொடுத்துக்கேட்கப்பட்டு இன்னொரு இடத்துக்கு அனுப்பப்படும் ஆபத்து அது. நாம் போனில் பேசுவது மட்டுமல்லாமல், போனை ஆன் பண்ணாமல்பேசுவதைக் கூட ரகசியமாய் ஒட்டுக்கேட்கும் ஆபத்து இதில் உண்டு. கூகிள் ஹோம், அலெக்ஸா, சிரி போன்றவையெல்லாம்எப்போதுமே நமது உரையாடல்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றன என்பது நினைவில் இருக்கட்டும்.

ஏற்கனவே ஒருவர் இன்னொருவரிடம் பேசுவதை ரெக்கார்ட் செய்யும் வசதிகள் இருக்கின்றன.இதனால் எவ்வளவு ரகசியமாய் நாம் கிசுகிசுத்தாலும் அது பொதுவெளியில் வரும் வாய்ப்பு உண்டு.

அதே போல நமது சேட்கள், மின்னஞ்சல்கள் எல்லாமே தொழில்நுட்பத்தின் கண்களால் வாசிக்கப்பட்ட பின்பு தான் அடுத்த நபருக்குச்சென்று சேர்கிறது. அடுத்தவருக்கு வருகின்ற லெட்டரைப் படிக்கக் கூடாது எனும் நாகரீகமும், அடுத்தவருடைய பேச்சை ஒட்டுக்கேட்கக் கூடாது எனும் நாகரீகமும் தொழில்நுட்ப உலகில் செல்லாக்காசாகி விட்டன. நாம் மொபைலில் எடுக்கின்ற போட்டோக்களை சில ஆப்கள் திருடுகின்றன என சமீபத்தில் ஒரு தொழில்நுட்பக் கட்டுரை சொன்னது. நமது புகைப்படத்தை வைத்து அது எங்கே எப்போது எடுக்கப்பட்டது போன்ற தகவல்களையெல்லாம் தொழில்நுட்பம் புட்டுப் புட்டுவைக்கிறது.

நவீன செல்போன்களில் ஏகப்பட்ட சென்சார்கள் இருக்கின்றன. நமது கை அசைவையும், கண் அசைவையும் கண்காணிக்கும் சென்சார்கள் இருக்கின்றன. நாம் எந்த மாடியில் இருக்கிறோம் என்பதைக் கூட பாரோ மீட்டர் எனும் சென்சார் அனுப்பும் செய்தியால்அறிய முடியும். சென்சார்களுக்கென ஆப்ஸ் தனி அனுமதி கேட்பதில்லை. எனவே எந்த ஆப் டவுன்லோட் செய்தாலும் இந்தசென்சார்கள் அதனுடன் இணைந்து கொள்ளும்.

நமது செல்போனில் நாம் டைப் செய்யும் விஷயங்களைத் திருடவும், நமது பாஸ்வேர்ட் போன்றவற்றை கண்டறியவும் கூடமென்பொருட்கள் உள்ளன. வெறுமனே மொபைலில் டைப் செய்து விட்டு டெலீட் செய்தால் கூட, எதையெல்லாம் டைப் செய்தோம்எதையெல்லாம் டெலீட் செய்தோம் என்பதையும் தொழில்நுட்பம் குறித்து வைத்துக் கொள்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இப்படி உங்களுடன் கூடவே இருந்து உங்களைப் பற்றிய அத்தனைத் தகவல்களையும் புட்டுப் புட்டு வைக்கின்றன ஸ்மார்ட்போன்களும், அதனுடன் இணைந்த நவீன தொழில்நுட்பங்களும். நாளை உங்களுடைய டிரைவிங் ஸ்பீடுக்குத் தக்கபடி உங்களுடைய கார்இன்சூரன்ஸ் அதிகரிக்கலாம், உங்களுடைய 'தண்ணி அடிக்கும்' பழக்கத்துக்கு ஏற்ப உங்களுடைய காப்பீட்டுத் தொகை அதிகரிக்கலாம். ஏன் உங்கள் அலுவலக பெர்ஃபாமன்ஸைக் கூட உங்கள் மொபைல் தரும் டேட்டாவைக் கொண்டே முடிவும் செய்து விடலாம்.

காதலி உதிர்த்துப் போட்ட பூ, சீவிப் போட்ட முடி, வெட்டிப் போட்ட நகம், மறந்து விட்ட மயில்பீலி எல்லாவற்றையும் சேகரித்து வைத்து அதை வைத்து காதலியை வசீகரிக்கும் காதலன் போல

28 ஆம் பக்கம் பார்க்க...



# Darkness Visible - Experiencing Enlightenment and Awakening

Bavvatharani R
Nallur



Humans, who are the highest creation of God, are given a great boon to get this birth to bring the birth cycle to an end.  We often speak that exploring our darkness is negativity, misconceptions, and cruelty. We believe that when we expose our darkness to the light it heals and give plenty of mysterious gifts and the hidden talents will be revealed. Hindu religion paves all the ways to make the people to choose the right path which is suitable for him to follow and get rid of the past and present karma to attain enlightenment.

**Mahashivratri – A Night of Awakening**

The fourteenth day of every lunar month or the day before the new moon, hence the full moon which falls on the Chaturdashi of Krishna Paksha every month is called Shivaratri. Among all the twelve Shivratris that occur every month in a calendar year, Mahashivratri occurs in Falgun month which is generally celebrated in February-March is of the most spiritual significance. The word Shivratri is formed by the amalgamation of two words, Shiv and Ratri, where Shiv means 'Lord Shiva' and Ratri means Night. Therefore, Shivratri means the night of Lord Shiva. It is a major festival in Hinduism annually observed in honor of Lord Shiva which is also known as 'Padmarajarathri' and 'The Great Night of Shiva'. This year the Maha Shivratri will be celebrated on Thursday, March 11.

Usually, the spiritual energy flow in a human body travels from moolatharam to Sahasrara (Crown) chakra through the spine vertically when a yogi tries to awake kundalini. On this particular night, the northern hemisphere of the planet is positioned in such a way that there is a natural upsurge of energy in a human being. This is a day when nature is pushing towards one's spiritual peak. Devotees worship Lord Shiva have strict fasting and do several religious practices to prepare their body pure and healthy to receive the eternal energy, control their mind and focus on worshiping Lord Shiva. They chant "Om Namah Shivaya" and "Mahamritunjaya" all night. They further believe that by pleasing Lord Shankara on the auspicious Shivaratri day, a person is forgiven of past sins and is blessed with Moksha or salvation.

People who live in family situations observe Mahashivratri as Shiva's wedding anniversary. Sati reincarnated as Parvati to become the consort of Lord Shiva. Hence, Mahashivratri marks the union of Shiva and Parvati on the 14th day of the dark fortnight in the month of falgun.

Maha Shivaratri also celebrates for another perspective that the night when Lord Shiva performed the "Tandav", the cosmic dance. Those with global ambitions see that day as the day Shiva conquered all his enemies.

Apart from such legends, because of the spiritual abilities it presents to a spiritual seeker this day and night have much importance in the yogic traditions. Celebrating Shivratri on a monthly basis, and also the particular day which Mahashivratri occurs, almost seems like celebration of darkness. Any logical mind would resist darkness and naturally select for light. But the word "Shiva" literally means "that which is not." "That which is," - Aum Thatvamasi - is existence and creation. "That which is not" is Shiva. "That which is not" means, if you open your eyes and look around, and if your vision is for small things, you will see many creations. If your vision is really looking for immense things, you will see the biggest presence in the existence is a vast emptiness.

Unlike the assumptions of older scientific theories, the space around us is not just empty space but instead it is filled by our auric field, or magnetic field. This auric or magnetic field is surrounding your body. Just like our physical bodies, it is very much living. When it is strong and healthy, the aura is bright and expands for several feets in all directions. It is your protection and projection which gives you an undeniable presence. With a strong, bright and charismatic aura you are centered, secure, and you can easily achieve your needs.



# உற்பத்தித்திறனுக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?



Dr.நிரோஷன் தில்லைநாதன் (ஜேர்மனி)



நாம் நமது உடல் மற்றும் மனதினை எப்படி ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துகிறோம் என்பதைக் குறிப்பதுதான் உற்பத்தித்திறன். இதனை அதிகப்படுத்தக் கற்றுக்கொண்டால் நாம் நமது உடலின் ஆற்றலைச் சரியான பாதையில் பயன்படுத்த முடியும். அட அதற்கென்ன? உடலில் சக்தி அதிகமாக இருந்தால், அதிக உற்பத்தித்திறன் வந்துவிடும் தானே என்று நீங்கள் நினைப்பவரென்றால் உற்பத்தித்திறனுக்கும், உடலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் அதற்குப் பின்னால் உள்ள அறிவியல் பற்றியும் கண்டிப்பாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நம்மிடம் ஆற்றல் அல்லது சக்தி அல்லது புத்திசாலித்தனம் அதிகம் இருந்தால் நமது உற்பத்தித்திறன் அதிகமாகிவிடும் என்று எண்ணுவது முற்றிலும் தவறு. ஏனென்றால் அதிகப்படியான ஆற்றல் நான் என்னும் அகந்தையை ஏற்படுத்திவிடும். அத்துடன் ஒரு அளவுக்கு மேல் முயற்சிக்காமல் நாம் சோர்ந்துவிட்டோம் என்கிற எண்ணத்தை நம்முள் விதைக்கக் கூடியது.

சில நேரங்களில் சில வேலைகளை நாம் ஆரம்பிக்கும் முன்னரே அதை நினைத்து பெரிதும் வருத்தப்படுவோம். இதுவரை கண்ட ஆராய்ச்சிகளின்படி செயல்க




ளைச் செய்ய ஆரம்பிப்பதே கடினமான வேலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் ஏதாவது ஒரு வேலையைச் செய்ய வேண்டுமா அல்லது வேண்டாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்காமல் அதையெல்லாம் ஒதுக்கிவிட்டு உடனடியாக ஆரம்பியுங்கள். ஏனென்றால் நமது மூளைதான் நமது முதல் சோம்பேறியான வேலையாள். அது நாம் ஒரு வேலையை எடுக்கும்போது அதிலிருக்கும் கடினமான பகுதிகளை உடனடியாக நமக்கு எடுத்துக் காட்டி அந்த வேலையைச் செய்ய வேண்டாமென்று தூண்டும். இந்த எண்ணத்தைச் சரி என்று நம்மை நம்ப வைக்க, பிற பொழுதுபோக்கு விஷயங்களில் செல்வதற்கு நம்மைத் தூண்டும்.

நாம் வேலை செய்யும்போது வேலைக்கு இடையூறாக இருக்கும் சின்ன சின்ன பொழுது போக்கு விஷயங்கள் நம்மை வந்து தொந்தரவு செய்யும், நாமும் நாம் இதுவரை முடித்த வேலைகளைவிட, முடிக்காத வேலைகள் மற்றும் இடையூறு செய்யும் வேலைகளை மனதில் அதிகளவில் நினைப்போம். இதற்கு உளவியலில் “Zeigarnik effect” என்று பெயர்.

அப்படியே ‘நேர மேலாண்மை’ அதாவது Time Management பற்றிப் பார்ப்போம். நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் அனைத்து வேலைகளையுமே குறித்த நேரத்தில் முடித்துவிட முடியும். ஆனால் நாம் அப்படியா செய்கிறோம்? உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

அதிகப்படியான பயிற்சிகள் கொடுத்து நம்மை நாம் பழக்குவதைவிடச் சரியான நேரத்தில் விருப்பப்பட்டு வேலைகளைச் செய்தால் விரைவாகச் செயலாற்ற முடியும். நாள் முழுவதும் வேலை செய்வதைவிட, ஒவ்வொரு நேரத்திற்கும் சரியான வேலையை ஒதுக்கி அதை முடிப்பது உற்பத்தித்திறன் பெருக்கத்திற்கு வழிவகுக்கும். உதாரணமாக ஒரு வேலையில் கடினமான பகுதி எது என நீங்கள் நினைக்கிறீர்களோ அதை முதலில் முடித்தால் உங்கள் மனதுக்கு ஆறுதலாக இருக்கும். அத்துடன் அந்த வேலையில் மீதமுள்ள பகுதியை மிக எளிதாகவும் விரைவாகவும் உங்களால் முடிக்க முடியும்.

சரியான நேர மேலாண்மை செய்தால் வேலை மற்றும் இடைவெளி எனச் சீராக வேலையை முடிக்க முடியும். இது குறித்து ஆய்வு மேற்கொண்டவர்கள் கண்டறிந்த விஷயங்களில் ஒன்று, உலகின் முன்னணி வயலின் வாசிப்பாளர் 90 நிமிடங்கள் வேலை செய்தால் அதைத் தொடர்ந்து 15 முதல் 20 நிமிடங்கள் வரையிலான ஓய்வை எடுத்துக்கொள்கிறார். நாள் முழுவதும் தொடர்ந்து வேலை செய்வதற்குப் பதில், வேலை மற்றும் ஓய்வு எனப் பகுதிகளாகப் பிரித்து வேலை செய்வது உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும்.

இதை எல்லாம் படிக்கும் போது, நாமும் இப்படித்தான் வேலை செய்ய வேண்டுமென நீங்கள் வேலைகளைத் தொடங்கலாம், ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. ஒரு வேளை குறித்த



நேரத்தில் அதை முடிக்கவில்லை என்றால் என்ன செய்வது? அப்படிப்பட்ட நிகழ்வு நடக்காமலிருக்க உங்களது காலண்டரில் நீங்கள் முடிக்க வேண்டிய இலக்குகளைக் குறித்து வைத்துக்கொண்டு அதற்கு ஏற்றவாறு வேலை செய்யுங்கள். இப்படி காலக்கெடு வைத்து வேலை செய்யத் தொடங்கியபின், ஒவ்வொரு காலகட்டத்திலும் நீங்கள் செய்த வேலையை அட்டவணையிட்டுப் பாருங்கள். இதன் மூலம் வேலை நேரங்களில் தேவையற்ற பொழுதுபோக்கு விஷயங்கள் உங்களைத் தொந்தரவு செய்வது குறையும்.

பொதுவாக நாம் செய்யும் பெரிய தவறு என்ன தெரியுமா? பல பணிகளை ஒரே நேரத்தில் செய்வது தான். அதன் மூலம் நாம் பல செயல்களை வெற்றிகரமாகச் செய்வதுபோல் தோன்றலாம், ஆனால் உண்மையில் அப்படி இல்லை. இப்படிப் பல பணிகளைச் செய்வதற்குப் பதிலாக முந்தைய நாள் இரவில் நாம் தூங்கச் செல்வதற்கு முன்பு அடுத்த நாள் செய்யவேண்டிய செயல்களைப் பட்டியலிட்டு வைக்கலாம். பெரிய வேலையாக இருந்தால் அதை சிறியதாகப் பிரித்துச் செயல்படுத்தலாம். இவ்வாறெல்லாம் செய்தால் உங்களின் உற்பத்தித்திறன் மற்றும் செயல்பாட்டு வேகம் அதிகரிக்கும்.

சுருக்கமாகச் சொல்லப் போனால் கஷ்டப்பட்டு வேலை செய்தால் வெற்றி பெற முடியாது, அந்த வேலையை இஷ்டப்பட்டும் செய்தால் தான் வெற்றியைத் தொட முடியும்.

கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தை எனது முகநூல் பக்கத்தில் பதிவுசெய்யவும். (www.facebook.com/scinirosh)



மாதொரு பாகன் திருமண சேவை
யேர்மனி

அன்பான எமது தமிழ் உறவுகளே வீட்டில் இருந்தபடியே வரன்களை தேடலாம்!. அனைத்து சமுதாயத்தினருக்கும் நல்லதொரு மணவாழ்க்கை மலர்ந்திட எங்களை அணுகவும். முற்றிலும் இலவசமாக திருமண பொருத்தம் துல்லியமாக கணித்து கொடுக்கபடும்.



தொடர்புகளுக்கு:
Tel:49 015738324103

Asia Lebensmittel

Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany




+49 176 62728598 | 020289012114



Wuppertal நகரில்...
உங்கள் இல்லத்திற்கு வேண்டிய அனைத்து மளிகைப் பொருட்கள் மற்றும் பசுமையான மரக்கறி வகைகளுக்கும் கடல் உணவு வகைகளுக்கும் இன்றே நாடுங்கள்

மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)


Jaffna Bazar
Jaffna Bazar
2021 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுங்கள்!
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

கரிணி (ஜேர்மனி)



# அச்சமும், மகிழ்ச்சியும் சேர்ந்து இருக்க முடியாது

ஆதியிலிருந்து மனிதன் தனக்கு மிஞ்சிய, தன் அறிவுக்கு எட்டாத விடயங்களான இயற்கை சீற்றங்கள், இடி மின்னல், கொள்ளை நோய்கள் போன்றவற்றால் அச்சத்துக்குள்ளாகி வந்துள்ளான். தொன்று தொட்டே தன்னை வஞ்சிக்கிற விடயங்கள் இருப்பதாக எண்ணி பயம் கொண்டுள்ளான்.

எனவே தன் பாதுகாப்பிற்காக தன்னை தானே சிறை வைத்து பூட்டிக் கொள்ளும் அதிசயமான பிறவியானான். அதையும் தாண்டி மனிதன் தன் அறிவு மற்றும் தொழிநுட்ப வளர்ச்சியில் தன்னிறைவு அடைவதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி தன்னை பலவானாக காட்டிக் கொள்ள வேண்டுமென பயம் கொண்டு, முயன்று தோற்றுப் போகிறான்.

மனிதன் மட்டுமே எதிர்காலத்தை பற்றிய கற்பனையிலும், இறந்தகால சம்பவங்களை மீட்டு மீட்டுப் பார்ப்பதனாலும் நிகழ்காலத்தை தவற விடுகின்றான். எதிர்காலம் பற்றிய அச்சம் மற்றும் ஏற்கனவே நடந்துவிட்ட சம்பவங்கள் மீண்டும் சம்பவிக்குமோ என்ற பயத்தினால் நிகழ்காலத்தை தவற விடுவதுடன் வரப்போகும் எதிர்கால நிகழ்வுகளை எதிர் கொள்ளும் முன்னமே கற்பனையில் தன் நேர்மறை மற்றும் எதிர்மறை எண்ணங்களுக்கமைய தன்னை குழப்பியும் கொள்கிறான்.

மனித மனமானது அதிக தகவல்களை சேகரித்து வைத்துள்ளமையே தேவையற்ற அச்சத்தை உண்டுபண்ணுகிறது. தகவல்களை சேகரிப்பதை விட அவற்றை உணர்வுபூர்வமாக உணர்ந்திதலே நன்று. உதாரணமாக ‘பேய்’ என்ற ஒன்று இருக்கிறதோ இல்லையோ அதை எதிர் கொண்டவர்களை விட பேய் தொடர்பான கதைகளைக் கேட்டு அதன் கற்பனையில் பயத்தோடு வாழ்பவர்களே அதிகம். தனக்கு தானே வகுத்து வைத்த சூழலும், தன்னை சுற்றி தான் போட்ட எல்லைக் கோடுகளும் அவை சிதையவோ, அல்லது தாக்கப்படவோ கூடாதென அதை தக்க வைக்க எடுக்கும் அன்றாட பிரயத்தனங்கள் தனது அச்சத்தை என்றுமே அதிகரிக்கும்.

ஒரு விடயம் இப்படித்தான் நடக்கவேண்டும் என மனம் முடிவு செய்து எதிர்பார்த்து ,இருக்கும் போது அந்த விடயத்தில் மனம் குவிந்து செறிவடைகிறது. அந்த விடயம் நடக்காதவிடத்து அதில் எதிர்ப்புணர்வு உருவாகி அச்சத்தை உருவாக்குகிறது.

இதுவும் கடந்து போகும் என்பதே அன்றாடம் பெறும் அனுபவங்கள். எதுவும் நாம் நினைத்தது போன்று முழுமையாக இருந்ததில்லை, இதே நிலையை என்றுமே நிரந்தரமாக பிடித்து வைக்கவும் முடிவதில்லை. அப்படி இருக்கையில் துன்பமோ, இன்பமோ எப்பேற்பட்ட சூழலும் மாறிவிடத்தான் போகிறது. எதிர்காலம் குறித்த பயம் நிகழ்காலத்தில் இருக்கின்ற சக்தியை உறிஞ்சிவிடும்.

புலியிருக்கும் காட்டில் தான் மான் வாழுகிறது, பருந்து பறக்கும் பிரதேசத்தில் தான் அணில்களும் இயல்பாகவே வாழ்கின்றன. இயற்கையின்படி சவால்களையும், அடுத்தடுத்த சுவாரசியங்களையும் கொண்டதே வாழ்க்கை. புதிய புதிய பரிணாமங்களோடே அடுத்து வரும் மணித்துளிகள் விரிகின்றன. இவற்றில் இயற்கைக்கு என்றும் பஞ்சமிருப்பதில்லை.

எந்தவொரு விடயத்தையும் எதிர்கொள்வதை விட அதனிடமிருந்து தப்பிப் போக முயன்றால் பெருமளவு போராட வேண்டியிருக்கும். அந்த பிரச்சனையால் ஏற்படும் போராட்டம் குறைந்த அளவிலும், அது சார்ந்த கற்பனை, மற்றும் பயத்தாலான போராட்டம் அதிகமாகவும் இருக்கும். எனவே ‘முடியும் வருவதை பார்த்துக்கொள்ளலாம்’ என்ற துணிவானது சாதிப்பதற்கான சக்தியை தந்து விடும்.

உதாரணமாக எதிரே ஒரு நாய் கடிப்பதற்கு துரத்துகிறது என்று வைத்துக் கொள்வோம். பயத்தில் ஓடிக்கொண்டே இருந்தால் நாயின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியுமா? மாறாக நாய்க்கு தன் மீது அதிக நம்பிக்கையும் மேலும் பலமும் வந்து உங்களை கடிப்பதை இன்னும் நோக்கமாக நெருங்கும். அதே நீங்கள் பயமின்றி அதனை எதிர் கொண்டு திருப்பி துரத்தினாலோ அல்லது உங்கள் அசைவில் பயம் வெளிப்படவில்லை என்றாலோ எந்த விலங்கும் நிலை சிறிது குழம்பிப் போகும். சற்று பின் வாங்கும். பயம் கொள்ளும் போது எம்மைச் சுற்றியுள்ள சக்தியோட்டம் சுருங்குவதால் வெப்ப அலைகள் குறைந்து குளிர்வடையும். இது மற்ற விலங்குகளின் பார்வைக்குப் புலப்படும். இவற்றை வைத்தே பாம்பு போன்ற பிராணிகள் உடனடியாக தாக்குவதும், பின்வாங்குவதும். இவ்வாறே வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களும் இருக்கின்றன. தன்னம்பிக்கையோடு கூடிய துணிவுள்ள அதிர்வலைகளை இலகுவில் எந்த எதிரான இலக்கும் தாக்குவதில்லை.

இருள் நிறைந்த சூழலில் அகப்படும் போது அல்லது மின்சாரம் திடீரென தடைப்படும் போது அந்த மை இருளில் பயம் கொண்டவர்களுக்கு எப்படிப்பட்ட கற்பனைகள் உருவாகும்? காது மிக நுண்ணிய அதிர்வுகளை கேட்கும் படி கூர்மையாகும், கண்கள் அகல விரியும், புலன்கள் ஆயத்த நிலையில் இருக்கும், ஆனால் மனமோ ஆயிரம் எதிர்மறை வடிவங்கள், நிகழ்வுகளை உருவாக்கி அச்சத்தை ஏற்படுத்தும். சிறு அதிர்வு கூட ஒரு பயங்கர உருவத்தை மனக்கண்ணில் கொண்டு வந்துவிடும். திடீரென வெளிச்சம் வந்தவுடன் எல்லாமே இயல்பு நிலையில் இருப்பதை பார்த்தவுடன் இதுவரை இருந்த உயிரை உலுக்கும் பயம் வீணாக இருக்கின்ற சக்தியை உறிஞ்சி விட்டதையும் அது அநாவசியமான பதற்றம் என்பதையும் உணர முடியும். இங்கு நிகழ்வை விட தேவையற்ற எதிர்மறையான கற்பனைகளே அதிக அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே கற்பனையான மனமே இத்தகைய பலவீனத்தை ஏற்படுத்துகிறது. பயம் வேறு பக்தி வேறு. பயமானது மனதின் சக்தியை சுருங்கச் செய்து ஆற்றலை உறிஞ்சி விடுகிறது. ‘துணிவே துணை’ என வாழ்ந்து பார்த்த அனுபவசாலிகள் சொல்லிச் சென்றுள்ளனர். மகிழ்ச்சி இருக்கும் போது பயம் விலகிவிட்டதை உணர முடியும். இரண்டும் ஒருபோதும் சேர்ந்து இருக்கவே முடியாது. ஆகவே உள்ளிருந்து கொண்டே சக்தியை உறிஞ்சும் விடயங்களைக் களைந்து மகிழ்வான வாழ்வு நிலைபெற பெற அச்சம் தவிர்ப்பீர்.

அச்சம் விலகும் போதே வாழ்வு தொடங்குகிறது.







மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)



# நாம் பெண்கள் என்பதில் எமக்கும் மகிழ்ச்சியே!

அபிரா இரகுநாதன் சிவப்பிரகாசம் (யேர்மனி)

நாம் பெண்கள் இவர்கள் பெண்கள்தானே, என்ன செய்து சாதித்துவிடப் போகிறார்கள் என்று சிலர் நகைப்பார்கள். நாம் வெறும் பெண்கள்தானா ? இல்லை நாம் இந்த பூமியின் பிரமாண்டம். அந்தப் பிரமனே செதுக்கிய ஓர் அழகிய ஓவியம். ஓடுகின்ற நதி போல நீளமான கருங்கூந்தல் கொண்டு, அதில் பூவை வைத்து, வண்ண வண்ணமாய் ஆடைகள் அணிந்து, பள பளக்க தங்கம் வைரம் என்று நகை அணிந்து, இதழின் ஓரத்தில் சாயம் பூசி, செந்தழிப்பான முகத்தில் பொட்டு வைத்து, அழகுக்கு மறு பெயராய் இருப்பவர்கள் பெண்கள். இன்றைய நவீன வாழ்க்கையில் அணியும் உடைகளும் ஆபரணங்களும் மாறினாலும் கூட பெண்கள் அழகு தான். பாத அணிக்கு ஏற்றபடி ஜாக்கெட், நகப்பூச்சுக்கு ஏற்றபடி கைப்பை, ஏன் இந்தக் கோவிட் 19 காலத்தில் முகக்கவசம் கூட மெட்சிங் மெட்சிங் தான்.கண்ணாடியில் நாம் நம்மை ரசிப்பதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களையும் ரசிக்க வைத்து மெய்மறக்கச் செய்வோம்.சில பேருக்குக் கனவுக் கன்னியாகக் கூட இருப்போம்.

அழகு என்பதைத் தாண்டி பெண் என்பவள், பல ஸ்தானங்களைக் கொண்டவள். பிறக்கும் போது மகள் என்ற ஸ்தானம் உருவாகி, நம்மைப் பெற்றவர்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுக்கிறாள். மகாலட்சுமி, தேவதை என்று செல்லமாய் அழைப்பதைப் பார்த்திருப்பீர்கள். வளரும் போது சகோதர ஸ்தானம் கிடைக்கிறது. ஓர் அக்காவாகவும் ஒரு தங்கையாகவும் நம் உடன்பிறப்பைப் பாதுகாத்து நல்வழியைக் காட்டுவாள் .அவர்களோடு மறக்கமுடியாத இனிய நினைவுகளை உருவாக்குவாள்.அரிவைப் பருவத்தில் மனைவி என்று, இன்னும் ஒரு ஸ்தானம் அவளுக்கு வந்துசேரும். கணவனைக் காதலாலும் புகுந்த வீட்டை அன்பாலும் அரவணைப்பாள். ஓமோம் உங்கள் மைண்ட் வொய்ஸ் நல்லாவே கேட்கிறது ! ‘‘இந்த காலத்தில் புகுந்த வீட்டை அரவணைக்கிறார்களா?’’ என்று தானே யோசிக்கிறீர்கள் ? ஆம் ! கண்டிப்பாக அப்படிப் பட்ட பெண்கள் இன்னும் இருக்கிறார்கள். புதிய சுற்றுச் சூழல் வாழ பழகிக் கொள்வார்கள். அவர்களை முழுமை அடையச்செய்யும் ஸ்தானம் தாய் என்ற ஒரு மகிமையான வரம். தாயாகவும் குருவாகவும் கவசமாகவும் இருந்து பெற்றெடுத்தவர்களைக் காப்பார்கள்.

அத்துடன் நின்றுவிடவில்லை.

பெண் என்பவள் சுமைதாங்கி பலவிதமான பொறுப்புகளையும் பிரச்சனைகளையும் தாங்குவாள். உணர்வுகளைக் கண்ணீர்த்துளியாய் சிந்துவாள். சோர்வையும்

சோகத்தையும் காட்டிக்கொள்ள மாட்டாள். ஒரு காலத்தில் ஆண்களுக்கு அடங்கியவளாய், சமுதாயத்திற்குக் கட்டுப்பட்டவளாய் வாழ்ந்தாள். ஆசைகள் இல்லாமல் கனவுகள் காணாமல், குரல்களை எழுப்பாமல், கருத்தை வெளிப்படுத்தாமல், தலையாட்டி பொம்மை போல் வாழ்ந்தாள். நவீன காலத்தில் கூட இப்படிப் பட்ட பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயம். இது மாற வேண்டும். மாற்ற வேண்டும்.மாற்றுவோம் !

பெண் என்பவள் நெருப்பிற்கு ஈடானவள். கோவத்தை அனலாய் காட்டுபவள். அவளின் பொறுமை நைல் நதி போல் போய்க்கொண்டே இருக்கும்.ஆனாலும் பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதையும் உணரத் தவறமாட்டாள். அக்கணங்களில் காட்டுத்தீயாய் மாறிவிடுவாள். மதுரையை எரிக்கக் கண்ணகியால் மட்டும் தான் முடியுமா? வீரம் கொண்டவள் பூலான் தேவியாகத்தான் இருக்க வேண்டுமா? ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒரு கண்ணகியும் , பூலான் தேவியும் வாழ்கின்றனர். பெண்ணைப் பத்ரகாளி, இராட்சசி, திமிர் பிடித்தவள் என்று சொல்வதைக் கேட்கும் போது வேடிக்கையாய் இருக்கும்.

போராட்டம் நமக்கு அன்றாடம். தைரியமாய்த் தலை நிமிர்ந்து சாதிப்போம்.வலிமை கொள்ளுவோம். இன்றைய காலத்தில் ஆண்களுக்குச் சமமாக நம்மை நாமே மாற்றினோம். சமுதாயத் தடைகளைத் தாண்டி நம் அங்கீகாரங்களைப் பெற்றோம்.நம் கருத்துகளை அழுத்தமாகப் பதிவு செய்தோம். அடக்குமுறைகளை அழித்துக் காட்டினோம். பல துறைகளில் முன்னின்று வேலை செய்தோம். விமானம் ஓட்டினோம். கப்பல் ஓட்டினோம் ஏன் விண்வெளிக்குக் கூடச் சென்று வந்து சாதனை படைத்தோம். புதுமைப் பெண்ணாய் மாறினோம்!

நாம் உருவத்தில் மென்மையும், பலவீனமும் உள்ளவர்கள் . ஆனால் எம்மால் எவ்வளவு முடியும் என்பதை சில நேரம் எங்களுக்கே தெரிவதில்லை.ஒரு அழகிய சிரிப்பிற்குப் பின்னால் எவ்வளவு வலிகள், எவ்வளவு போராட்டம், எவ்வளவு பாரபட்சம்.எல்லாவற்றையும் தாண்டி, தடைகளை மீறி எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாக வாழ்ந்து சாதிப்போம்.நாம் பெண் என்பதில் எமக்கு மகிழ்ச்சியும் பெருமையுமே!

**தங்கத்தாமரை (கவித்துளி)**




# வெற்றிமணி திருமண சேவை

## நீங்களே பேசிக்கொள்ளுங்கள்




யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஜெர்மனியில் nordrhein westfalen பகுதியை வசிப்பிடமாகவும் இருக்கும் பெற்றோர். ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த WHOLESALE CUSTOMER MANAGER ஆக பணியாற்றும் தங்கள் 27 வயது மகனுக்கு கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்த நல்ல குணமடைய மணமகளை தேடுகின்றனர் பெற்றோர். உறவினர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- (0049)- 017691481889




சாவகச்சேரி பிறப்பு இடமாகவும் இங்கிலாந்து Cambridge (uk) வசிப்பிடமாகக் கொண்ட 44 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (தொழில் அதிபர் : 9 வயதுடைய மகள் அவருடன் வசிக்கிறார்)

Tel:00447867805901

Cousin number number




ஜெர்மனியை வதிவிடமாகக் கொண்ட 27 வயது மணமகனுக்கு செவ்வாய் தோஷம் உள்ள மணமகள் ஜெர்மனியை வதிவிடமாகக் கொண்டவரை எதிர்பார்க்கிறோம். மணமகன் கல்விப் தகமை ( m.sc Account Manager) உயர் சைவ வேளாள். 38 புள்ளி கிரகபாவம் விரும்பத்தக்கது. திருமணத்திற்கு பின்மணமகன் வசிக்கும் நகரில் வசிக்க விரும்புபவர்கள் விரும்பத்தக்கது. பெற்றோர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.தொடர்புகளுக்கு:- 4915736472292

மணமகள், மணமகன் தேவைகளை பிரசுரிக்கலாம்.
3 தடவை பிரசுரிக்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

விளம்பர தொடர்புகள்:
வட்சப்பில்: 00491631992334.
ஆன்மிகத் தென்றல் : த.புவனேந்திரன்
Telefon: +49 172 83 42 116



# இழக்கப்போகிறோமா ஈழத்தின் இன்னும் ஒரு நிலத்தை?

சர்மிலா வினோதினி
B.A.Geo,Spl, Dip in Mass Media, MSc (தாயகம்)

**நாம்** வாழும் இந்தப் பூமியின் நிலமும் நீரும் பல வழிகளில் தன்னை மீள் அமைத்துக் கொள்கிறது. அதன் காரணமாக அதன் இருப்பு உறுதி செய்யப்படுகிறது. இப்படி மீளமைக்கப்படும் வளங்களின் செறிவும் அதன் நிலைத்திருப்புமே வளமான ஒரு நாட்டின் எதிர்காலத்தினை தீர்மானிக்கின்றன. இந்நிலையில் ஒரு நாடு தான் கொண்டிருக்கிற வளங்களில் சரிவுகளை சந்திக்குமாக இருந்தால் அது அந்த நாட்டின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார நிலமைகளில் தாக்கங்களைச் செலுத்தும்.

இவ்வாறு இலங்கையின் சுற்றுச்சூழல் கட்டமைப்பில் தாக்கங்களை நிகழ்த்தக்கூடிய பல விடயங்கள் நாளுக்கு நாள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானது மண் கனியவள அகழ்வாகும். இலங்கையின் அனேகமான தாழ்நில கரையோரப் பிரதேசங்களில் மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

இவற்றில் அண்மைக்காலத்தில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கவனத்தினை ஈர்த்த விடயமாக மன்னாரின் இல்மனைற் உட்பட்ட கனிய வளங்களை அகழ்வதற்கான பரிசோதனை முயற்சிகள் காணப்படுகின்றன.

## மன்னார் தீவும் கனிய வளங்களும்

பெருநிலப் பரப்பு, தீவகம் என்று இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டிருக்கிற மன்னார் மாவட்டத்தின் தீவக நிலப்பரப்பானது ஒப்பீட்டளவில் அதிக சனத்தொகையினை பதிவு செய்கிறது. சுமார் 28 கிலோமீற்றர்கள் நீளமும், 06 கிலோ மீற்றர்கள் அகலமும் கொண்டு சுமார் 140 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பல்லுருவத் தன்மையான கடற்கரைகளையும் கொண்டு காணப்படுகிறது. இங்கிருக்கக்கூடிய காணிப்பயன்பாட்டு கோலங்களில் குடியிருப்புக்கள் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்தப் படுகின்ற நிலங்கள் தவிர ஏனைய நிலப்பயன்பாட்டில் இங்குள்ள மணற்குன்றுகளும் கரையோர மணல் வளங்களும், பனை வளமும், கண்டற்தாவரப் பரம்பலும் முக்கியம் பெறுகிறன.

இவற்றில் இங்குள்ள மணல் குன்றுகள் சுமார் 8000 வருடங்களுக்கு முற்பட்ட புவியியல் வரலாற்றுக் காலம் தொட்டு இயற்கை காரணிகளால் இப்பிரதேசத்தின் கரையோரங்களில் படியவிடப்பட்டுள்ளன என்பதை புவிச்சரிதவியல் ஆய்வுகள் உறுதிசெய்கிறன. அத்துடன் இக்கனிய வளங்களின் படிவிற்கு செல்வாக்கு செலுத்திய காரணிகளில் மன்னார் தீவின் புவியியல் அமைவிடமும் பிரதான பங்கு வகிக்கிறது. வரலாற்றுக் காலம் தொடக்கம் மெல்ல மெல்ல நிகழ்ந்த இக் கனிய மணற் படிவுகள் தீவின் கரையோர பாதுகாப்பில் முதன்மை வகிப்பவையாகவும் காணப்படுகின்றன. திரளான இக் கனிய மணற் படிவுகளை மன்னார் தீவின் வடக்கு மற்றும் வட கிழக்கு கரையோரங்களிலும் பேசாலை மற்றும் தலைமன்னாரை அண்டியுள்ள பல பிரதேசங்களிலும் அவதானிக்க முடிகிறது.



## கனியவள அகழ்வு முயற்சிகள்.

2013, 2014 ம் ஆண்டுகளில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் வடகிழக்குப் பிரதேசங்களில் காணப்படும் நிலம் சார்ந்த வளங்களை பிணக்குகளற்று உரிய முறையில் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட காணிப்பயன்பாட்டு வரைபடங்கள் பிரதேச ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் தயாரிக்கப்பட்டன. இந் நிலையில் 2010 மற்றும் 2014ம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்ரேலியாவின் பேத் பகுதியை தலைமை அலுவலகமாக கொண்டுள்ள ரைற்றானியம் சான்ட் நிறுவனத்தின் ஈடுபாட்டுடன் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் அனுமதியுடன் தீவிலுள்ள கனிய மணல் தொடர்பான துளையிடல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் தொடர் ஆய்வு நடவடிக்கைகள் 2016, 2017ம் ஆண்டுகளிலும் நிகழ்த்தப்பட்டு இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்ட மண் மாதிரிகள் தென்ஆபிரிக்காவின் விசேட கனியவள ஆய்வுகூடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு 2018 ல் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆய்வின் முடிவில் தடித்த படை அமைப்பில் இல்மனைட் உட்பட்ட முக்கிய கனிய வளங்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன் அவற்றினை அகழ்ந்து எடுப்பதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அகழ்வு தொடர்பான அரசின் நியாயப்படுத்தல்கள்

போருக்கு பின்னரான இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுலாத்துறையினை ஊக்குவித்தல் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி வருவதாகவும், மன்னார் தீவின் இக் கனிய வளங்களுக்கான சர்வதேச சந்தையை சீனா உட்பட்ட நாடுகளில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடுகிறது. அதே நேரம் சுரங்க மற்றும் கனியவள அகழ்வின் மூலம் சுமார் 2.9 வீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தி பெறப்படுவதாகவும், மன்னாரில் மேற்கொள்ளப்பட இருக்கும் கனியவள அகழ்வின் மூலம் இம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதததில் அதிகரிப்பினை ஏற்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்தலாம் எனவும் நியாயப்படுத்தப் படுகிறது.

## சுற்றுச்சூழல் நிலமைகள்

காலநிலை மாற்றத்தால் அழிவுகளை சந்திக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை

27 ஆம் பக்கம் பார்க்க...

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com





finma : 34598 cicero : 25605



# இலக்கியத்தில் இவர்கள்... 08

# கல்லா இளமை

கௌசி (ஜேர்மனி)

இற்றைக்கு முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் இலங்கை மண்ணிலிருந்து உயிர் மட்டும் இருந்தால் போதும் என்று நினைத்தவண்ணம் பல தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் செய்து மக்கள் பலர் புலம்பெயர்ந்தனர். அன்று அவர்களுக்கு இளமைத் துடிப்பும், பலமும், துணிவும் மிதமாக இருந்தன. அவர்கள் எண்ணங்களில் உழைப்பு, ஊக்கம், உயர்வு என்பன மட்டுமே நிறைந்திருந்தன. வாழுகின்ற நாட்டிலே ஓடிஓடி உழைத்து ஓடாய்த் தேய்ந்து தம்மை நிலைநிறுத்தினார்கள். இவ்வாறு வாழ்ந்த ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மாறாத வடுக்களும் மறக்க முடியாத ஒவ்வொரு கதையும், நெஞ்சை விட்டு அகலாத நினைவுகளும் நிறைந்திருக்கும்.

அன்று இருந்த துடிப்புக்களும் சுறுசுறுப்பும், உடற்தென்பும் வற்றிப்போன நிலையில் வாழ்க்கையை விட்டு ஒவ்வொருவராகக் கழன்று கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் வயதான பலரும் தம்முடைய நினைவின் அலைகளைப் பின்நோக்கியே பயணிக்கச் செய்கின்றார்கள். பேசுவதற்கு வாய் திறந்தவுடன் நான் அந்தக்காலத்தில் என்று ஆரம்பிப்பது வழக்கமாகி விடும். கடந்தகால நினைவுகளை காண்போரிடம் சொல்லி இன்பம் அனுபவிப்பது வழக்கமாகி விடுவது கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. தம்முடைய உடல் இங்கே மனம் அங்கே என்பது போல் தாயகத்துத் தெப்பக்குளத்தில் மூழ்கி எழுந்து ஏரியிலே நீச்சலடிப்பது, மாமரநிழலிலே இருந்து மாம்பழங்கள் உண்பது, பழஞ்சோற்றுக் கஞ்சியிலே ஊறுகாய் சேர்த்து உண்பது, தென்னை மரத்தின் கீழ் இருந்து தென்னங்கள்ளுக் குடிப்பது, பனம்பழத்தை கடித்திழுத்து பாதிச்சுவையுடன் காதலிக்குப் பகிர்ந்தளிப்பது உண்பது, சுவைபட நாவூறப் பேசிப்பேசி மகிழ்வது, நண்பர்கள் குழாமுடன் கூடிக் குதூகலித்துத் தம் இளமைக்கால சுறுசுறுப்பும், பெண்களிடம் வம்புச்சண்டை போடுவதும் வாலிபத் திமிர்வெட்டாக வீர விளையாட்டுக்களில் ஈடுபட்டதையும் நினைத்து நினைத்து இன்புற்றிருப்பதும் தம்முடைய பேரப்பிள்ளைகளிடம் சொல்லி மகிழ்வதும் முதுமைக்கால வழக்கம்.

இவ்வாறே புறநானூற்று 243 ஆவது பாடலிலே ஒரு முதியவர் பாடுவதாக இப்பாடல் அமைந்திருக்கின்றது. இப்பாடலை தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் புலவர் பாடுகின்றார்.

இனிநினைந் திரக்க மாகின்று
திணிமணற்
செய்வுறு பாவைக்குக்
கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு
கைபிணைந்து
தழுவுவழித் தழிஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொடு
உயர்சினை மருதத்
துறையுறத் தாழ்ந்து
நீர்நனிப் படிகோடேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத்
துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற்
கொண்டகல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு
கொல்லோ
தொடித்தலை விழுத்தண்
டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே!



பல முதியவர்கள் ஒன்றாகச் சேர்ந்து இருக்கின்ற ஒரு சபை. அதிலே முதியவாகள் தம்முடைய இளமைப் பருவத்தைப் பற்றி உரையாடிக் கொண்டு இருக்கின்றார்கள். அப்போது கையிலே இரண்டு பக்க நுனிகளிலும் இரும்புப் பூண் பிடித்த தடியை வைத்துக் கொண்டு தொடித்தலை விழுத்தண்டினார் என்று பாடல் மூலம் இப்பெயரைப் பெற்ற புலவர் ஏக்கத்துடன் தன் எண்ண அலைகளை மீட்டுப் பாடுகின்றதாக இப்பாடல் அமைந்திருக்கின்றது.

குளிர்ந்த பொய்கையின்கண் செறிந்த மணலிலே செய்யப்பட்ட பாவைக்கு பறிக்கப்பட்ட பூவைச் சூடி மகிழும் பெண்களுடன் கைகோர்த்து அவர்கள் தழுவினவிடத்தே தழுவி, அசைந்த இடத்து அசைந்து ஒளித்துச் செய்கின்றவை அறியாத வஞ்சனை அறியாத இளமைந்தருடனேயே கூட உயர்ந்த கிளைகளையுடைய மருத நில மரங்கள் நிறைந்த ஆழமான நீரையுடைய துறையிலே வந்து நீருக்கு அண்மையில் அமைந்திருக்கும் மரக்கொம்பிலே ஏறி கரையிலே இருப்பவர்கள் வியக்கும்படியாக நீர்த் திவலை தெறிக்க பொய்கைக் குள்ளே பாய்ந்து நீந்தி ஆழச் சென்று அங்குள்ள ஆழக்கடல் மணலை அவர்களுக்கு கையிலே அள்ளி எடுத்து வந்து காட்டிய அந்த பயம் அறியாத இளமை இப்போது எங்கே இருக்கின்றது? விழுதினால் செய்யப்பட்ட பூண் போடப்பட்ட பிடியையுடைய கொம்பினாலான தடியை ஊன்றி இருமலிடையே சில சொற்கள் மட்டுமே பேசக்கூடிய முதுமையாளர்களாகிய எமக்கு அந்த இளமை இன்று உண்டோ. அந்நிலை நினைந்து இரங்கத்தக்கதாகும் என்று இப்பாடலைப் பாடுகின்றார்.

கடந்து சென்ற நாட்கள் இப்போது நினைத்து ஏங்கினாலும் வருவதில்லை. ஆனால், அதே விளையாட்டு, அதே துடிப்புடன் இன்றைய இளையவர்களைக் காணும் போது அன்றைய நிலையை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. அது எந்தக் கண்டம் கடந்தாலும் ஒவ்வொரு முதியவர்களும் அனுபவிப்பது நிச்சயமானதாகவே இருக்கும்.

Pirruntha Imex
Lebensmittel ,Obst;Gemüse Aus Asien & Afrika
இல்லத்திற்கு வேண்டிய அனைத்து
மளிகைப்பொருட்களுக்கும் நாடுங்கள்
Tel:07031 678290
mob:0172 730 7425
Wilhelmstr.24 - 71034 Böblimgen



விநாயகா ஜோதிட நிலையம்
பண்டித் துர்க்கா பிரசாத்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்...!
Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655
PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

# தமிழ்த் தேசியத் தரப்புக்களை ஒரே புள்ளியில் இணைத்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரை கவனயீர்ப்புப் பேரணி!

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான கவனயீர்ப்புப் பேரணி [Pottuvil to Polikandi, P2P] இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி நடத்தப்பட்ட வாகன மற்றும் நடைப்பயணப் போராட்டம் ஆகும். நீதிக்கான இப் பயணத்திற்கு 'பொத்துவில் முதல் பொலிகண்டி' செல்லும் பாதை




பெயரிடப்பட்டது. இது பாரம்பரிய தமிழர் தாயகத்தின் இரண்டு தூர முனைகளையும், தெற்கே அம்பாறையில் பொத்துவில் முதல், வடக்கு முனையில் பருத்தித்துறையில், பொலிகண்டி வரையிலும் குறிக்கிறது.

இப்பேரணி கிழக்கிலங்கையின் தெற்கு முனையில் உள்ள பொத்துவில் நகரில் 2021 பெப்ரவரி 3 ஆம் நாளில் தொடங்கி வட மாகாணத்தின் வடமுனையில் அமைந்துள்ள பொலிகண்டியில் பெப்ரவரி 7 இல்



நிறைவடைந்தது. வட,கிழக்குத் தமிழ்-பேசும் குடிசார் சமூகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டத்திற்கு அனைத்துத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், மற்றும் முசுலிம் சமூகங்கள் தமது ஆதரவைத் தெரிவித்து பேரணியில் இணைந்து கொண்டன. தமிழ், முசுலிம் அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் உட்படப் பல்லாயிரக் கணக்கான மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் பௌத்த மயமாக்கல், நில அபகரிப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமை, ஈழப்போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டங்களுக்குப் பதிலளிக்காமை, கோவிட்-19 பெருந்தொற்றினால்




உயிரிழக்கும் இசுலாமியர்களின் உடல்கள் தகனம் செய்யப்படுதல், மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் சம்பளப் பிரச்சினை அடங்கலான அரச அடக்குமுறைகள் போன்ற பல்வேறு விடயங்களுக்கு நீதி கோரியும், தீர்வு கேட்டும் இப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டது. இப்பேரணியின் இறுதி நாளான ஏழாந்திகதி [07.02.2021] கிளிநொச்சியில் இருந்து ஆரம்பமான பேரணி பொலிகண்ண்டியைச் சென்றடைந்தது. போரணி நிறைவில் பத்து அம்ச கோரிக்கைகளை உள்ளடக்கிய எழுச்சிப்பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது.



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணி, தமிழ்த் தேசியத் தரப்புக்களை ஒரே புள்ளியில் திரட்டியமை, ஜனநாயகப் போராட்டங்கள் மீது இளைஞர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியமை, முஸ்லிம் மக்களை போராட்டத்தின் பங்காளிகள் ஆக்கியமை என்று பல்வேறு முன்மாதிரிகளைக் காட்டியிருக்கின்றது.

**படங்கள் : ஊடகவியலாளர்கள் குமணன், ஸ்டாலின், தமிழ் மதி மற்றும் டுவிட்டரில் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள்**












# மலையகத்தின் பெண்கள்...

மாலினி மோகன்
(கொட்டகலை– இலங்கை)

ஒவ்வொரு வருடமும் மார்ச் 8ஆம் திகதி பெண்களின் பெருமை பேசும் நாளாகும்.நியுயோர்க்க நகரில் 1857இல் மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆயிரக்கணக்கான வேலைப்பார்க்கும் பெண்கள் ஆண்களுக்கா நிகரான சம்பளம் வேண்டி போராட்டம் செய்து பொலீசாரால் ஓட விடப்பட்டனர். இன்னாளே பிற்காலங்களில் மகளிர்தினமாக கொண்டாடப்பட்டதாக வரலாறுகள் கூறுகிறது. இதனையடுத்து 1921 உலக மகளிர்தினம் கொண்டாடப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இந்நாளை சர்வதேச மகளிர் தினமாக ஐ.நா.சபை அறிவித்திருந்தது. பெண்களின் உரிமைக்காக குரல் கொடுக்க ஒரு மாதம், நாள் தேவைப்படுகின்றது என்றால் பெண்களுக்கான உரிமைகள் பற்றி அறிந்திருக்க தவறுகிறோமா?.. ஆம் என்றால் அது தவறில்லை.

உரிமை என்பது உறுதி செய்யப்பட்ட சுதந்திரமாகும். இவ்வாறு உறுதி செய்யப்பட்ட சுதந்திரம் பற்றி எம்மில் பலரும் அறிந்திருக்க தவறுகிறோம். சுதந்திரம் என்ற பெயரில் வேறு எதையோ சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறோம். உண்மையாக பெண்களின் உரிமைகள் பற்றி பெண்களை வலுப்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு மிகவும் கவனம் செலுத்தியுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச முன்னுரிமைகளுடன் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தவும் ஆவன செய்கிறது. மேலும் அபிவிருத்தியில் ஆண்களும் பெண்களும் சம பங்காளராக இருப்பதை உறுதி செய்ய பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்க உழைக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை.

இயற்கையியல் அறிஞர் சார்ல்ஸ் டார்வின் தியரியின் படி இவ்வுலகம் குரங்கிலிருந்து மனிதனாக பரிணாம வளர்ச்சி பெற்றதாக குறிப்பிடப்படுகிறது. ஆனாலும் அவ்வாறு வளர்ச்சியடைந்த மனித இனம் இன்று உலகையே தன் உள்ளங்கை ரேகைக்குள் பதுக்கி கொண்டு விஞ்ஞான அறிவியல் புரட்சியில் தொழிநுட்பத்தை தன்வசப்படுத்தி விண்ணில் குடியேறி அங்கும் தன் தடம் பதிக்க நித்தம் தன்னை புதுப்பித்துக்கொண்டிருக்கிறான். இப்படியான இவ்வுலகில் உண்மையில் தன்னை ஓர் இயந்திரமாகவே மாற்றிக்கொண்டிக்கிறாள் பெண். ஆணாதிக்க சமூக கட்டமைக்குள் சிக்கி அடிமைப்படுத்தப்பட்ட பெண்ணினம் இன்று பேசுபொருளாக மாறி வருவதை மறுப்பாறில்லை. இது ஆணாதிக்க சமூகம் தான் ஆனாலும் பெண்களின் வளர்ச்சியில் முட்டுக்கட்டைகளாக பல பெண்களே காணப்படுவதும் கண்கூடு.. உதாரணமாக மாமியார்,நாத்தனார். பெண் அதிகாரிகளுக்கு கீழ் வேலை செய்யும் ஏனைய பெண்களின் நிலமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். மனிதனை படைக்கும் பெண் தெய்வமே பெண்தான். இவ்வுலகுக்கு குழந்தைகளை புதுவரவுகளாக்கி மிளிரும் பெண்ணுக்கு ஈடிணை இல்லை என ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் அவசியம் அறிந்திருந்தல் வேண்டும். எப்போதும் எம் சமூகத்தில் பெண்கள் முதன்மையானவர்களாக காணப்படுகின்றனர். காரணம் உலக சனத் தொகையில் 49.5% மிக அதிகரித்துவரும் பெண்கள் தொகையாகும். இதில் இலங்கையில் ஆண்கள் 49.3% மும் பெண்கள் 50.7% வீதமுமாகும். ஆண்களை விட பெண்கள் 1.4% அதிகமாகும். இதிலும் குறிப்பாக மலையகத்தில் ஆண்கள் தொகை 47.8% ஆக பெண்கள் தொகை 52.2% ஆகும். இதுவே பெண்களின் முன்னேற்றத்திற்கான திறவுகோள்தான். இன்று உலகளவில் பெண்கள் விவசாயம், தொழிற்சாலை, ஏற்றுமதி, அழகியல்துறை, அரசியல், சமூகவலைதளம், விளையாட்டு, விண்வெளி, இராணுவம், சினிமா, காவல்துறை, கப்பல்துறை என எல்லா துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக நின்று ஈடுகொடுக்கின்றார்கள். மலையகத்தில் பெண்கள் பல துறைகளிலும் தனது பங்களிப்பை ஆற்ற தவறவில்லை அதற்கு பின்வருவன சான்று பகர்கின்றது.



மலையகத்தின் லபுக்கலையை சேர்ந்த சின்னக்கருப்பன் ஸ்ரீபவானி விளையாட்டுத்துறையில் சாதனை, அண்மையில் நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் அனுசியா சந்திரசேகரம் அரசியலில் தனி ஒரு பெண்ணாக 10000 வாக்குகளுக்கு மேல் பெற்று சாதனை, முன்னால் மத்திய மாகாண தமிழ்கல்வி அமைச்சரும், தற்போதய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதி தலைவருமான திருமதி. அனுசியா சிவராஜா அம்மையார் ஆண்களுக்கு நிகராக தன் பங்கை கல்வி, அரசியல் என இரு துறைகளிலும் தடம் பதித்துள்ளார். மேலும் தற்போதய மத்திய மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் திருமதி சத்யேந்திரா அம்மையார் , கல்வயமைச்சின் பெருந்தோட்டத்துறைக்கான முன்னாள் கல்விப்பணிப்பாளர் மகேஸ்வரி சபாரஞ்சன் றம்பொட அழகியல் கல்லூரியின் அதிபர் ஜே.டீ.வேதநாயகம் [ஆளுமை மிக்க வீரமங்கை] , காலஞ்சென்ற ஹட்டன் கல்வி வலயத்தின் முன்னாள் பணிப்பாளர் திருமதி .கணபதிபிள்ளை,கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரியின் முன்னாள் அதிபர் காலஞ்சென்ற திருமதி லக்ஷ்மி என பல மலையக பெண்மணிகள் கல்வித்துறையில் சாதித்தவர்கள். மேலும் கண்டியைச் சேர்ந்த நாகபூசணி கருப்பையா ஊடகவியல் துறையில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்ற பெண்மணியாக திகழ்கிறார்.



மேற்படி முக்கிய துறைகளில் பெண்கள் முன்னேறி இருப்பினும், பெண்களின் ஆற்றல்களை உச்சமாக பயன்படுத்துவதற்கு, தலைமைத்துவ பதவிகளில் பெண்களை அமர்த்துவதற்கு கலாசாரம் உட்பட பல்வேறு தடைகள் இன்னும் இருப்பதை தவிர்க்கமுடியாமல் உள்ளது. இதனாலேயே ஆண் தலைவர்களுக்கும், பெண் தலைவர்களுக்குமிடையே நடத்தையிலும், வினைதிறனிலும் வேறுபாடுகள் உள்ளனவா என மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் [Meta- Anatysis] அறிவு, திறன் , மனப்பாங்கு தொடர்பாக ஆண், பெண் தலைமைத்துவத்துக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை என நிரூபிக்கப்பட்டது. எனவே மகளிர் தினத்தில் மட்டும் மகளிரை தூக்கி நிறுத்தி கொண்டாடாமல், தினமும் கொண்டாடுவோம்.






06 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வேண்டும் என்பதற்காக அல்லாமல், தமது அரசியல் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான காய்நகர்த்தலாக இந்தத் தகவலை இப்போது – ஜெனீவாவுக்கான தயார்படுத்தல்கள் இடம்பெறும் பின்னணியில் வெளியிட்டிருக்கின்றார் ராப்.

ராப் தெரிவித்த இந்த விடயத்தை, ஜனாதிபதி அலுவலகம் முற்றாக நிராகரித்துள்ளது. இலங்கை அரச தரப்பு இதனை நிராகரிக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். ராப்பின் கூற்று எவ்வித அடிப்படையும் அற்றது என ஜனாதிபதி அலுவலகம் விளக்கமளித்துள்ளதாக, கொழும்பில் செவ்வாய்க்கிழமை வெளியான செய்திகளின்படி ராப்பின் கருத்தை இலங்கையின் ஜனாதிபதி செயலகம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

போர்க் குற்ற விவகாரங்களுக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் பதவி விலகி ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் இதுபோன்றதொரு அறிக்கையை வெளியிடுவதற்கான நோக்கத்தை ஜனாதிபதி அலுவலகம் கேள்விக்குட்படுத்தியுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு ஜெனீவா அமர்வுகளுக்கானது எனவும், இலங்கையை இழிவுபடுத்தும் பிரச்சாரத்தின் ஒட்டுமொத்த பகுதியாகும் எனவும் ஜனாதிபதி அலுவலகம் குற்றம் சுமத்தியுள்ளது.

ராப் அதிகாரத்தில் இருந்த காலத்தில், இலங்கை பாதுகாப்பு செயலாளருடன் இதுபோன்ற கலந்துரையாடலை மேற்கொண்டமை தொடர்பில் அறிக்கையிட்டாரா? அல்லது ராப் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் இந்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டாரா? என்பது குறித்து யுத்த குற்றங்கள் மற்றும் உலகளாவிய குற்றவியல் நீதி அலுவலகம் விளக்கமளிக்க வேண்டும் என ஜனாதிபதி அலுவலகம் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மனித உரிமை பிரச்சாரம் என்பது ஒரு இலாபகரமான தொழிலாகும் என ஜனாதிபதி அலுவலகம் குற்றஞ்சாட்டியுயள்ளது. மேற்கத்தேய நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றும் அந்தக் குழுக்கள் மற்றும் தனிநபர்களிடையே ஏராளமான நிதி வழங்கப்படுவதாகவும், முன்னாள் தூதுவர் ராப்பின் கருத்தானது ஈராக் மீது படையெடுப்பிற்கு வழிவகுத்த பேரழிவு ஆயுதம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்ட அமெரிக்க – பிரித்தானிய பிரச்சாரத்தை இலங்கைக்கு நினைவூட்டுவதாகவும், ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளதாக அது குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்களைக் கையாளும் வல்லரசு நாடு ஒன்றின் விஷேட தூதுவர், பாரிய போர்க் குற்றம் ஒன்றுக்கான வாய்மொழி மூலமான ஆதாரம் தம்மிடம் இருந்தும் ஒரு தசாப்த காலமாக அதனை மறைத்து வைத்திருந்தது ஏன்? இப்போது அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? இராஜதந்திர வட்டாரங்களில் தற்போது முக்கியமாக எழுப்பப்படும் கேள்வி இது!

வல்லரசுகளுக்கு இடையிலான பிராந்திய ஆதிக்கப்போட்டியில் தமிழ் மக்கள் மீண்டும் பகடைக்காய்களாகின்றார்கள் என்பதுதான் இதற்கான பதில்! அதேவேளையில், இது ஜெனீவாவை இலக்காக வைத்த ஒரு காய்நகர்த்தல் என்பதும் உண்மை.

2009 இல் போர் முடிவடைந்த பின்னர் இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டும் தீர்மானம் ஒன்றைத்தான் அப்போது மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியிருந்தது என்பது பலருக்கும் நினைவிருக்கும். இலங்கையைத் தம்மால் கையாள முடியும் என மேற்கு நாடுகள் அப்போது கருதியது இதற்குக் காரணமாக இருக்கலாம். போரின் போது கண்களை மூடிக்கொண்டு இலங்கையை ஆதரித்த மேற்கு நாடுகள், தமது பிராந்திய நலன்களுக்கு ஏற்றவகையில் இலங்கை செயற்படும் என எதிர்பார்த்தது இதற்கு காரணமாக இருக்கலாம். அதனால்தான் போர்க் குற்றம் என்ற விவகாரத்தை ஒரு அளவுக்கு மேல் மேற்கு நாடுகள் பயன்படுத்தவில்லை.

அதன்பின்னர்தான் இலங்கை சீனாவுடன் நெருக்கமாகச் செல்லத் தொடங்கியது. முதலீடுகள், பொருளாதார உதவிகள் என்ற பெயரில் சீனா இலங்கையில் பலமாகக் கால் பதிக்கத் தொடங்கியது. அதற்கு எதிரான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு போர்க் குற்றங்கள் என்ற ஆயுதத்தை ஜெனிவாவில் மேற்கு நாடுகள் பயன்படுத்தத் தொடங்கின. இப்போது, முழுஅளவில் சீனா இலங்கையில் நிலைகொள்ள முனையும் நிலையில், மேற்கு நாடுகள் புதுப்புது ஆயுதங்களை பயன்படுத்த வேண்டியவையாக உள்ளன. ஜனாதிபதியே இலக்கு வைக்கப்பட்டுள்ளமை இதனால்தான்.

இது போல மேலும் சில விடயங்களை மேற்கு நாடுகள் வைத்திருக்கலாம். அவை என்ன என்பது இலங்கைக்குத் தெரிந்தே இருக்கும். இவற்றைக் காட்டி இலங்கையை ஒரு இணக்கப்பாட்டுக்குள் கொண்டுவருவதுதான் மேற்கு நாடுகளின் இலக்காக இருக்குமே தவிர, தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பது அல்ல. தமிழ் மக்களுக்கு நீதியையும் தீர்வையும் பெற்றுக்கொடுப்பதுதான் மேற்கு நாடுகளின் உண்மையான நோக்கமாக இருந்தால், அதனை அவர்கள் எப்போதோ செய்திருக்க முடியும்.

ஆனால், இலங்கையை தமது வழிக்குக் கொண்டுவருவதற்கு மேற்கு நாடுகளுக்கு தமிழர்களுடைய பிரச்சினைதான் தேவையாகவுள்ளது! தமிழர்களை அவர்கள் ஒரு பகடைக்காயாகத்தான் பயன்படுத்துகின்றார்களே தவிர, நீதியை வேண்டிநிற்கும் ஒரு சமூகத்துக்கு அதனைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் எந்தளவுக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்பது கேள்விக்குறிதான். அதேவேளையில், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கான உபாயங்களை வகுத்துச் செயற்படுவதன் மூலமாகத்தான் தமிழ் மக்களும் எதனையாவது சாதிக்க முடியும்!

இப்போது இந்தியாவின் ஆதரவை இலங்கை நாடியுள்ள நிலையில், இன நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வைக் கொடுக்க வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக இந்தியா முன்வைக்கலாம். இந்தியா அதனைச் செய்யுமா? அல்லது தமது பிராந்திய நலன்களில் மட்டும் அக்கறையாக இருந்துவிடுமா?

---




23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

முன்னிலையில் இருக்கிறது. பொருளாதாரம் பணம் என்பதற்கு அப்பால் ஒரு பிரதேசத்தின் புவியியல் அமைவிடம் மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த காரணிகளின் இருப்பு தொடர்பாக அதீத கவனத்தினை குவித்தலே இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதை தடுத்து நிலையான வாழ்வியலை பேணிக்கொள்வதற்கான வழியாகும். இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தின் தீவகப் பிரதேசத்தில் காணப்படும் மண்படைகள் அகழ்ந்து எடுக்கப்படுமாக இருந்தால் கடற்கரைப்பிரதேசத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படும். கடலரிப்பு துரிதப்படுத்தப்படும், மண்ணரிப்பு மற்றும் இயற்கையான காற்றுத்தடைகளாக விளங்குகின்ற கண்டல்களும் பனைமரங்களும் வலுவிழப்பதோடு அவற்றின் அழிவிற்கும் வழிகோலும். புவியின் கண்ட மற்றும் சமுத்திரத்தகடுகளின் அமைப்பியலின்படி இந்துமா சமுத்திரத்தில் இலங்கைக்கு அண்மையில் காணப்படுகின்ற சமுத்திர தகடுகளில் வெடிப்புக்கள் ஏற்படுமாக இருந்தால் புவிநடுக்கம் மற்றும் சுனாமி அனர்த்தஙகளும் எழுவதற்கான சாத்தியஙகள் உள்ளன, இவ்வாறான ஒரு அனர்த்தம் எழுமாக இருந்தால் மன்னார் தீவின் இருப்பு என்பது கேள்விக்குறியாக மாற்றமையும்.

தவிர, கடல் மட்டத்தோடு ஒப்பிடுகிறபோது இயல்பிலேயே தாழ்நிலமாக காணப்படுகின்ற தீவகத்தின் வெள்ள அனர்த்த நிலமைகள் துரிதப் படுத்தப்படுவதோடு தரைக்கீழ் நீர்வளத்தின் இருப்பிலும் தாக்கங்களை செலுத்தும், அத்துடன் தீவகத்தின் தரைக்கீழ் நீர்ப்படுக்கைகளின் புவிச்சரிதவியல் அமைப்பினை நோக்குகின்றபோது இவை மண் படைகளுக்கு கீழ் சேமிக்கப்பட்டிருப்பவை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களின் நீர்ப்படுக்கைகளோடு ஒப்பிடுகிறபோது முற்றிலும் வித்தியாசமானவை. எனவே இக்கனிய மணல் அகழ்வானது கடல்நீர் ஊடுருவலுக்கு துணைபுரிவதோடு தரைக்கீழ் நீர் உவர் அடைவதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தும். வைகாசி ஆனி உட்பட்ட கோடைகாலங்களில் தீவின் நீர்வளம் குறைந்து செல்வதும் நீர்த்தட்டுப்பாடுகள் எழுவதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

**மக்களின் விழிப்புணர்வும் எதிர்வினையும்**

கோடையிலும் மாரியிலும் இயற்கை அனர்த்தங்களைச் சந்தித்து வாழ்கின்ற மக்களை இக் கனிய வள அகழ்வானது மேலும் பாதிக்கும் என்பதை அறிந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் பொது அமைப்புக்களும் இணைந்து நிகழ்த்திய கவன ஈர்ப்பு போராட்டத்தின் விளைவாக இக் கனிய வள அகழ்வு முயற்சிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

**எதிர்காலமும் இருப்பும்**

ஈழத் தமிழர்கள் சார்ந்து இருக்கக்கூடிய ஒவ்வொரு அடையாளங்களும் உருக்குலைக்கப்பட்டு கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்ற இந்தக் காலத்தில் வரலாற்றுக் காலத்துடன் தொடர்பு படுகின்ற நிலத்தையும் இந்த நிலத்தின் இயற்கை வளங்களது இருப்பினையும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஒரு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் அந்தப் பிரதேச மக்களின் இருப்பினை கேள்விக்குறியாக்கும் எனில் அவை தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மன்னார்த்தீவின் கனியவள அகழ்வு தொடர்பாக மீள் பரிசீலனை செய்து மக்களின் இயல்பான வாழ்வினை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளில் குறித்த பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் கவனம் எடுக்க வேண்டும் என்பது பொதுமக்களினதும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களினதும் வேண்டுகோளாக இருக்கிறது.



# நினைக்கத் தெரிந்த மனமே!

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

எவர் நினைவூட்டும் இல்லாமல் சுயமாக இயங்குங்கள். எங்கு புறப்படுகிலும் குறைந்தது 30 நிமிடத்திற்கு முன் தயாராகுங்கள். பதட்டம் குறையுங்கள். புதிய புதிய விடையங்களில் மனதைச் செலுத்துங்கள். பழையதையே திருப்பி திருப்பி இரைமீட்டாதீர்கள். பாசமலர் தேவதாஸ், வசந்தமாளிகை, பாபு, தில்லானாமோகனாம்பாள் போன்ற திரைப் படங்களை நடுசாமத்தில் எழுப்பிக் கேட்டாலும் ஒரு காட்சி குறையாது சொல்வீர்கள். ஆனால் நேற்று இரவு பார்த்த மாதவனின் ‘மாறா’வும் சூரியாவின் ‘சூரரைப்போற்று’ம் கனவுபோல் இருக்கும். புதியவற்றை மீட்டுப் பாருங்கள்.

இன்று கேட்ட செய்தியை நாளை நினைவு வைத்து சொல்லுங்கள். இப்படி நடந்தால் வீட்டுச் சாவி வெளிக் கதவில் தொங்காது. பாலும் பொங்காது. அப்படிப் பொங்கினாலும் சட்டி எரியாது. இல்லையேல் கஜனி சூரியாபோல் உடல் எங்கும் குறிப்பு எழுதிக்கொண்டு தன்னைத்தானே தேடவேண்டிய காலம்வரலாம். எனக்கு மறதி என்பதை மறக்காதவரை! எனக்கு மறதியில்லை என்பதையும் நம்புங்கள்.



13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# பெண்மை வர்ணம்

சுவையை உள்ளமைதியோடு உள்ளத்தில் ஊட்டினோம். மெல்ல மெல்ல மொட்ட விழ்ந்தது பெண்மை வர்ண வாசல்.

7 பருவ நிலைகளையும் , ஒரே மாணவி அபிநயிக்க வேண்டும். இயலோடு இயைந்த இசைக்கு, இயல்பாகவே அசையும் உடலுளத்தை சற்று அவதானித்துவிட்டு , நடன அமைப்பினை செதுக்க ஆரம்பித்தோம். பருவ மாற்றங்களை வேறுபடுத்த கட்டுக்கோப்பான ஜதிகள் இணைக்கப்பட்டன . நீண்ட பயிற்சியின் பலனை அபிநயத்தின் ஆழம் தெளிவுற மொழிந்தது. துளிர்விடும் அங்கங்களில் இயலும் இசையும் தோய்ந்து பொழிந்த நாட்டியத்தை வழங்கிட பாரதியே துணை நின்றார். தமிழை மூலதனமாக்கிய இம்முயற்சியில் முத்தமிழும் செறிந்த படைப்பாக வெளிவந்தமை படைப்பின் கருணையே.

நாட்டிய மார்க்கம் என்பதன் தொன்மைக்கு ஈடு கொடுக்க , தமிழின் தொன்மைக்குள் இருந்து ஒரு கரு பொருள் அமைந்தது எத்தனை கோடி இன்பம்.

---

# எனக்கு எது எது பிடிக்கும் என்று உனக்கும் அது தெரிவது எப்படி!

**என்னை அறிந்தாய், நீ என்னை அறிந்தாய்**

17 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இன்றைக்கு டிஜிடல் யுகம் எல்லாவற்றையும் சேகரித்து வைக்கிறது. அதை வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் காதலியை வசீகரிக்கலாம் என அது கணக்கு போடுகிறது.

காதலன் கனவில் கணக்கு போடுவான், டிஜிடல் யுகம் அல்காரிதம்களால் கணக்கு போடுகிறது. காதலன் எப்போது காதலியை பார்த்தோம் என காலக் கணக்கு போடுவான், டிஜிடல் ‘டேட்டா அனாலிசிஸ்’ செய்கிறது. அவளைப் பார்த்து என்னென்ன பேசினோம் என்பதை மயக்கத்தின் பள்ளத்தாக்கிலிருந்து காதலின் தேடி எடுப்பான், டிஜிடல் அதை ‘பிக் டேட்டா’ அனாலிசிஸ் என்கிறது. எதை வாங்கிக் கொடுத்தால் காதலி வியந்து போவாள் என காதலன் யோசிக்கிறான், டிஜிடல் அதை சேல்ஸ் ஸ்ட்ட்ராட்டஜி என்கிறது.

**ஐந்து டிப்ஸ் அது நம்மை பாதுகாப்பாய் வைத்திருக்கும்.**

1.தேவையற்ற ஆப்ஸ்களை அழித்து விடுங்கள், புளூடூத் வைஃபை போன்றவற்றை தேவையற்ற நேரங்களில் அணைத்து வையுங்கள்.

2. சந்தேகத்துக்கு இடமான எந்த லிங்கையும் கிளிக்காதீர்கள், போனுக்கு கடின பாஸ்வேர்ட் போட மறவாதீர்கள்.

3.பொது வைஃபைகளில் இணையாதீர்கள். அப்படியே இணைந்தாலும் பரிவர்த்தனைகள் நடத்தாதீர்கள். ஆட்டோ லாகின் வசதியை ஆன் செய்யாதீர்கள்.

4.என்கிரிப்ஷன் வசதி இருக்கின்ற மொபைல் நல்லது, ஆன்டி வைரஸ் கண்டிப்பாக இருக்கட்டும், ரிமோட் வைப் ஆப்ஷன் எப்போதும் கைவசம் இருக்கட்டும், ஓஎஸ் அப்டேட்களை உடனுக்குடன் நிறுவுங்கள்.

4.பழைய போனை விற்காதீர்கள், அழியுங்கள். ஜியோடேகிங் ஆப்ஷனை ஆஃப் செய்யுங்கள். செக்யூரிடி செட்டிங்ஸை எப்போதுமே அதிகபட்சமாக வையுங்கள்.

---

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சமமான தரையில் படுத்திருந்து கொண்டு இரு கால்களையும் மடிக்காமல் 90 பாகைக்கு உயர்த் வேண்டும். பின்னர் கால்களை மெதுவாக படிபடிப்படியாக பதித்து சமநிலைக்கு இறக்க வேண்டும். வயிற்றுத் தசைநார்கள் இறுகுவதை நீங்களே உணரக் கூடியதாக இருக்கும். நீண்ட நேரம் நிற்க வேண்டியது உங்கள் தொழில் முடிறாயாக இருந்தால் அதற்கு மாற்றாக நீந்துவது அல்லது ஓடுவது போன்ற பயிற்சிகளை எடுப்பது உதவும்.

## மன அழுத்தம்

உடலுக்கான அதீத வேலைகள் வலியைக் கொண்டுவருவது போலவே மன அழுத்தமும். மன உடல் வலி, நாரி வலியை கொண்டுவரலாம். மன அழுத்தம் இருக்கும் போது கோபம் பதற்றம் எரிச்சலுறும் தன்மை போன்றவை ஏற்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் அனுபவத்திலும் உணர்ந்திருப்பீர்கள்.

அதே போலத்தான் உடல் வலிகளும் ஏற்பட வாய்ப்புண்டு. மனஅழுத்தம் ஏற்படும் போது உடலின் தசைநார்கள் இறுக்கமடைகின்றன. உதாரணமாக இடுப்பெலும்பின் தசைநார்கள் இறுக்கமடைகின்றன. இதனால் தன்னையறியாமலே இடுப்பு பகுதி முன்நோக்கி சற்று சரிவடைகிறது. இது நாரிவலியைக் கொண்டு வரும். மனஅழுத்தமானது உடலைப் பாதிப்பதைத் தடுப்பதற்கு மனஅமைதியைக் காக்க முயல்வதுடன் உடல் பயிற்சிகளிலும் ஈடுபட வேண்டும்.

## புகைத்தல்

புகைத்தல் உடலாரோக்கியத்திற்கு தீங்கானது என்பதை எல்லோருமே அறிவோம். ஆனால் அது முதுகு வலியையும் கொண்டுவருவதைப் பற்றி சிந்தித்திருக்கிறோமா. புகைத்தலானது குருதிக் குழாய்களை (நாடிகளை) சுருங்க வைத்து குருதி ஓட்டத்தைக் குறைத்து உறுப்புக்களை நலிவடையச் செய்கிறது. அவ்வாறு முள்ளந்தண்டு எலும்புகள் அவற்றை இணைக்கும் இடைத்தட்டம் ஆகியவற்றிக்;கான குருதி ஓட்டத்;ததை குறைவடையச் செய்யும் இதனால் அதிகரித்த வேலைப் பளுவால் அவற்றில் ஏற்படும் சிதைவுகள் குணமடையமல் மோசடைகின்றன. இது வலியை ஏற்படுத்தும். எனவே புகைத்தலை நிறுத்த வேண்டும். இதைத் தவிர புற்றுநோய்கள். மாரடைப்பு, பக்கவாதம் போன்ற பல நோய்களுக்கு புகைத்தலே காரணம் என்பதை மறந்துவிடக் கூடாது.

# நாரிப்பிடிப்புகள் - பாரம் தூக்குவதனால் மட்டும்தானா வருகின்றன?

## தசைகளை வலுப்படுத்தும் பயிற்சிகள்

முதுகுவலி நாரி வரி ஏற்படாமல் தடுக்க வேண்டுமாயின் அவற்றிற்கான தசைகளுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். முக்கியமாக முதுகுப்புற தசைகள், வயிற்றறைத் தசைகள் மற்றும் இடுப்புத் தசைகளை வலுப்படுத்த வேண்டும். அதை சரியாக செய்வது எப்படி என்பதற்கு உடற் பயிற்சி ஆசிரியர் ஒருவரிடம் ஆலோசனைகளை கேட்டு அறிய வேண்டும். தவறான பயிற்சிகள் வலி மேலும் மோசமடைய வாய்ப்பு உள்ளது என்பதை மறக்கக் கூடாது. எனவே நீங்கள் முதுகுவலி நாரிவலி ஆகியவற்றால் பாதிக்கப்படுபவராயின் 'எனக்கு ஏன் இந்தப் பிரச்சனை? நான் பாரம் தூக்கவில்லையே என மூளையைக் குழப்பாமல் உங்கள் நாளாந்த செயற்பாடுகள் எதாவது அதற்குக் காரணமாக இருக்கலாமா என மாற்று வழியில் யோசியுங்கள். விடையும் கிடைக்கும். நலமும் நாடி வரும்.




மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)


திரு.இராமசாமி (முன்னாள் அதிபர்)


திரு.என்.கணேசபிள்ளை (முன்னாள் அதிபர்)





திரு.ஆ.சி.நடராஜா ( முன்னாள் அதிபர்)


திரு.கே.கனகராஜா (முன்னாள் அதிபர்)

# பவள விழாக்காணும் வயாவிளான் மத்திய கல்லூரியும், அதன் ஆணிவேர்களாக நான் கண்ட அதிபர்களும்

**எமது** கல்லூரி வரலாறு காணாத பேரழிவுகளுக்குட் பட்டு, அதன் செல்வச்செழிப்பு பௌதீக வளங்கள், ஆசிரிய, மாணவ வளங்கள் முதலியவற்றை இழந்து நின்ற போதிலும் இன்றும் எமது கல்லூரி, யாழ்மாவட்டத்தில் பட்டொளிவீசி மிளிர்ந்து மிடுக் கோடு நிற்கின்றதென்றால் அது ஆச்சரியத்துக்குரியதே! கல்விச் சமூகத்தை வாழ்விக்க வல்ல அதிபர்கள் எமது கல்லூரியைப் பொறுப்பேற்றமையே இதற்கு மூலாதாரம் எனலாம்.

ஆறு இடப்பெயர்வுகளுக்கு முகம் கொடுத்த எமது கல்லூரி பவளவிழாக் காண்கின்ற இந்நே ரத்தில் எனது மாணவப் பராயத்தில் கல்லூரியை வளர்த்தெடுத்தவர் களை நினைவுகூர கடமைப்பட்டுள் ளேன். 1976 – 1985 காலப்பகுதிகளில் வயாவிளான் மத்திய கல்லூரி பல்துறை களிலும் முன்னேற்றமான ஒரு கிராமப் பாடசாலை யாக இயங்கி நின்றது.


திரு.வி.ரி.ஜெயந்தன் ( தற்போதைய அதிபர்)

இந்த முன்னேற்றங் களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல பெருமை யோடு பேசப்படுபவர் மதிப்புக்குரிய அதிபர் திரு.இராமச ாமி ஐயா அவர்களே! அவர் தம் அயராத உழைப்பும் கட்டுக்கோப்பான ஆளுமையும் நேர்மைத்திறனும் நெஞ்சுறுதியும் இக்கல்லூரியின் வரலாற்றில் முத்தி ரையைப் பதிக்க வைத்தது. மாணவர்களின் முதன் மைக் கல்வியோடு, தொழில்சார் கல்வி, விளை யாட்டுத்துறை போன்றவற்றின் விருத்தியிலும் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டது மட்டுமல் லாது மாணவர்களுக்குத் தேவையான ஆய்வுகூடம் முதற்கொண்டு பலமாடிக் கட்டிடங்களை அமைத்தும் யாழ் குடாநாட்டிலேயே பெருநிலப்பரப்பினைக் கொண்ட பாட சாலை என்ற பெருமையை பெற்ற எம் பள்ளி வளாகத்தைச் சுற்றி புறமதில்களை அமைத்தும் சிறு பல்கலைக்கழக அமைப் பிற்கு உயர்த்தி மாணவர்களைப் பல்கலைக் கழகம் புகவைத்த பெருமை இவரையே சாரும்!

இத்தகைய உன்னத நிலையில் இருந்த இவர்தம் காலத்தில் இக் கல்லூரியில் இணைந்ததையிட்டுப் பெருமகிழ்வடைக்கின்றேன்.

1985 களில் அதிபர் திரு.கணேச பிள்ளை அவர்களிடம் கையளித்து திரு.இராமசாமி ஐயா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றார். கணே சபிள்ளை அதிபர் காலத்தில் எமது கல்லூரி ஒரு பாரிய இடப் பெயர்வை சந்திக்க வேண்டிய நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டது. விடுதி மாணவர்களின் கைது, அனைத்து பௌதிக வளங்களி னதும் இழப்பு என ஒரே குழப்ப மான நிலையைச் சமாளிப்பதே அவரது முதல் கடமையாக இருந் தது. மாணவர்களை இராணுவத்திட மிருந்து மீட்பது பெரும் பொறுப்பாக அவருக்கு இருந்தது. இடம்பெயர்ந்த எமது கல்லூரியை புன்னாலைக்கட்டு வன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை யில் தற்காலிகமாக இயங்க வைத்ததுடன் அவரும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இக்காலப்பகுதியிலேயே எமது கல்லூரி வரலாற்றில் மிகவும் வேதனையான காலம், நகர்ப்புற பாடசாலைகளை நாடி மாணவர் கள் செல்லல், இராமசாமி அதி பரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட திறமையான ஆசிரியர் குழாத்தி னரின் வெளியேற்றம் போன்றவை எமது கல்லூரியின் கல்வித்தரத்தை ஆட்டம் காண வைத்தது. பல்கலைக் கழக அனுமதிகள் பூச்சிய நிலையை எட்டியன.

**“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண்விடல்”**

என்ற வள்ளுவனின் வாக்கை மெய்ப்பிக்கும் வகை யில் எமது கல்லூரியில்


Dr. வேலுப்பிள்ளை கண்ணதாசன் (Oxford/Uk)

30 ஆம் பக்கம் பார்க்க...









மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...




## மஹா வித்தியாலயமும் வயாவிளான் மத்திய கல்லூரியும், அதன் ஆணிவேர்களாக நான் கண்ட அதிபர்களும்

அக்கறையும் ஆளுமையும் அஞ்சா நெஞ்சும் நேர்மைத்திறனும் படைத்த சமூகவியல் ஆசான் திரு.ஆ.சி.நடராஜா அவர்களிடம் இக் கல்லூரியின் பொறுப்பு வலிந்து ஒப்படைக்கப்பட்டது. கல்லூரியை பொறுப்பேற்ற ஐம்பது நாட்களுக்குள் தொடர் போராட்டங்களின் மூலம் இவர் எமது கல்லூரியை மீண்டும் சொந்த

இடத்துக்குக் கொண்டு சென்றார். எதுவித கட்டடங்களும் இல்லாமல் காடாக இருந்த எமது கல்லூரி வளாகத்தைச் சுத்தம் செய்து இயங்க வைத்தார். இவரது பலத்தையும் ஆளுமையையும், பாடசாலைச் சமூகமும், கல்வித் திணைக்களமும் கண்டு வியந்தன. போர்க்கால சூழலில் குரும்பசிட்டி பிரஜைகள் குழுவின் செயலாளராகவிருந்து இவர் செய்த தொண்டுகளைக் கண்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் இவர் கேட்ட அனைத்து உதவிகளையும் இக்கல்லூரிக்குச் செய்து கொடுத்தன. அத்துடன் தனது தனியார் கல்வி நிலையைத்தை மூடி முப்பத்திரண்டு சோடி வாங்கு மேசைகளையும் அன்பளிப்புச் செய்து கல்லூரிக்காக உதவ முன்வந்தார்.

துரதிஷ்டவசமாக மீண்டும் எமது கல்லூரிக்கு அகதி அந்தஸ்து அளிக்கப்பட்டது. மீண்டும் இடப்பெயர்வு, 1990 களில் வெறுங்கையோடு சென்ற எம்மை உரும்பிராய் இந்துக்கல்லூரி தத்தெடுத்தது. ஆனால் எமது அதிபரோ பல்வேறு நெருக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டார். கல்வி அதிகாரிகளினால், ஒரு சிறுதொகை மாணவர்களுக்காக இந்த பாடசாலையை நடத்த முடியாது என்றும், பாடசாலையை மூடும் படியும், ஆசிரியர்களை இடம்மாற்றம் செய்யும் படியும் வலியுறுத்தப்பட்டது. எமது கல்லூரியை அதனது தனித்தன்மையுடன் தொடர்ந்து இயங்க வைக்க அதிபர் அவர்கள் அவரது பாணியில் திடசங்கற்பம் பூண்டார். 90 களில் கணித விஞ்ஞான பிரிவுகளை மூடும்படி கல்வித்திணைக்களம் கட்டளையிட்டது. அதனை அதிபர் கருத்தில் கொள்ளவில்லை. தற்துணிவோடு தொடர்ந்து வகுப்புக்களை நடாத்தி வந்தார். என்னையும் கூட வலுக்கட்டாயமாக நிறுத்தி, என்னுடைய விடுகைப்பத்திரத்தை தர மறுத்து, யாழ் இந்துக்கல்லூரிக்குச் சென்ற என்னை மீண்டும் வரவழைத்தார். கல்வித்திணைக்களம் இராசாயனவியல், பௌதீகவியல் ஆசிரியர்களைத் தரமறுத்தது. பிரத்தியேக ஆசிரியர்களாக புதிதாக நியமித்து கணித, விஞ்ஞானப் பிரிவுகளை நடாத்தினார். மீண்டும் மிடுக்குடன் கல்வித்தரம் உயர்ந்தது. மாணவர்தொகை அதிகரித்தது. இன்னொரு இராமசாமிக் காலம் உதயமாகியது. இவ்வாறு அவர் செயற்படாமலிருந்தால் அன்றே எமது கல்லூரி இராமசாமி ஐயா காலத்தில் உயர்த்தப்பட்ட 1AB தரத்திலிருந்து 1C தரத்துக்கு தரம் இறங்கியிருக்கும். மாணவர்தொகை அதிகரிப்பினால் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு இடைஞ்சல் விளைவிக்கக்கூடாதென்று கருதிய அதிபர் அவர்கள், உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்னுள்ள தனியார் காணியில் தற்காலிக குடிசைகளை அமைத்து எமது கல்லூரியை இயங்க வைத்தார். இதற்கு ஐந்து லட்சம் தேவையென மதிப்பீடு செய்தார். ஆசிரியர்கள் அசந்து விட்டனர். அதிபர் அவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டார். தானே மேடையேறி நாடகம் நடித்து நிதிசேகரிக்க முற்பட்டார். பெற்றோர் நலன் விரும்பிகளிடம் பனை மரங்களைப் பெற்றார். போராளிகளிடம் தளபாடங்களைப் பெற்றார். 58 மாணவர்களுடன் ஆரம்பித்து உயிருக்கு ஊசலாடிய பாடசாலையை திறம்பட நடத்தினார். அவரது அயராத உழைப்பினால் பக்கவாத நோய்க்கும் உள்ளானார்.

வெளிநாட்டு வாழ் பழைய மாணவர்களுடன் தொடர்புகொண்ட போது சுவிஸ் நாட்டில் வாழும் குப்பிளானைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரபாகரன், வயாவிளானைச் சேர்ந்த நலன் விரும்பி நந்தினி வேலுப்பிள்ளை போன்றோர்களின் நிதிதிரட்டலினால் ஏறத்தாழ 10 லட்சம் ரூபா வரை கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பெற்றார். யாழ் மாவட்ட பிரபல பாடசாலைகளுக்கு நிகராக பரீட்சை பெறுபேறுகளை உயர வைத்து சாதித்தும் காட்டினார். பல மாணவர்கள் அதிதிறமை சித்தி பெற்று சாதனை படைத்தனர். ஐயாத்துரை சதானந்தன் போன்றோர் அகில இலங்கை ரீதியிலும் இடம்பிடித்தனர்.

இவ்வாறான நிலையில் மீண்டும் 96களில் இடப்பெயர்வு, தென்மராட்சியில் தற்காலிகமாக எமது கல்லூரியை இயங்க வைத்து மீண்டும் உரும்பிராயில் எமது கல்லூரி இயங்கியது. 12 பரப்புக் காணியில் அமைத்த இல்லத்தில் 1350 மாணவர்களோடு வீறுநடை போடச்செய்தார். முன்னெப்போதும் இக்கல்லூரி கண்டிராத சாதனையை கீற்றுக்கொட்டில்களில் புழுதி படிந்த தரையில் படித்த மாணவச் செல்வங்கள் பத்தாண்டுகளில் நிகழ்த்திக் காட்டினர். 50 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுந்தனர். பத்திரிகைகள் கூட ஆசிரியர் தலையங்கங்கள் எமது பாடசாலை பற்றியே எழுதின. சோதனைக் காலத்திலும் சாதனைக்குரிய திறமையான அதிபராக விளங்கி 2001 ஆம் ஆண்டு திரு.கனகராஜா அதிபரிடம் கையளித்து ஓய்வு பெற்றார்.

யுத்த சூழலில் எமது கல்லூரியை யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு நிகராக கட்டியெழுப்பிய திரு.ஆ.சி நடராஜா அவர்களின் காலமும் இன்னொரு பொற்காலம் என்றே போற்றப்படுகின்றது. பூச்சியத்தில் இராச்சியம் அமைத்தவர் என்ற பெருமையை எம் அதிபர் பெற்றார்!

திரு.கனகராஜா அதிபர் அவர்களும் தனது முந்தைய அதிபர்களின் அடியொற்றி கல்லூரியை கல்வியிலும், இணைபாடவிதான செயற்பாடுகளிலும், விளையாட்டத் துறைகளிலும் சிறந்த பாடசாலையாக மிளிர வைத்தார். பாடசாலையின் தரத்தை சிறிதும் மங்காது பேணிக் காத்து சிறந்த நிர்வாக அதிபருக்கான குரு பிரதீபா பிரபா என்ற ஜனாதிபதி விருதைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.

திரு.நடராஜா, கனகராஜா அதிபர்களின் அயராரத முயற்சியால் மீண்டும் எமது கல்லூரி தனது சொந்த இடத்துக்கு நிரந்தரமாகச் சென்று தலை நிமிர்ந்தது. இன்று அதிபர் திரு.ஜெயந்தன் அவர்கள் காலத்தில் மிடுக்கோடு பவளவிழாக்கண்டு நிற்பதையிட்டு பூரிப்படைகின்றேன். உலகமெல்லாம் பரந்து வாழும் பழைய மாணவர்களின் பெரும் பங்களிப்பு எமது கல்லூரிக்கு இன்று போய்ச் சேர்ந்துள்ள நிலையில் கல்லூரியின் தரம் கல்வியிலும் இதர செயற்பாடுகளிலும் முன்னேற்றம் கண்டு மேலும் சிறப்புற மனதார வாழ்த்துகின்றேன்!

வாழ்க எமது கல்லூரியின் புகழ்! எமது கல்லூரிச் சமூகம் உரும்பிராய் மண்ணுக்கும் புன்னாலைக்கட்டுவன் மண்ணிற்கும் என்னென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது!




## ஏழாம் ஆண்டு நினைவு நாள்

**தனபாலசிங்கம் தியாகராஜா. (எழுவைதீவு)**

**பிறப்பு: 24.04.1961 இறப்பு: 01.03.2014**

**13.03.2021 சனிக்கிழமை திதி வளர்பிறைப் பிரதமை**

காத்திருக்க நேரம்இல்லைக்
காலங்களுக்கு!
கண்ணீருடன் கடந்ததே ஏழு வருடங்கள்!
விடை இல்லா வினாக்களோடும்,
வலியுடனும் விழியோரம் வழிந்தோடும்
கண்ணீருடனும் கனமானது இதயம்!

புன்னகை பூத்தமுகம்கான!
புகழோடுபுனிதக் குரல்கேட்க!
உங்களுக்கய் எண்ணியது பல உண்டு!
எங்களுக்காய் எஞ்சியது ஏமாற்றமே!!!

பாசத்துடன் அரவணைத்த என் அப்பா!
பாதியிலேயே என்னைவிட்டுப்
போனதெங்கே?
ஈசன் பாதக்கமலங்களில்த்
தெய்வத்திருமகனாய் வீற்றிருந்து
அம்மாக்கும் எனக்கும் துனைநின்று
வழிநடத்துங்கள் அப்பா!!!!

உங்கள் ஆத்மா சாந்திக்காய்
வேண்டி நிற்க்கும்
மனைவி, மகள், பாரதா கார்த்தனா
(மாவிட்டபுரம்) ஈசன்



## 20 ஆவது ஆண்டு நினைவுப் பூக்கள்!


அன்பின் திருவுருவே! அருமைக் கஜனியம்மா!
சொல்லாமல் நீ பிரிந்த துயர் இன்னும் நீங்கவில்லை.
ஆண்டுகள் இருபது ஆனதம்மா இப்போது!
அருமைக் கஜனி! உந்தன் அன்புமுகம் எங்களுக்குள்
நிலையாகி உந்தன் நினைவுகளை வளர்க்கிறது!
என்றும் பிரியாத எமதருமைக் கண்மணியே!
சக்திபதம் நீயடைந்து சாந்தியுறும் நாளிதனில்
கண்ணீரை உந்தனுக்குக் காணிக்கையாக்குகிறோம்!
அன்பே நீ அமைதி பெறு ஆதிசக்தி நிழலினிலே!

என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, அக்கா, அத்தான்
எஸ்.தேவராஜா (இங்கிலாந்து)

**செல்வி கஜனி தேவராஜா**
(பிறேமன், ஜெர்மனி)
மலர்வு:12.05.1988
பிரிவு 16.03.2001



# ஏப்ரலில் 'கர்ணன்'




தனுஷ் நடிப்பில் இயக்குனர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவாக்கிய கர்ணன் திரைப்படத்தின் படப்பிடிப்பு கிட்டதட்ட முடிவடைந்து தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. விரைவில் இப்பணிகள் முடிவடையவுள்ளன.வரும் ஏப்ரலில் கர்ணன் படம் தியேட்டரில் வெளியாகும் என இப்படத்தின் தயாரிப்பாளர் எஸ்.தாணு உறுதிப்படுத்தியுள்ளார்.

# ஜேம்ஸ் பொண்ட்டாக விரும்பும் ஸ்பைடர் மேன்




பிரிட்டிஷ் உளவாளி ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்தில் எதிர்காலத்தில் நடிக்கத் தனக்கு விருப்பம் இருப்பதாக நடிகர் டொம் ஹாலண்ட் கூறியுள்ளார்.மார்வல் திரைப்படங்களில் ஸ்பைடர் மேன் கதாபாத்திரத்தில் பிரபலமானவர் டொம் ஹாலண்ட். 5 அடி 6 அங்குலம் உயரம் இருக்கும் ஹாலண்ட், தான் உயரம் குறைவான 007ஆக இருப்பேன் என்று கூறியுள்ளார்.



திரைப்படங்களை விரும்பும் ஒரு பிரிட்டிஷ் இளைஞனாக எனக்கு ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்தில் நடிக்க விருப்பம்தான். அதை இங்கே அனைவரின் காதுகளுக்கும் எட்டும்படி சொல்லிக் கொள்கிறேன். அந்த உடையில் நான் நன்றாக இருப்பேன். உயரம் குறைவான ஜேம்ஸ் பொண்டாக இருப்பேன்' என்று கூறியுள்ளார். கடைசியாக செப்டம்பர் மாதம் நெட்ஃபிளிக்ஸில் வெளியான 'தி டெவில் ஓல் தி டைம்' திரைப்படத்தில் டொம் ஹாலண்ட் நடித்திருந்தார். இதன் பிறகு 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்' இயக்குநர்கள் ரூஸோ சகோதரர்களின் 'செர்ரி' என்கிற படத்தில் நடித்துள்ளார். மேலும், 'கேயாஸ் வாக்கிங்' என்கிற அறிவியல் புனைவுத் திரைப்படத்திலும் நடிக்கிறார். 'ஸ்பைடர்மேன்' மூன்றாம் பாகத்தில் இதற்குப் பிறகு நடிக்கவிருக்கிறார்.

# வில்லியாகும் தீபிகா படுகோனே

பொலிவுட்டில் வெளியான மிகச் சிறந்த அதிரடி ஆக்ஷன் படம் என்றால் அது 'தூம்' தான். அதிரடி ஆக்ஷன், விறுவிறு திருப்பங்கள், நடனம், இசை, கண்ணை கவரும் காட்சிகள் என அனைத்து வகையிலும் ரசிகர்களை கவர்ந்த படம் தூம்.தூம் படத்தின் 3 பாகங்களும் பெரு வெற்றி பெற்றன. இதனால் இதன் அடுத்த பாகமும் தயாரிக்கப்படவுள்ளது.இப்படத்தில் முக்கிய வேடங்களில் அபிஷேக் பச்சனும், உதய் சோப்ராவும் நடிக்கவுள்ளனர். இவர்களுக்கான ஜோடிகளை தேடி வேலை மும்முரமாக நடந்து வருகிறது.தூம் முதல் பாகத்தில் வில்லனாக ஜோன் ஆப்ரஹாம் நடித்தார். தூம் 2 ல் ஹிருத்திக் ரோஷனும், தூம் 3 ல் அமீர் கானும் நடித்தனர். தற்போது புதிய முயற்சியாக தூம் 4 ல் வில்லனுக்கு பதில் வில்லியை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.வில்லன்களாக முன்னணி நாயகர்களை நடிக்க வைத்ததை போன்று, இந்த முறை வில்லியாக முன்னணி நாயகியான தீபிகா படுகோனேவை நடிக்க வைக்க தான் முயற்சி நடந்து வருகிறது.



# 'வாடிவாசல்' திறக்கிறது




இயக்குனர் வெற்றிமாறன் இப்போது, சூரி நாயகனாக நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார். எழுத்தாளர் ஜெயமோகனின் துணைவன் என்ற கதையை மையமாக வைத்து இந்தப் படத்தை இயக்குகிறார். இந்தப் படத்தை அடுத்து சூர்யா நடிக்கும் வாடிவாசல் படத்தை இயக்குகிறார் வெற்றிமாறன். சி.சு.செல்லப்பாவின் வாடிவாசல் நாவலை மையமாகக் கொண்டு உருவாகும் படம் இது.கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஜூலை மாதம் தொடங்க இருக்கிறது. அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர். இதில் நடிகர் சூர்யா, இரண்டு வேடங்களில் நடிப்பதாகக் கூறப்படுகிறது.



# EurAsian-Tour

VALUTRANS MONEY TRANSFER

EurAsian-Tour Further Str.146 41462 Neuss

Rishi Ganeshamoorthy | Rishi 0174 96 44 965

Tel:02131 7387 83 Fax:02131 73 87 84 | info@eurasian-tours.com



# Jasmine Silk House



என்றும் எம்முடன் இணைந்து
இருங்கள். உங்களுக்கு சேவை
செய்ய காத்திருக்கிறோம்.
தொடர்பு இலக்கம்: 01731937325

ஆடைகளின் ராணி

Tel: 02102 844744
HP: 0173 1937 325

"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen



# Asia Bazar

துரித பணமாற்றுச்சேவை

ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...

Ria Money Transfer | VALUTRANS MONEY TRANSFER | MoneyGram

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach

Tel: 02161 208303 | Fax: 02161-309282



# PIRRUNTHA SILKS

Exclusive Indian Clothing & Jewelry


Ludwig str.87a
70197
Stuttgart

தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்

Stuttgart நகரில்...



Tel: 0711 615 8976/ 0170 334 4059



# Shakthy Foundation

துவாரகமாய் முதியோர் இல்லம்

SHAKTHY FOUNDATION

தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)

சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் நிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

Shakthy Foundation
Acc No:
173020027815
HATTON
NATIONAL BANK
Trincomale,
Srilanka

Shakthy Foundation T/M/Chennaiyoor, Central College, Mutur, Trincomale, Srilanka. | S.Rajathurai: +94 77 338 4637



புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!

# SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main



India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A

STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.

StaR Impex : Inh : K.Sivasubramaniam

Tel: 0231 860 26 96

AGAM அ.க.ம் | Nila | Double Horse | Aachi | BTM | Rabeena

Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698